ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

கார்த்திகை

சிறப்பு மலர்

நவம்பர் — 1979



ஸ்ரீராமகிருஷ்ண மடம்,

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

தற்கால மக்களின் ஆன்மிக மறுமலர்ச்சிக்கு ஏற்ற வகையில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர் காட்டிய வழியில் மத உண்மைகளை இந்த மாதப் பத்திரிகை வெளியிட்டு வருகிறது.

சந்தா விவரம்

வருட சந்தா	ரூ. 12
டெபாசிட் சந்தா	ரூ. 150
தனிப்பிரதி	ரூ. 1-20

டெபாசிட் முறை

ஆண்டுதோறும் ரூ. 12 சந்தா செலுத்திப் புதுப்பிப்பதற்குப் பதிலாக ரூபாய் 150 டெபாசிட் செய்துவிட்டால், தொடர்ந்து மாதந்தோறும் ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் பத்திரிகை வந்து கொண்டிருக்கும். பத்திரிகை வேண்டாம் என்று (குறைந்தது ஐந்து வருடங்களுக்குப் பிறகு) கருதும்போது டெபாசிட் செய்த முழுத்தொகையாகிய ரூபாய் நூற்று ஐம்பதையும் திரும்பப்பெற்றுக் கொள்ளலாம்.

டெபாசிட் சந்தாவை மொத்தமாகவோ, பகுதி பகுதியாகவோ, மாதம் ரூ. 10 ஆகவோ செலுத்தலாம்.

வேண்டுகோள்

1. மக்களுக்கு உணவு உடை வழங்கி உடல் சம்பந்தமான தேவைகளைப் பூர்த்தி செய்வது மிகவும் நல்ல உதவி ஆகிறது. கல்வி, தொழில் முதலியவற்றைக் கற்பித்து ஜீவனோபாயத்திற்கு வழிவகுத்துத் தருவது அதனினும் மேலான சேவை ஆகிறது. ஆன்மிக சம்பந்தமான நூல்களைப் படித்தும் கேட்டும் ஆத்மசாதனங்களில் ஈடுபடச் செய்வது தலையாய கைங்கரியமாகிறது. தானங்களிலேயே மிகச் சிறந்த தானம் ஞானதானம் என்பது ஆன்றோர் கண்ட உண்மை.

வாசக அன்பர்கள் தங்களின் சந்தாவைச் செலுத்துவதுடன், மேலும் தமது நண்பர்கள் சிலரையும் சந்தாதாரர்களாகச் சேர்த்துத் தருவது ஒரு நல்ல தொண்டாகும். இந்தப் புனித மதத் தொண்டில் சிரத்தையுடன் ஈடுபடுவது நமக்கும் மற்றவர்களுக்கும் பெருநலன் தரும்.

2. அன்பர்கள் தங்களின் தெய்விகக் கைங்கரியமாக கல்வி ஸ்தாபனங்கள், சத்சங்கங்கள் முதலியவைகளுக்குப் பத்திரிகை போய்க்கொண்டிருக்கும்படி செய்யலாம். இது ஒவ்வொரு மாதமும் தாங்கள் அளிக்கும் மேலான நன்கொடையாகவும், தங்களை ஞாபகப்படுத்தும் சிறந்த வெகுமதியாகவும் அமையும்.

3. அன்பர்கள் தங்களால் இயன்ற ஒரு சிறிதளவிற்காகிலும் புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துத் தரும் விஷயத்தில் முயற்சி செய்வார்கள் என்று நம்புகிறோம். குறைந்தது மூன்று சந்தாதாரர்களையாவது சேர்த்துத் தருவது மிகப் பெரிய உபகாரமாக இருக்கும். இதன் மூலம் இன்றைய சமுதாயத்தின் சூழ்நிலையில் நல்ல கருத்துகள் வளர அரும்பெரும் தொண்டு செய்தவர்களாகிறீர்கள்.

4. புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பி வைக்கும்போது புதிய சந்தா என்று குறிப்பிட்டு எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பழைய சந்தாதாரர்கள் தமது கடிதப் போக்குவரத்துகள் எல்லாவற்றிலும் சந்தா எண்ணையும் முழு விலாசத்தையும் அவசியம் குறிப்பிட்டு எழுத வேண்டுகிறோம்.

தொலைபேசி :
71231

விவரங்களுக்கு :
ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் காரியாலயம்
ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர் : சென்னை-600 004

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

தொகுதி—59	நவம்பர் 1979	இதழ்—11

பொருளடக்கம்



அன்பு நெஞ்சங்களுக்கு இம்மலர் காணிக்கை

பாரத நாட்டுத் தத்துவ ஞானத்தைப் பாரெங்கும் பரப்பிய நவயுக நாயகரும், தெய்வத் தொண்டையும், மக்கள் தொண்டையும் இணைத்துப் புதிய சகாப்தத்திற்கு வித்திட்ட வீரத் துறவியுமான விவேகானந்த வள்ளலைப் பின்பற்றி வாழும், வாழ முயலும் அன்பு நெஞ்சங்கள் அத்தனைக்கும் இந்த ஆண்டு ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் சிறப்புமலர் பணிவன்போடு காணிக்கையாகச் சமர்ப்பிக்கப்படுகிறது.


—ஆசிரியர்

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன் இல்லை

—திருமூலர்

தொகுதி 59	சித்தார்த்தி ௵ கார்த்திகை ௴	இதழ் 11



न त्वहं कामये राज्यं न स्वर्गं नाऽपुनर्भवम् ।
कामये दुःखतप्तानां प्राणिनामार्तिनाशनम् ॥

ந த்வஹம் காமயே ராஜ்யம் ந ஸ்வர்க்கம் நாபுநர்பவம் |
காமயே து:கதப்தாநாம் ப்ராணிநாமார்த்திநாசநம் ||

—மகாபாரதம்

அரசாட்சியை நான் விரும்பவில்லை. சுவர்க்கத்தையோ மீண்டும் பிறவாமையையோ நான் விரும்பவில்லை. துக்கத்தில் தவிக்கும் உயிர்களின் துன்பத்தைப் போக்குவதையே நான் விரும்புகிறேன்.

காற்றாலே புவியாலே ககனமத னாலே
கனலாலே புனலாலே கதிராதி யாலே
கூற்றாலே பிணியாலே கொலைக்கருவி யாலே
கோளாலே பிறஇயற்றும் கொடுஞ்செயல்க ளாலே
வேற்றாலே எஞ்ஞான்றும் அழியாதே விளங்கும்
மெய்அளிக்க வேண்டும்என்றேன் விரைந்தளித்தான் எனக்கே
ஏற்றாலே இழிவெனநீர் நினையாதீர் உலகீர்
எந்தைஅருட் பெருஞ்சோதி இறைவனைச்சார் வீரே.

—வடலூர் வள்ளலார்



ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அருள் வாக்கு

வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 24, 1885

குருதேவர் இன்று கல்கத்தாவிற்கு வந்திருக்கிறார். பகல் ஒரு மணி அளவில் ம— பலராமின் வீட்டு விருந்தினர் அறையில் குருதேவர் உறங்கிக் கொண்டிருந்ததைக் கண்டார். இரண்டொரு பக்தர்கள் குருதேவரின் அருகில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்கள்.

ம— ஒரு விசிறியைக் கொண்டு குருதேவருக்கு மெல்ல விசிற ஆரம்பித்தார். சிறிது நேரத்திற்குப் பிறகு ஸ்ரீராமகிருஷ்ணரின் நித்திரை கலைந்தது. அவர் எழுந்து உட்கார்ந்தார். ம— தரையில் விழ்ந்து குருதேவரை வணங்கி அவருடைய பாததூளியை ஏற்றார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் (ம—விடம் அன்பு ததும்ப): நீ நலமாக இருக்கிறாயா? என்னவோ தெரியவில்லை! என் தொண்டையில் சிறிய புண் ஏற்பட்டிருக்கிறது.* அது காரணமாக இரவின் கடைசி ஜாமத்தில் வலி மிகவும் அதிகமாக இருக்கிறது. இது எப்படிக் குணமடையும்? (எதையோ சித்தித்தபடி) வயிற்றில் சிறிது அமிலம் அதிகரித்திருக்கிறது. பகல் உணவின்போது மாங்காய் ஊறுகாய் பரிமாறினார்கள். அதில் நான் சிறிது சாப்பிட்டேன்.

உன் மனைவி எப்படி இருக்கிறாள்? அவள் நோய் வாய்ப்பட்டிருந்ததைப் போல மிகவும் பலவீனத்துடன் இருந்ததை அன்றைய தினம் கண்டேன். அவளுடைய நரம்புகளுக்குக் குளிர்ச்சியைத் தரக் கூடியவற்றை அவளுக்குச் சாப்பிடக் கொடு.

ம—: நல்லது ஐயனே, அவளுக்கு இளநீர் தரலாமா?

ஸ்ரீராமகிருஷ்ணர்: ஆம், தரலாம். அதோடு கற்கண்டுப் பானகமும் கொடுப்பது நல்லது.

ம— ஸ்ரீராமகிருஷ்ணருக்கு விசிறிக்கொண்டிருந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர்: விசிறியது போதும். நீ நீண்ட நேரமாக......

ம—: இல்லை ஐயனே, எனக்கு ஒன்றும் கஷ்டம் இல்லை.

ஸ்ரீராமகிருஷ்ணர் (அன்புடன்): கஷ்டமாக இல்லையா?

ம— பக்கத்திலிருந்த ஒரு பள்ளியில் ஆசிரியராக இருந்தார். பகல் ஒரு மணிக்கு அவருக்கு இடைவேளையின் போது சிறிது ஓய்வு கிடைத்தபோது ஸ்ரீராமகிருஷ்ணரைத் தரிசிக்க வந்திருந்தார். இப்போது மீண்டும் அவர் பள்ளிக்கூடம் திரும்ப வேண்டும். ஆகவே அவர் குருதேவரிடம் விடை பெற்றுச் செல்ல நமஸ்கரித்து எழுந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் (ம-விடம்): இப்போதே நீ போக வேண்டுமா?

ஒரு பக்தர்: இன்னும் பள்ளிக்கூடம் விடவில்லை. இவர் ஓய்வுநேரத்தில் இங்கே வந்திருக்கிறார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் (சிரித்துக் கொண்டே): வீட்டுத் தலைவி ஏழெட்டுக் குழந்தைகளைப் பராமரிப்பதில் இரவு பகலாக உழைக்கிறாள். இருந்தாலும் அதற்கிடையில் இரண்டொரு முறை தன் கணவனுக்குச் சிறிது சேவை செய்கிறாள். அது போலவா? (எல்லோரும் சிரித்தனர்.)

* * *

மாலை நான்கு மணிக்குப் பள்ளிக்கூடம் முடிவடைந்தது. ம— மறுபடியும் பலராம்பாபுவின் வீட்டிற்கு வந்து பார்த்தபோது குருதேவர் சிரித்த முகத்துடன் அங்கு வீற்றிருந்தார். பக்தர்கள் ஒவ்வொருவராக அங்கு வந்து குழுமினர். சிறிய நரேனும் ராமும் வந்திருந்தார்கள். நரேந்திரரும் அங்கு இருந்தார். ம— குருதேவரை வணங்கிவிட்டு

---

* ஸ்ரீராமகிருஷ்ணருக்குத் தொண்டையில் ஏற்பட்ட புற்று நோயின் ஆரம்பம்.

அருகில் அமர்ந்தார். பலராம்பாபு குருதேவருக்காக 'மோகன்போக்' என்ற இனிப்பை ஒரு தட்டில் அனுப்பியிருந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் (நரேந்திரரிடம்): இதோ பார், தின்பண்டம் வந்திருக்கிறது! இனிப்பு! இனிப்பு! சாப்பிடு! சாப்பிடு! (அனைவரும் சிரித்தனர்.)

மெல்ல மாலை சாய்ந்தது. குருதேவர் கிரீஷின் வீட்டிற்குப் புறப்பட்டார். கிரீஷ் தமது வீட்டில் ஸ்ரீகுருதேவரின் வருகையை ஒரு விழாவாகக் கொண்டாட ஏற்பாடு செய்திருந்தார்.

குருதேவர் போஸ்பாரா லேன் என்ற சந்தில் நுழைந்தார். அவர் சிரித்துக்கொண்டே ம-விடம், "இந்த ஜனங்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள்? 'பரமஹம்சரின் படை வருகிறது!' என்று சொல்கிறார்கள் அல்லவா? இந்தப் பயல்கள் எப்படிப் பேசுகிறார்கள்!" (அனைவரும் சிரித்தனர்.)

பக்தர்களுடன் குருதேவர் கிரீஷின் வீட்டு வெளி அறைக்குள் நுழைந்தார். குருதேவரின் வருகையை முன்னிட்டு ஏற்பாடு செய்திருந்த அந்த விழாவிற்குக் கிரீஷ் பல பக்தர்களை அழைத்திருந்தார். அவர்களில் பலர் அங்கே கூடியிருந்தார்கள். குருதேவர் வருவதைப் பார்த்ததும் அவரை வரவேற்க அனைவரும் எழுந்து நின்றனர். குருதேவர் சிரித்த முகத்துடன் வந்து இருக்கையில் அமர்ந்தார். பக்தர்கள் அவரைச் சுற்றிலும் அமர்ந்து கொண்டார்கள்.

ஸ்ரீராமகிருஷ்ணர் (மஹிமாசரணிடம்): கிரீஷிடம் உன்னைப்பற்றிச் சொன்னேன். 'ஒருவன் இருக்கிறான்; அவன் மிகவும் ஆழமானவன். உன்னிடம் முழங்கால் அளவு தண்ணீர் ஆழம்தான் இருக்கிறது.' நான் அவ்விதம் சொன்னதை நீ இப்போது மெய்ப்பித்துக் காட்ட வேண்டும். நீங்கள் இருவரும் இப்போது விவாதம் செய்யுங்கள். ஆனால் ஒத்துப்போய்விடாதீர்கள். (எல்லோரும் சிரித்தனர்.)

மஹிமாசரணும் கிரீஷும் விவாதம் செய்ய ஆரம்பித்தார்கள். விவாதம் தொடங்கிய சிறிது நேரத்திற்கெல்லாம் ராம், "விவாதித்தது போதும். இப்போது சங்கீர்த்தனம் கேட்கலாம்" என்று சொன்னார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் (ராமிடம்): இல்லை, இல்லை! இதில் ஆழ்ந்த கருத்து இருக்கிறது. இவர்கள் 'இங்கிலீஷ்காரர்கள் (ஆங்கிலம் படித்தவர்கள்)' இவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று பார்க்கலாம்.

எல்லோரும் ஸ்ரீகிருஷ்ணராக ஆகமுடியும், ஆன்மிகச் சாதனையில் ஈடுபடுவதால் அந்த நிலையைப் பெற முடியும்—என்பது மஹிமாசரணரின் கொள்கை. ஸ்ரீகிருஷ்ணர் அவதார புருஷர்; மனிதன் ஆயிரக்கணக்கான ஆன்மிகச் சாதனைகளைச் செய்தாலும் அவதார புருஷனாக ஒருபோதும் ஆக முடியாது—என்பது கிரீஷின் கொள்கை.

மஹிமாசரண்: எப்படித் தெரியுமா? இடையூறுகள் அகற்றப்பட்டுவிட்டால் எப்படி வில்வமரம் மாமரமாக ஆக முடியுமோ அது போன்றாகும். யோகம் பழகுவதன் மூலம் இடையூறுகளை அகற்றி விட முடியும்.

கிரீஷ்: நீங்கள் என்ன வேண்டுமானாலும் பேசலாம். ஆனால் யோகம் பழகினாலும் சரி, அல்லது வேறு எதைப் பழகினாலும் சரி, நீங்கள் சொல்வது போல நடப்பது ஒருபோதும் சாத்தியமில்லை. கிருஷ்ணன்தான் கிருஷ்ணனாக ஆக முடியும். உதாரணமாக, ராதையிடமிருந்த மனோபாவங்கள் எல்லாம் வேறு ஒருவரிடம் இருப்பதாக வைத்துக்கொள்வோம்; அந்த வேறு ஒருவர் வேறு யாராகவும் இருக்க முடியாது; அவர் ராதையாகவே தான் இருப்பார். அது போலவே ஸ்ரீகிருஷ்ணரிடம் காணப்பட்ட மனோபாவங்களெல்லாம் எவரிடமாவது இருப்பதை நாம் பார்ப்போமானால் ஸ்ரீகிருஷ்ணரையே பார்ப்பதாகத்தான் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

மஹிமாசரணரால் நீண்ட நேரம் விவாதிக்க முடியவில்லை. கடைசியில், ஒருவிதமாக, கிரீஷின் கொள்கையையே அவர் ஒப்புக் கொண்டார் போலும்!

மஹிமாசரண் (கிரீஷிடம்): ஆம் ஐயா! இரண்டு விதக் கருத்துக்களுமே உண்மைதான். ஞானமார்க்கம் இறைவனின் விருப்பப்படியே ஏற்பட்டிருக்கிறது. பிரேமைபக்தி மார்க்கமும் இறைவனின் விருப்பத்திற்கிணங்கவே ஏற்பட்டிருக்கிறது. (ஸ்ரீராமகிருஷ்ணரைச் சுட்டிக் காட்டி) இவர் சொல்வது போல, மக்கள் வெவ்வேறு பாதைகளைப் பின்பற்றினாலும் முடிவில் ஒரே இலட்சியத்தைத் தான் அடைகிறார்கள்.

கிரீஷ் (ஸ்ரீராமகிருஷ்ணரிடம்): ஐயனே, 'ஒரே மனதாக இருக்கும் ஏகாங்கி பிரேமை' என்று எதைச் சொல்கிறார்கள்?

ஸ்ரீராமகிருஷ்ணர்: ஏகாங்கி என்ற காரணத்தினால் பக்தி ஒரு திசையை நோக்கி மட்டுமே செல்லுகிறது. உதாரணமாக, தண்ணீர் வாத்து இருக்கும் இடத்தைத் தேடிச் செல்வதில்லை; ஆனால்

வாத்து தண்ணீரை விரும்பிச் செல்கிறது. இன்னும் பக்தியில் ஸாதாரணி, ஸமஞ்ஜஸா, ஸமர்த்தா முதலிய வகைகள் இருக்கின்றன. முதலாவது வகையாகிய ஸாதாரணி பக்தி என்பது மிகவும் சாதாரணமானது; தனது மகிழ்ச்சியை மட்டுமே நாடியிருப்பது. அப்படிப்பட்டவர் மற்றொருவர் மகிழ்ச்சி அடைகிறாரா இல்லையா என்பதைப்பற்றி ஒருசிறிதும் கவலைப்படுவதே இல்லை. சந்திராவளி இத்தகைய பக்தியை ஸ்ரீகிருஷ்ணரிடம் கொண்டிருந்தாள். இரண்டாவது வகை ஸமஞ்ஜஸா பக்தி என்பது, பரஸ்பரம் ஒருவர் மகிழ்ச்சியை மற்றொருவர் கோருவது; நீயும் இன்பம் அடைவாய், நானும் இன்பமடைவேன் என்னும் இந்த நிலை மிகவும் நல்ல மனநிலை ஆகும். ஆனால் மூன்றாவதாகிய ஸமர்த்தா பக்தி எல்லாவற்றையும்விட மிகவும் உயர்ந்ததாகும். ஸ்ரீமதி ராதையிடம் இந்த உயர்ந்த பக்தி இருந்தது. ஸ்ரீகிருஷ்ணரின் இன்பத்திலேயே அவள் மகிழ்ச்சியடைந்தாள். 'நீ மகிழ்ச்சியுடன் இரு; எனக்கு என்ன நடந்தாலும் அதைப் பற்றிக் கவலைப்படவே வேண்டாம்'—கோபியருங்கூட இந்த நிலையை அடைந்திருந்தார்கள். அது மிக மிக உயர்ந்த நிலையாகும்.

கோபியர் யார் தெரியுமா? ஸ்ரீராமபிரான் காட்டில் அலைந்து திரிந்துகொண்டிருந்தபோது அங்கு அவர் அறுபதினாயிரம் ரிஷிகளைக் கண்டார். அந்த ரிஷிகள் ஸ்ரீராமபிரானைத் தரிசிப்பதற்காக மிகுந்த ஏக்கம் கொண்டிருந்தார்கள். அவர் ஒரு சமயம் அவர்களை அன்பு ததும்பப் பார்த்தார். அந்த ரிஷிகள்தாம் பிருந்தாவனத்துக் கோபியராகப் பிறந்தார்கள் என்று ஒரு புராணம் கூறுகிறது.

ஒரு பக்தர்: ஐயனே! மிகவும் அந்தரங்கமானவர் என்று யாரைச் சொல்வது?

ஸ்ரீராமகிருஷ்ணர்: ஓர் உதாரணம் சொல்கிறேன். கோவில் மண்டபத்திற்கு உள்ளேயும் வெளியேயும் தூண்கள் இருக்கின்றன. அந்தரங்கர் என்பவர் கோவில் மண்டபத்திற்கு உள்ளே இருக்கும் தூண்களைப் போன்றவர். குருவின் அருகிலேயே எப்போதும் வசிப்பவர்கள்தாம் அந்தரங்கர் ஆவார்கள்.

(மஹிமாசரணிடம்) ஆனால் ஞானி உருவக் கடவுளையோ அல்லது அவருடைய அவதாரத்தையோ விரும்புவதில்லை. ஸ்ரீராமபிரான் காட்டில் சென்று கொண்டிருந்தபோது பல ரிஷிகளைப் பார்த்தார். அவர்கள் மிகுந்த அன்புடன் ஸ்ரீராமபிரானை வரவேற்றுத் தங்களுடைய ஆசிரமத்திற்கு அழைத்துச் சென்று, "ராமா, இன்று நாங்கள் உன்னைத் தரிசித்தோம். அது காரணமாக எங்களுடைய எல்லா எண்ணங்களும் நிறைவேறிவிட்டன. ஆனால் நாங்கள் உன்னைத் தசரத குமாரன் என்றுதான் அறிவோம். பரத்வாஜர் போன்ற ரிஷிகள் உன்னைக் கடவுளின் அவதாரம் என்று அழைக்கிறார்கள். ஆனால் நாங்கள் உன்னை அவ்விதம் கருதுவதில்லை. நாங்கள் அகண்ட சச்சிதானந்தத்தையே தியானிக்கிறோம்" என்று சொன்னார்கள். அவர்கள் சொன்னதைக் கேட்டு ஸ்ரீராமர் மகிழ்ச்சியுடன் புன்முறுவல் பூத்தார்.

ஹா! எப்படிப்பட்ட மனநிலைகளிலெல்லாம் நான் இருந்திருக்கிறேன்! என் மனம் தானாகவே அகண்ட பரப்பிரம்மத்தில் லயித்துக் கரைந்து போய்விடும். அது போல எத்தனை எத்தனை நாட்களை நான் கழித்திருக்கிறேன்! பக்தி, பக்தன் எல்லாவற்றையும் துறந்துவிட்டேன். ஒரு ஜடம் போல இருந்தேன். எல்லாமே உருவம் இல்லாமல் இருப்பது போல் எனக்குத் தோன்றியது. என் தலைக்கு வடிவம் இருக்கிறது என்ற உணர்ச்சி எனக்கு இல்லை. உயிர் நீங்கிவிடும் போல் இருந்தது. (கிராமத்திலிருந்த) ராம்லாலின் சித்தியை* அழைக்கலாமா என்று நினைத்தேன்.

என் அறையில் இருந்த உருவப்படங்களையெல்லாம் அப்புறப்படுத்தச் சொன்னேன். பிறகு எனக்கு வெளியுலகத்தின் நினைவு வந்ததும் மனம் கீழிறங்கிச் சாதாரண நிலைக்குத் திரும்பத் தொடங்கியது. தண்ணீரில் மூழ்கிக்கொண்டிருப்பவனுக்கு மூச்சுத் திணறுவதைப் போல, அந்த நிலையில் என் உயிர் தத்தளித்தது. கடைசியில் அப்போது அந்தச் சமயத்தில், 'மக்களின் தொடர்பை என்னால் பொறுக்க முடியாவிட்டால் எதைப் பற்றுக்கோடாகக் கொண்டு உயிர் தங்கும்?' என்ற எண்ணம் என்னை ஆட்கொண்டது. பிறகு மீண்டும் என் மனம் பக்தியையும் பக்தர்களையும் நோக்கித் திரும்பியது.

'இது என்ன நிலை! எனக்கு என்ன ஆயிற்று!' என்று பலரைக் கேட்கத் தொடங்கினேன். அப்போது போலோநாத்† என்பவர், 'மகாபாரதத்தில் இதுபோன்ற மனநிலை விளக்கப்பட்டிருக்கிறது' என்று சொன்னார். சமாதிநிலையை அடைந்தவர் அந்த நிலையிலிருந்து மனம் கீழே இறங்கி வரும்போது எதைப் பற்றுக்கோடாகக் கொண்டு வாழ்வது? அவருக்கு அந்த நிலையில் கடவுளிடம் பக்தியும் கடவுள்பக்தர்களுடன் தொடர்பும் நிச்சயமாகத் தேவைப்படுகின்றன. இல்லாவிட்டால் மனம் எதைப் பற்றிக்கொண்டு நிற்கும்?

---

* தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியார்

† தட்சிணேசுவரக் காளிகோவிலில் வேலை பார்த்து வந்த ஒருவர்.

விஜய தீபம்

விவேகானந்தரும் இளைஞர்களும்

சமுதாய முன்னேற்றம், ஆன்மிக முன்னேற்றம் ஆகிய இரண்டும் மனித குலத்தின் இரு கண்கள் போன்றவை. ஆன்மிகம் இல்லாத சமுதாயமோ, சமுதாய நோக்கு இல்லாத ஆன்மிகமோ முழுமை பெற்றதாகாது. விவேகானந்தரைப் போலவும், காந்தியடிகளைப் போலவும், ஆன்மிகத்தை உள்ளது உள்ளபடியே புரிந்துகொள்ளும் பரிபக்குவம் பெற்றவர்கள் நம்மிடையே மிக மிகக் குறைவு. இந்த நிலையில் ஆன்மிகம் ஒன்றை மட்டுமே எல்லாவித மக்களுக்கும் போதிப்பது, சமுதாயத்தின் இலௌகிக முன்னேற்றங்களைப் பெருமளவில் பாதிக்கும். அதுபோலவே, இலௌகிகத்தை மட்டுமே போதிப்பது மக்களைத் தார்மிகப் பண்பற்ற மிருகங்களாக்கி விடும். சுருங்கக் கூறின், ஏதேனும் ஒன்றின் பொருட்டு மற்றொன்றைப் பலியிட்டுவிடக் கூடாது.

ஆன்மிகத்தை அஸ்திவாரமாகக் கொள்ளாத சமுதாய முன்னேற்றம், கண் இல்லாத குருடனைப் போன்றது. சமுதாயத்தைப் புறக்கணிக்கும் ஆன்மிகம் முடவனைப் போன்றது. இந்த இரண்டுமே மிகவும் நெருங்கிய முறையில் நிறைந்த உயிர்த் துடிப்புடன் செயற்பட வேண்டும். ஏதேனும் ஒன்றை மட்டுமே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சமுதாயம் முழுமைக்கும் விதியாகச் செய்வது தீமையை விளைவிக்கும். எனவே இரண்டையும் மக்களுக்கு எடுத்துக்காட்டுபவரே மக்களின் பரிபூரண வளர்ச்சியைக் கோருபவர் எனலாம். ஆன்மிகம் என்பதை உள்ளது உள்ளபடியே சரியாகப் புரிந்துகொண்டால், சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு அது பெருமளவில் துணைபுரியும். சரியாகப் புரிந்துகொள்ளாவிட்டால் அது சமுதாயத்தைப் பாதிக்கவே செய்யும் என்பதும் உண்மையாகும்.

சமுதாயத்தின் பரிபூரண வளர்ச்சியைக் கோரும் சுவாமி விவேகானந்தர் கூறுவதாவது:—

“மேலைநாட்டு விஞ்ஞானத்தோடு இணைந்த வேதாந்தமும் பிரம்மசரியமும், வாழ்க்கையின் அடிப்படை இலட்சியங்களாக நமக்குத் தேவைப்படுகின்றன. மதம்தான் எல்லாவற்றிற்கும் உயிர் நாடி. சமய வாழ்க்கை சோறு போன்றது. மற்றவை எல்லாம் கறி, கூட்டுப் போன்றவை. கறி, கூட்டு வகைகளை மட்டும் உண்பதால் அஜீரணம் ஏற்படுகிறது. அப்படியே சோற்றை மட்டுமே சாப்பிட்டாலும் அஜீரணம் ஏற்படும்” என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

நவீன விஞ்ஞானமும் வேதாந்தமும் இணைந்த ஈடு இணையற்ற எழுச்சிமிக்க இந்தியாவை உருவாக்குவதே சுவாமிஜியின் இலட்சியமாக இருந்தது. அந்த இலட்சியத்திற்காகவே அவர் தமது வாழ்நாளை அர்ப்பணித்துக் கொண்டார். அவர் சொன்னதைப் போன்ற, நவீன விஞ்ஞானமும் வேதாந்தமும் இணைந்த சமுதாயத்தை உருவாக்கத் தம்மையே அர்ப்பணித்துக்கொள்ள முன்வருபவர்களே இந்தியாவிற்கு உண்மையான நன்மையைச் செய்பவர்களாக அமைவார்கள்; அத்தகைய இளைஞர்களின் வாழ்க்கையே விவேகானந்தருக்குச் செய்யும் வீர வழிபாடாக அமையும் என்பதில் ஐயமில்லை.

தன்னம்பிக்கையும் வலிமையும்

தன்னம்பிக்கையை விவேகானந்தர் பெருமளவில் வற்புறுத்தினார். அவரைப் போல அந்த அளவுக்குத் தன்னம்பிக்கையை வேறு எவரும் வற்புறுத்தவில்லை என்றுகூடச் சொல்லலாம். தன்னிடத்திலும் கடவுளிடத்திலும் நம்பிக்கை கொள்வதில் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு உரிய எல்லா இரகசியமும்

அடங்கியிருப்பதாக அவர் கூறுகிறார். கடவுள் நம்பிக்கை இல்லாதவனை நாத்திகன் என்று சொல்கிறோம் அல்லவா? விவேகானந்தர் தன்னம்பிக்கை இல்லாதவனையே நாத்திகன் என்று சொல்கிறார். அதாவது அவரது கருத்துப்படி, தன்னம்பிக்கை உள்ளவனே ஆத்திகன் ஆவான். நாம் கடவுள் நம்பிக்கை உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். அதோடு நிறைந்த தன்னம்பிக்கை கொண்டவர்களாகவும் விளங்க வேண்டும்.

தன்னம்பிக்கையையும் வலிமையையும் குறித்து அவற்றின் வடிவமாகவே விளங்கிய விவேகானந்தர் பின்வருமாறு கூறுகிறார்:

"இவனை நம்பு அல்லது அவனை நம்பு என்று மற்றவர்கள் சொல்கிறார்கள். ஆனால் நான் சொல்கிறேன். முதலில் உன்னிடத்திலேயே நீ நம்பிக்கை வை. ஆம், அதுதான் வழி. 'உன்னிடத்தில் நீ நம்பிக்கை வை'—எல்லா ஆற்றல்களும் உனக்குள்ளேயே இருக்கின்றன. அதை உணர்ந்து நீ அந்த ஆற்றலை வெளிப்படுத்து. உன்னிடமுள்ள ஆற்றலை வெளிப்படுத்தப் போதுமான அளவுக்கு உண்மையாக நீ முயற்சி செய்யாத போதுதான் தோல்வி அடைகிறாய். ஒரு மனிதனோ ஒரு நாடோ தன்னம்பிக்கையை இழந்தவுடனே அழிவு வருகிறது."



"ஒவ்வொரு மனிதன் முன்பும் இந்த ஒரு கேள்வியை நான் வைக்கிறேன்...நீ வலிமையுடையவனாக இருக்கிறாயா? நீ வலிமையை உணர்கிறாயா? ஏனென்றால், உண்மை ஒன்றுதான் வலிமை தருகிறது என்பதை நான் உணர்ந்திருக்கிறேன். உலகத்தின் நோய்க்கு வலிமை ஒன்றுதான் சரியான மருந்து... உடலையோ உள்ளத்தையோ பலவீனப்படுத்தக் கூடிய எதையும் நீங்கள் தயங்காமல் புறக்கணிக்க வேண்டும்."

"எனது இளம் நண்பர்களே, வலிமை உடையவர்களாக இருங்கள். இதுவே நான் உங்களுக்கு வழங்கும் அறிவுரை. கீதை படிப்பதைவிடக் கால்பந்து ஆடுவதன் மூலம் நீங்கள் சொர்க்கத்திற்கு அருகில் இருப்பீர்கள். இவை தைரியமான வார்த்தைகள். ஆனால், உங்களை நேசிக்கிற காரணத்தால், இவற்றை நான் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். உங்கள் முன்னேற்றத்தை எது தடுக்கிறது என்பது எனக்குத் தெரியும். ஒரு சிறிது அனுபவமும் பெற்றிருக்கிறேன். உங்கள் தோள்கள், தசைகளின் சற்றுக் கூடுதலான வலிமையால், கீதையை இன்னமும் சற்றுத் தெளிவாகப் புரிந்துகொள்வீர்கள்" என்று, தன்னம்பிக்கையும் வலிமையும் கொண்டவர்களாக இன்றைய இளைஞர் வீறுடன் விளங்க வேண்டும் என்று முழங்குகிறார் சுவாமி விவேகானந்தர்.

கர்மவிதி

'கர்மவிதி' 'கர்மவிதி' என்று காலமெல்லாம் நாம் கேட்டு வந்திருக்கிறோம். வழக்கத்திலுள்ள இந்த வகையிலான கர்மவிதி பற்றிய கருத்து, நன்மையை விடக் கேட்டைத்தான் அதிகம் விளைத்திருக்கிறது என்று சொல்லலாம். அதாவது, கர்மவிதி பற்றிய கருத்தை மக்கள் பெரும்பாலும் தவறாகவே புரிந்து கொண்டிருக்கிறார்கள். அது காரணமாக, அவர்களின் வாழ்க்கையில் அது மந்தநிலைமை, ஊக்கமின்மை, சோம்பல் ஆகிய விரும்பத்தகாதவற்றை ஏற்படுத்தியுள்ளது. 'என் தலைவிதி இவ்வளவுதான் என்று இருக்கிறது; இதற்கு நான் என்ன செய்ய முடியும்?' என்று நடைமுறையிலுள்ள மக்களின் சோம்பல் நிலைக்கு முற்றிலும் வேறுபட்டதாக சுவாமி விவேகானந்தர் கூறும் கர்மவிதி அமைந்திருக்கிறது.

சுவாமிஜி கூறும் கர்மவிதி, நிறைந்த ஊக்கத்தைத் தருவதாகவும், செயல் வீரர்களாக்குவதாகவும் அமைந்திருக்கிறது. இதுபற்றி அவர் தெரிவித்துள்ள கருத்துக்களில் சில துளிகள் வருமாறு :—

"உனது விதியை நீயே உருவாக்கு. நமது விதியை நாமே வகுத்துக்கொள்கிறோம். எனவே, அதற்காகத் தூற்றுவதற்கும் ஒருவரும் இல்லை; பாராட்டுவதற்கும் ஒருவரும் இல்லை. பொறுப்பு முழுவதையும் உன் தோள்மீதே சுமந்துகொள். உனது விதியைப் படைப்பவனாக நீயேதான் இருக்கிறாய் என்பதைப் புரிந்துகொள். உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உதவியும் உனக்குள்ளேயே குடிகொண்டிருக்கின்றன."

''நாம் இப்போது இருக்கும் நிலைமைக்கு நாமே தான் பொறுப்பாளிகள். நாம் எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்று விரும்புகிறோமோ, அப்படி நம்மை அமைத்துக்கொள்ளும் ஆற்றல் நம்மிடமே இருக்கிறது. நாம் இப்போது இருக்கும் நிலை நமது முன்வினைகளின் பலன் என்றால், எதிர்காலத்தில் நாம் எப்படி இருக்க வேண்டுமென்று விரும்புகிறோமோ அதை நாம் நம்முடைய தற்போதைய செயல்களால் உண்டாக்கிக்கொள்ள முடியும் என்பது வெள்ளிடைமலை. எனவே எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.'' என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

'முன்பு எப்போதோ செய்த வினையின் பயன்' என்று சொல்லிப் பழவினைக்கு முக்கியத்துவம் அளித்துப் புலம்புவதுதான் நம்மில் பலரிடமும் இருந்து வருகிறது. இவ்விதம் புலம்புவதை விட்டு, இப்போது கைவசம் இருக்கும் தற்போதைய வாழ்க்கைக்கு முக்கியத்துவம் அளித்து, நம்மை நாம் உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்பதே விவேகானந்தர் காட்டிய வழியாகும்.

பிரச்னைகளை எதிர்நோக்கி நில்

பிரச்னைகள் வாழ்க்கையில் வரவே செய்கின்றன. அவற்றை வீரனாக இருந்து ஒருவன் துணிவுடன் எதிர்நோக்கவேண்டும். போர்புரிய வேண்டும் என்ற பிரச்னை அர்ஜுனனுக்கு ஏற்பட்டபோது அதிலிருந்து அவன் தப்பியோட நினைத்தான். பகவான் கிருஷ்ணன் அர்ஜுனனைத் தடுத்து, ''கோழையாகக் கடமையிலிருந்து தப்பியோடாதே; பிரச்னையை வீரத்துடன் எதிர்நோக்கி நில்'' என்று கீதையை உபதேசித்தார். இந்த உண்மையை வலியுறுத்தும் வகையில் விவேகானந்தரின் வாழ்க்கையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றை இங்குக் குறிப்பிடுவது பொருந்தும்.

விவேகானந்தர் அமெரிக்காவில் நடைபெற்ற சிகாகோ சர்வசமயப் பேரவையில் கலந்துகொள்வதற்கு முன்பு ஒரு சமயம் காசிக்குச் சென்றிருந்தார். அங்கு ஒரு புறம் நீர் நிறைந்த ஒரு பெரிய குளமும், மறுபுறம் உயர்ந்த சுவரும் எழுப்பப்பட்டிருந்த பாதைவழியாக அவர் செல்ல நேர்ந்தது. அந்த இடத்தில் பல குரங்குகள் இருந்தன. நடந்துகொண்டிருந்த சுவாமிஜியை வழிமறித்து அந்தக் குரங்குகள் முரட்டுத்தனமாக அவரிடம் நடந்துகொண்டன. கிரீச்சிட்டுப் பெரும் சப்தத்துடன் அவை சுவாமிஜியின் கால்களைப் பற்றின. அவற்றின் தொந்தரவுகளிலிருந்து விடுபடுவதற்காக அவர் ஓட ஆரம்பித்தார். ஆனால் குரங்குகளோ அவரை விடாமல் தொடர்ந்து ஓடி வந்து கடித்தன. குரங்குகளிடம் தப்ப வழியில்லாமல் அவர் அகப்பட்டுக்கொண்டார்.

அப்போது தூரத்திலிருந்து அவரை அந்த நிலையில் பார்த்த யாரோ ஒருவர், ''குரங்குகளை எதிர்த்து நில்'' என்று சொல்லிக் கூவினார். சுவாமிஜியும் குரங்குகளிடமிருந்து தப்பி ஓடிவிட வேண்டும் என்ற எண்ணத்தைக் கைவிட்டு, அவற்றை எதிர்த்து நின்றார். உடனே அந்தக் குரங்குகள் அவரைத் தொந்தரவுபடுத்துவதை விட்டு, அவரிடமிருந்து பின்வாங்கி ஓடோடிவிட்டன.

இந்த நிகழ்ச்சியை அமெரிக்காவில் நிகழ்த்திய ஒரு சொற்பொழிவில் சுவாமி விவேகானந்தர் குறிப்பிட்டு, "இந்த நிகழ்ச்சி வாழ்க்கை முழுவதற்கும் படிப்பினையாகும். பயங்கரத்தை எதிர்த்து நில்லுங்கள்; அஞ்சாமல் அதை எதிர்த்து நில்லுங்கள்'' என்று கூறினார். பிரச்னைகளைக் கோழையாக இருந்து தவிர்ப்பதனால் ஆக்கபூர்வமான பயன் ஒன்றும் விளையாது. பிரச்னைகளைத் தைரியத்துடன் எதிர்நோக்குவதனால்தான் அதில் வெற்றிபெற முடியும்.

சிவாஜிக்கு வழிகாட்டியாக விளங்கிய சமர்த்த ராமதாசரைப் போலவும், விஜயநகர சாம்ராஜ்யத்தை நிறுவிய வித்தியாரண்ய முனிவரைப் போலவும் தற்கால மக்களின் முன்பு சுவாமிஜி பளிச்சிடுகிறார். ''உலக இயந்திரத்தின் சக்கரங்களிலிருந்து தப்பி ஓடாதே. மாறாக அதன் உள்ளேயே நின்றுகொண்டு கர்மயோகத்தின் இரகசியத்தைக் கற்றுக்கொள். இயந்திரத்தின் உள்ளேயிருந்து சரியான படி வேலை செய்வதன்மூலமும் அதிலிருந்து வெளியே வந்து விடுவது சாத்தியமே'' என்பது விவேகானந்தர் வாக்கு. வாழ்க்கையில் நாம் இடறி விழுகிறோம் என்றால், தட்டுத்தடுமாறிகொண்டிருக்கிறோம் என்றால், அதற்கு மூலகாரணம் சுவாமிஜியின் அறிவுரைகளை நாம் மறந்துவிட்டதாகத்தான் இருக்கும். நாம் இடறி விழும்போதெல்லாம் சுவாமிஜி சொன்ன உன்னதக் கருத்துக்களை நினைவுகூர இறைவன் திருவருள் பாலிப்பாராக.

செயல்வீரர்கள்

விவேகானந்தர் தமது வாழ்க்கையின் மூலமும் உபதேசங்களின் மூலமும் வழங்கியுள்ள அறிவுரை அனைவருக்குமே பொருந்தும் என்பது உண்மைதான். எனினும் குறிப்பாக அவை இளைஞர்களுக்கு உரியவை என்று சொல்வது தவறாகாது.

ஏனெனில் தமது உபதேசங்களுக்குச் செவிசாய்க் கக் கூடியவர்களாகவும் அவற்றை நடைமுறைப் படுத்தக் கூடியவர்களாகவும் இளைஞர்களையே அவர் பெரிதும் எதிர்பார்த்தார்.

விவேகானந்தர் கூறுவதாவது—"எனது இளைஞர் களே! தீரம் மிக்க உத்தம குணம் வாய்ந்த நல் லோர்களே! நாட்டின் முன்னேற்றம் என்னும் செயல்சக்கரத்தை உருட்ட வாருங்கள். பெயருக் காகவோ, புகழுக்காகவோ, அவைபோன்ற பொரு ளற்ற வேறு எந்த அற்ப விஷயத்திற்காகவோ திரும்பிப் பார்க்க நில்லாதீர்கள். சுயநலம் என் பதைத் தூர எறிந்துவிட்டு வேலை செய்யுங்கள். உங்கள் அனைவரின் மீதும் ஆண்டவனின் ஆசிகள் பொழியுமாக... நெருப்புஜ்வாலை போன்றிருக்கும் இளைஞர் குழு ஒன்றுக்குப் பயிற்சி தந்து, அதனை ஆயத்தப்படுத்துங்கள். உங்களிடம் இருக்கும் ஊக்கத் தீயை அவர்களிடம் செலுத்துங்கள்."

"இன்றைய இளைய தலைமுறையைச் சேர்ந்தவர், புதிய தலைமுறையைச் சேர்ந்தவர்கள் ஆகிய உங்க ளிடம்தான் என் நம்பிக்கை இருக்கிறது. இவர் களிடமிருந்தே என் தொண்டர் தோன்றுவார்கள். சிங்கங்களைப் போல அவர்கள் எல்லாப் பிரச்னை களையும் தீர்த்து வைப்பார்கள். நான் என் கருத்தை வகுத்து அதற்காக என் வாழ்க்கையை அர்ப்பணித்திருக்கிறேன். இந்தியா முழுவதும் இந்தக் கருத்துக்கள் பரவும் வரையிலும் அவர்கள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு இந்த அரிய கருத்துக்களைப் பரப்பிக்கொண்டே செல்வார்கள்."

"தைரியம் மிக்க என் இளைஞர்களே! நீங்கள் மகத்தான காரியங்களைச் சாதிக்கப் பிறந்தவர்கள் என்று உறுதியாக நம்புங்கள். வாழ்நாள் குறுகிய அளவானது; பெருங்காரியம் ஒன்றின் பொருட்டு அதைத் தியாகம் செய்துவிடுவீர்களாக! பணிபுரி வீர்களாக! பணிபுரிவீர்களாக! எனது சகோதரர் களே! நாம் அனைவரும் கடுமையாக உழைப்போ மாக. உறங்குவதற்கு இது நேரமில்லை. எதிர்கால இந்தியா நமது உழைப்பைப் பொறுத்துத்தான் அமைந்திருக்கிறது."

"வலிமை நிறைந்த ஒரு களஞ்சியமாக உன்னை நீ உருவாக்கிக்கொள். நமது நாடு வீரர்களை வேண்டி நிற்கிறது. வீரர்களாகத் திகழுங்கள்! எனது நம்பிக்கை எல்லாம் சென்னை இளைஞர் களிடமே இருக்கிறது. தங்கள் பணியைச் செய்து முடிப்பதற்காகத் தீயில் குதிக்க வேண்டியது அவசியமானால், அப்படியே செய்வதற்கும் என் குழந்தைகள் தயாராக இருக்க வேண்டும்."

"சென்னையிலிருந்துதான் புதிய ஒளி எழுந்து இந் தியாவெங்கும் பரவியாக வேண்டும். இந்த நோக் கத்தை மேற்கொண்டு நீங்கள் உழைத்து வர வேண்டும். நெருப்புப் பிழம்பு போன்ற இலட்சியப் பணியாளரின் கோஷ்டி ஒன்று இப்போது எனக்குத் தேவை. நீங்கள் என் குழந்தைகளானால் எதற்குமே அஞ்சமாட்டீர்கள்! சிங்கங்களாகத் திகழ்வீர்கள்! இந்தியாவையும் உலகம் முழுவதை யும் நாம் விழித்தெழச் செய்ய வேண்டும். கோழைத்தனம் கூடவே கூடாது" என்றெல்லாம் கூறுவதன்மூலம் இளைஞர்கள் செயல்வீரர்களாகத் திகழ வேண்டும் என்று விவேகானந்தர் மீண்டும் மீண்டும் அறிவுறுத்துகிறார்.

கல்வி

விவேகானந்தரின் கல்விச் சிந்தனைகள் இன்னும் போதுமான முக்கியத்துவத்துடன் ஆராயப்படாம லும், நடைமுறைப் படுத்தப்படாமலும் இருந்து கொண்டிருக்கின்றன. "எத்தகைய கல்வி நல்ல ஒழுக்கத்தை உருவாக்குமோ, மனவலிமையை வளர்க்குமோ, விரிந்த அறிவைத் தருமோ, ஒரு வனைத் தன் சுய வலிமையைக் கொண்டு நிற்கச் செய்யுமோ அத்தகைய கல்விதான் நமக்குத் தேவை" என்கிறார் விவேகானந்தர். மாணவர்கள் பள்ளிப் பாடங்களைப் பயில்வதுடன், வாழ்க்கையை உருவாக்கக் கூடிய, மனிதனை மனிதனுக்கக் கூடிய, நல்ல ஒழுக்கத்தை வளர்க்கக்கூடிய கருத்துக்களைக் கிரகித்து, அவற்றைத் தம்முடையவையாக்கிக் கொள்ள வேண்டியது முற்றிலும் அவசியமாகும்.

பிரம்மசரியம்

விவேகானந்தர் ஒரு சமயம் பேலூர் மடத்தில் தங்கியிருந்தார். அப்போது மிகக் குறுகிய காலத் தில் அவர் கலைக்களஞ்சிய நூல்களைப் படித்து, அவற்றில் சொல்லப்பட்ட கருத்துக்களை வரிக்கு வரி அப்படியே கூறினார். அதற்குக் காரணம் பிரம்மசரியத்தின் ஆற்றல்தான் என்று அவர் மனப் பூர்வமாகக் கருதினார். "பிரம்மசரியத்தை உறுதியாக அநுஷ்டிக்கிற ஒரே ஒரு காரணத்தாலேயே, எல்லாவிதமான கல்வியறிவையும் மிகக் குறுகிய காலத்தில் கற்றுத் தேர்ச்சி பெற்றுவிட முடியும். அத்தகையவன் ஒரே ஒருமுறை தான் கேட்டதை யும் அறிவதையும் மறவாமல் நினைவில் வைத்துக் கொள்கிறான். இப்படிப்பட்ட பிரம்மசரியம் நம்

நாட்டில் இல்லாமற் போனதனுல்தான், எல்லாமே இன்று அழிந்துபோகும் நிலையில் இருக்கின்றன'' என்று கூறுகிருர் விவேகானந்தர். விவேகானந்தரின் மகிமைபொருந்திய வாழ்க்கைக்கு மணிமகுடமாகத் திகழ்ந்தது அவரிடம் இருந்த பரிபூரணப் பிரம்மசரியமே ஆகும்.

தொண்டும் சுயநலமும்

இந்த உலகிலேயே விவேகானந்தருக்குப் பிடிக்காத ஒன்று உண்டென்ருல் அது சுயநலம்தான். சுயநலத்தை அவர் வாய்ப்பு ஏற்படும்போதெல்லாம் கண்டித்துப் பேசுகிருர்: ''நம்மைப் பற்றியே முதலில் நினைத்துக்கொள்ளும் சுயநலம்தான் மிகப் பெரிய பாவமாகும். தன்னலமற்ற மனப்பான்மைதான் ஆன்மிக வாழ்க்கை இருப்பதற்கும் இல்லாதிருப்பதற்கும் உரிய சோதனையாகும். சுயநலமற்ற தன்மையைப் பெருமளவிற்குப் பெற்றிருப்பவன், பெருமளவிற்கு ஆன்மிக வாழ்க்கையைப் பெற்றிருக்கிருன். அவனே மற்றவர்களைவிடச் சிவபெருமானுக்கு அருகில் இருக்கிருன். தன் சொந்த சுக வசதிகளை மட்டும் கவனித்துக்கொண்டு, சோம்பல் வாழ்க்கை வாழும் சுயநலக்காரனுக்கு நரகத்தில் கூட இடம் கிடைக்காது. தூய்மையாக இருப்பதும் மற்றவர்களுக்கு நன்மை செய்வதும்தான், எல்லா வழிபாடுகளின் சாரமாகும். ஏழைகளிடமும் பலவீனர்களிடமும் நோயாளிகளிடமும் சிவபெருமானைக் கண்டு அவர்களுக்குத் தொண்டு செய்பவனே, உண்மையில் சிவபெருமானை வழிபடுகிருன். சிவபெருமானை விக்கிரகத்தில் மட்டும் காண்பவனுடைய வழிபாடு ஆரம்ப நிலையில்தான் இருக்கிறது'' என்கிருர் விவேகானந்தர்.

மக்கள்தொண்டை வற்புறுத்தி அதைச் செயலிலும் காட்டிய மாமனிதர் விவேகானந்தர். வாய்ப்புள்ள போதெல்லாம் அவர் தியாக மனப்பான்மையைத் தலையாயதாகப் பாராட்டிப் பேசுகிருர். 'மற்றவர்களின் நன்மைக்காக என்னுடைய இந்த வாழ்க்கை அழிந்துபோகிற அந்த நாளும் வருமா?' என்று மனப்பூர்வமாக ஏங்கிய விவேகானந்தர், "பொதுநலத்திற்காகத் தம்மைத் தியாகம் செய்ய வேண்டும் என்ற கருத்து நம்மிடையே வளராமல் இருக்கிறதே!'' என்று மனம் வருந்தி இதய ரத்தம் சிந்தக் கூறுகிருர்.

தியாக மனப்பான்மை நம்மிடையே மலரவேண்டுமென்பதற்காக அவர் கூறிய வாசகங்கள் சில வருமாறு: ''பெரியவர்கள் பெருந் தியாகங்களைச் செய்கிருர்கள். அதன் விளைவாக வரும் நன்மைகளை மனிதகுலம் பெற்று அனுபவிக்கிறது. இந்த உண்மையை நீ உலக வரலாறு முழுவதிலும் காணலாம். உன் சொந்த முக்திக்காக எல்லாவற்றையும் நீ துறந்துவிட விரும்பினுல், அது அவ்வளவு ஒன்றும் பாராட்டுவதற்கு உரியதல்ல. உலகத்தின் நன்மைக்காக உன் முக்தியையும் நீதியாகம்செய்துவிட விரும்புகிருயா? அப்படி நீ செய்தால்தான் கடவுளாகவே நீ ஆகிவிடுவாய். மற்றவர்களின் நன்மைக்காகத் தங்களுடைய இதயத்தின் இரத்தத்தைச் சிந்தி, பாதை அமைப்பவர்கள்தாம் பெரியோர் ஆவார்கள். ஒருவர் தமது உடலைத் தந்து பாலம் ஒன்றை அமைக்கிருர். அந்தப் பாலத்தின் உதவியால், பல்லாயிரக்கணக்கான மக்கள் அந்த ஆற்றைக் கடந்துவிடுகிருர்கள். இது நீண்ட நெடுங்காலமாக நடந்துகொண்டு வந்திருக்கிறது. இந்த முறை அப்படியே இருக்கட்டும். அப்படியே இன்றைக்கும் இருக்கட்டும்'' என்கிருர் சுவாமி விவேகானந்தர்.

விவேகானந்தரின் கருத்துப்படி தியாக மனப்பான்மையுடன் மக்கள் தொண்டில் ஈடுபடுபவன் மதத்தை நல்லவிதமாக அனுஷ்டிப்பவனே ஆவான். இதன் மூலம் சமயம், சமுதாய வாழ்க்கையோடு எந்த அளவுக்கு ஒருங்கிணைந்து செல்ல வேண்டும் என்பதையும் அவர் தெளிவுபடுத்தியிருக்கிருர்.



நல்ல ஓவியத்தை முன்மாதிரியாக வைத்து ஓவியன் ஓவியம் தீட்டிப் பழகுகிருன். அதுபோல, விவேகானந்தரை முன்மாதிரியாக வைத்துத் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள ஒருசில இளைஞர்களாவது முன்வருவார்களானுல், சமுதாயம் மிகப் பெரிய மாற்றத்தைப் பெற்றுவிடும்.

கற்பாறையைக் கொண்டு சிற்பி கண்ணையும் கருத்தையும் கவரும் அழகிய அருள்மிகு தெய்வ வடிவம் சமைக்கிருன். சிற்பியின் நிலையிலிருந்தும், ஸ்பரிசவேதியின் நிலையிலிருந்தும் விவேகானந்தரின் சிந்தனைகள் அரிய பல மனிதர்களைப் படைத்திருக்

கிறது. இந்த உண்மைக்கு இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்ட பலரை உதாரண மாகச் சொல்லலாம்.

ஆன்மிகம், பண்பாடு, அரசியல், அறிவியல், விஞ்ஞானம், பொருளாதாரம், தொழில், வாணிபம், இலக்கியம், கலை என்று பல துறைகளிலும் நாம் முன்னேறி நமது நாட்டிற்குப் பெருமை தேடித் தர வேண்டும். அதற்கு உரிய வழி இன்னது என்பதை விவேகானந்தர் தெளிவாக, மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார். நாம் எந்த ஒரு பெரிய காரியத்தில் அல்லது இலட்சியத்தில் வெற்றிபெற விரும்பினாலும் அதற்கு விவேகானந்தர் தரும் அறிவுரை இதுதான்:

“ஒரு கருத்தை எடுத்துக்கொள். அந்த ஒரு கருத்தையே உன் வாழ்க்கை மயமாக்கு. அதையே கனவு காண். அந்த ஒரு கருத்தை ஒட்டியே வாழ்ந்து வா. மூளை, தசைகள், நரம்புகள், உன் உடலின் ஒவ்வொரு பாகத்திலும் அந்தக் கருத்தே நிறைந்திருக்கட்டும். அந்த நிலையில் மற்ற எல்லாக் கருத்துக்களையும் தவிர்த்துவிடு. வெற்றிக்கு இது தான் வழி. நாம் உண்மையிலேயே பாக்கியவான்களாக விரும்பினால், பிறரையும் பாக்கியவான்களாக்க விரும்பினால், நம்முள் நாம் மேலும் ஆழ்ந்து சென்றாக வேண்டும்.”

“துரதிர்ஷ்டவசமாக இந்த வாழ்க்கையில் மக்களில் மிகப் பெரும்பாலானவர் எந்தவிதமான ஓர் உயர்ந்த இலட்சியமும் இல்லாமல், இருளடைந்த இந்த வாழ்க்கையில் தட்டுத் தடுமாறிச் சென்று கொண்டிருக்கிறார்கள். உயர்ந்த இலட்சியம் கொண்ட மனிதன் ஒருவன் ஆயிரம் தவறுகள் செய்தால், இலட்சியம் ஒன்றுமே இல்லாமல் வாழ்பவன் ஐம்பதாயிரம் தவறுகள் செய்வான் என்று நான் உறுதியாகச் சொல்வேன். எனவே உயர்ந்த ஓர் இலட்சியத்தைக் கொண்டிருப்பது மேலானது” என்கிறார் விவேகானந்தர்.


ஏதாவது ஒரு கருத்தை எடுத்துக்கொண்டு அதன் மயமாகவே வாழவேண்டும் என்ற விவேகானந்தரின் இந்த ஓர் உபதேசத்தை இளைஞர்கள் நினைவில் வைத்துக்கொண்டாலே போதுமானது. நமது போற்றுதற்குரிய சான்றோர் அனைவரும் அவ்விதமேதான் வாழ்ந்திருக்கிறார்கள். ஆகவே நாம் நமது வாழ்க்கையில் மகத்தான பெருமை பெற விரும்பினால், ஒரு கொள்கையை எடுத்துக்கொண்டு அதற்காகவே நம்மை அர்ப்பணித்துக்கொள்வது தான் வழி. விவேகானந்தரின் இந்த அறிவுரையை இளைஞர்கள் அடிக்கடி சிந்திக்க வேண்டும். வீணாக ஆற்றல்களை விரயம் செய்யாமல் ஓர் இலட்சியத்தின் மயமாக வாழ்ந்து தாங்கள் பெருமை அடைவதோடு பிறந்த பொன்னாட்டிற்கும் பெருமை தேடித்தர வேண்டும். நாம் இந்த உலகில் வாழ்ந்து மறைந்ததற்கு அறிகுறியாக ஆக்கபூர்வமாக ஏதேனும் ஒன்றை விட்டுச் செல்ல வேண்டும்.

விவேகானந்தர் பல அறிவுரைகளை வழங்கியுள்ளார். அவற்றில் இயன்ற ஏதேனும் ஒன்றையோ பலவற்றையோ எடுத்துக்கொண்டு அவற்றை நமது வாழ்க்கையின் இலட்சியங்களாக ஆக்க வேண்டும்.

சமயத் தலைவர் என்ற முறையிலும் சமுதாயத் தலைவர் என்ற முறையிலும் விவேகானந்தர் நிறை மனிதராகத் திகழ்கிறார். அவரது வேதாந்தம் வெறும் வாய்வேதாந்தம் அல்ல; அது நடைமுறை அன்றாட வாழ்க்கையில் அவசியம் பிரதிபலிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். நம்மிடையே உள்ள பொறாமை உணர்ச்சிதான் நாட்டின் முன்னேற்றங்களைப் பெருமளவில் இப்போது பாதித்துக்கொண்டிருக்கிறது. இந்தப் பொறாமை உணர்ச்சியை ஒழித்துக் கட்டி, சுவாமி விவேகானந்தர் சொல்வதுபோலத் தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய பண்புகளுடன் தெய்வத்திற்கும் தேசத்திற்கும் தொண்டாற்றக் கூடிய உத்தம மனிதர்களே இன்று தேவைப்படுகிறார்கள். இத்தகைய ஒரு நூறு மனிதர் தோன்றினால் இந்த உலகமே புரட்சிகரமான மாறுதலைப் பெற்றுவிடும்.

கிழக்கு வெளுப்பது விரைவில் பொழுது புலர இருப்பதை உணர்த்துகிறது. அதுபோன்று நவீன இந்தியாவின் விடிவெள்ளியாகிய சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை எல்லாவிதத்திலும் மகிமை வாய்ந்த இந்தியா ஒன்று உருவாகி வருவதற்குத் தோற்றுவாயாக அமைந்திருக்கிறது. ✩





ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஆலயம்

ஸ்ரீமத் சுவாமி வீரேச்வரானந்த மகராஜ்,
தலைவர், ஸ்ரீராமகிருஷ்ண மடம் — சங்கம்

கோயில்கள் சர்ச்சுகள் மசூதிகளும் மற்றும் உலகில் தோன்றியுள்ள பலவேறு வழிபாட்டு இடங்களும் மனித நாகரிகத்தின் மிகச் சிறந்த அமைப்புக்களாகும். அவை மனிதனுடைய மனத் தத்துவத் தேவையை நிறைவேற்றுவதற்காகத் தோன்றியுள்ளன. உலகம் முழுவதும், உலகின் ஒவ்வோர் அணுவிலும் பரவியிருக்கும் கடவுளை மனிதன் தன் ஐம்புலன்களாலும் எளிதாக அறியக் கூடிய ஓர் உறுதியான அடையாளத்தின் மூலம் காணவும், கடவுளின் இருப்பை அந்தக் குறிப்பிட்ட இடத்தில் உணரவும் விரும்புகிறான். இவற்றின் விளைவுதான் இன்று நாம் உலகில் காணும் கடவுளைத் தொழுவதற்கான கோயில்களும் சர்ச்சுகளும் மசூதி களும் மற்ற அமைப்புகளும்.

கோயில்கள் பற்றி ஸ்ரீகிருஷ்ணர்

பகவான் கிருஷ்ணர் பாகவதத்தில் தமது சீடர் உத்தவருக்குச் செய்துள்ள உபதேசத்தில் கோயில் களைப்பற்றிக் கூறியுள்ளார்.* அவர் கூறுகிறார்: "ஒருவன் என்னுடைய உருவச் சிலையை ஓர் இடத்தில் நிலை நிறுத்த வேண்டும். அந்தச் சிலையை உள்ளடக்கி, உறுதியான கோயிலை எழுப்ப வேண்டும். அந்தக் கோயிலைச் சுற்றி அழகான பூந்தோட்டம் அமைக்க வேண்டும். நாள்தோறும் வழிபாடு செய்யவும், அவ்வப்போது பெரிய விழாக் களை நடத்தவும் பணமாகவோ நிலமாகவோ கிராமங் களாகவோ நாட்டின் பகுதிகளாகவோ கடைகளா கவோ சொத்துக்களைச் சேர்க்க வேண்டும். இதை எவன் செய்கிறானோ அவன் மிகுந்த பலனைப் பெறுவான்."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் கோயில்

இப்போது இங்கே கட்டப்பட்டுள்ள ஸ்ரீராம கிருஷ்ணர் கோயில் உருவாக, இந்த நாட்டு மக்களாகிய நீங்கள் பலர் பணமாகவும், ஆலோசனை களாகவும், திட்டங்களாகவும், வேலைகளை மேற் பார்வை செய்தும், வேலைகளைச் செய்தும், மற்றும் பலவிதங்களிலும் உதவியிருக்கிறீர்கள். நீங்கள் அனைவரும் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் கூறியுள்ளபடி அதற்கான பலன்களை நிச்சயம் பெறுவீர்கள்.

கோயில்களில் இரண்டு வகை

பாகவதத்தில் பகவான் கிருஷ்ணர், "கோயில் களில் இரண்டு வகை உண்டு. ஒரு வகை முழுமுதற் கடவுள்களான சிவபெருமான், திருமால், காளி முதலியவர்களுக்காக அமைக்கப்பெறும் கோயில் கள். மற்றொரு வகை மிகச் சிறந்த அவதார புருஷர்களுக்கும் மகான்களுக்கும் அமைக்கப் பெறும் கோயில்கள்" என்று மேலும் கோயில்கள் பற்றிக் கூறுகிறார். ஸ்ரீராமகிருஷ்ணருக்கு அமைக்கப்பெறும் கோயில்கள் இரண்டாவது வகையைச் சேர்ந்தவை.

இந்த நவீனகாலத்தில் சிலர், ஸ்ரீராமகிருஷ்ணர் கடவுளின் அவதாரம் என்பதை ஏற்றுக்கொள்ளத் தயங்கினாலும், அவரை இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய மகான் என்று ஏற்றுக்கொள்ள யாரும் தயங்குவதில்லை.

* பாகவதம், 11-ஆம் ஸ்கந்தம்

இந்துமாக்கடலின் நடுவே அமைந்த மௌரிஷஸ் தீவில் அமைக்கப் பட்டிருக்கும் பகவான் ஸ்ரீராம கிருஷ்ணர் ஆலயத்தின் திறப்பு விழாவில் பேசியது.

வழிபாட்டின் பயன்

பகவான் கிருஷ்ணர், "இத்தகைய மகான்களை யார் பல விதமான ஆசைகளோடு வழிபடுகிறார் களோ அவர்கள் முக்தி அடைகிறார்கள்" என்று மேலும் பாகவதத்தில் கூறுகிறார்.

எனவே ஸ்ரீராமகிருஷ்ணரை ஒருவர் அவதார புருஷர் என்றோ அல்லது மகான் என்றோ, யார் எப்படி நினைத்து வழிபட்டாலும் ஆசையோடு வழி படுகிறவர்கள் அந்த ஆசைகள் நிறைவேறக் காண்பார்கள். ஆசைகள் இல்லாமல் வழிபடுகிற வர்கள் முக்தி அடைவார்கள்.

மனிதர் மனதில் உள்ள ஆசைகள் மூன்று வகைப்படும். அவை—தருமத்தில் நாட்டம், மிகுந்த செல்வம், வாழ்க்கையில் இன்பம் (அறம், பொருள், இன்பம்). ஸ்ரீராமகிருஷ்ணரை ஆசை களோடு வழிபடுபவர்கள் இந்த மூன்றையும் அடை வார்கள். ஆசையில்லாமல் வழிபடுபவர்கள் முக்தி அடைகிறார்கள். ஸ்ரீராமகிருஷ்ணரை வணங்கு வதனால் இவ்வாறு நான்கு புருஷார்த்தங்கள் எனப்படும் அறம், பொருள், இன்பம், வீடு என்ப வற்றைப் பெறுவார்கள்.

தனிச் சிறப்பு

ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய கோயில் இந்தப் பொதுவான சிறப்புக்களோடு தனிப்பட்ட மற்றொரு சிறப்பையும் பெற்றிருக்கிறது. ஸ்ரீராமகிருஷ்ணர் இந்து சமயத்தில் கூறப்பட்டுள்ள சைவம், வைணவம், சாக்தம் (காளியைக் காண அமைந்த சமயமுறை), மற்றும் பல வழிகளையும் பின்பற்றிக் கடும் சாதனை புரிந்து, அந்த வழிகளுள் ஒவ்வொன்றின் மூலமும் அந்த அந்தக் கடவுளரை நேரில் கண்டார். இந்து சமயத்தின் எல்லா மார்க்கங்களையும் பின்பற்றி, அந்த அந்த மார்க்கம் காட்டும் கடவுளரை எல்லாம் கண்ட அவர், பிறகு கிறித்துவம், இஸ்லாம் முதலிய சமயங்கள் கூறும் வழிகளைப் பின்பற்றி, ஏசு, அல்லா முதலான வர்களைக் கண்கூடாகக் கண்டார். தமது இந்த அனுபவத்தின் முடிவை அவர் நான்கே சொற் களில், 'யதோ மத் ததோ பத்—எத்தனை சமயங் களோ அத்தனையும் பாதைகளே' என்று விளக்கி யுள்ளார். எத்தனை சமயங்கள் உலகில் உள்ளனவோ அவை அனைத்துமே உண்மையானவை. அவை யாவும் ஒரே இறைவனை அடைவதற்கு அமைக்கப் பட்ட பலவேறு பாதைகள் என்பது இதன் பொருளாகும். எனவே ஸ்ரீராமகிருஷ்ணரின் கோயில் உலகிலுள்ள எல்லா மதத்தவர்களுக்கும் அமைந்த கோயிலாகும்.

மற்றொரு சிறப்பு

ஸ்ரீ ராமகிருஷ்ணர் கோயிலில் மற்றொரு சிறப்பும் உள்ளது. இந்த நாளில் உலகின் மாபெரும் சிந்தனை யாளர்கள் ஒருங்கிணைந்த, ஒற்றுமைமயமான ஓர் உலகத்தை உருவாக்க முயன்று வருகிறார்கள். நாம் இனங்களாலும், நாடுகளாலும், நிறங்களாலும், மொழிகளாலும், ஏழை—பணக்காரன், படித்தவன் — படிக்காதவன், பாவிகள்—மகான்கள் என்று பலவேறு வேற்றுமைகளாலும் பிளவுபட்டு வாழ்ந்து வருகிறோம்.

இந்த எல்லா வேறுபாடுகளும் எல்லோருக்கும் பொதுவான ஓர் அடிப்படையான கொள்கையோடு இணைந்தால்தான் ஒருங்கிணைந்த, ஒன்றுபட்ட ஓர் உலகம் உருவாகும்.

உலகை இணைக்க முயலும் அறிஞர்கள் இப்போது எவ்வளவு முயன்றும் அத்தகைய அடிப்படையைக் காண முடியாதவர்களாக இருக்கிறார்கள். ஆனால், ஸ்ரீராமகிருஷ்ணர் உலகிலுள்ள பலவேறு சமயவழி களையும் கடைப்பிடித்து, அவற்றின் வழியாக ஒரே கடவுளைப் பலவேறு வழிகளில் உணர்ந்த உணர்வின் அனுபவத்தின் மூலம் இதற்கான அடிப் படையை அமைத்துள்ளார்.

எல்லா மனிதர்களிடமும் இருப்பது ஒரே ஆன்மா என்பதை அவர் கண்கூடாகக் கண்டார். எனவே அவருக்கு உலகில் சிலர் உறவினர் என்றும், சிலர் அன்னியர் என்றும் இல்லை. எல்லோருமே அவருக்கு உறவினர். ஏனென்றால் பலவேறு நிறம், மொழி, இனம், சமயம் என்ற இத்தனை வேற்றுமைகளுக்கு இடையிலும், 'எல்லோரிடமும் இருப்பது ஒரே ஆத்மா' என்பதை அவர் நேரடியான அனுபவத் தின் மூலம் கண்ணாரக் கண்டறிந்தார். இந்தக் கண்டறிந்த உண்மைதான் ஒன்றுபட்ட உலகத்தை உருவாக்குவதற்கான அடிப்படையைத் தந்துள்ளது.

அனுபவத்தின் மூலம்

ஸ்ரீராமகிருஷ்ணர் இந்த அடிப்படை உண்மையை வெறும் படிப்பாலோ, சாஸ்திர ஞானத்தாலோ கூறவில்லை. தாம் நேருக்கு நேர் கண்கூடாகக் கண்ட காட்சிகளின் மூலமாகவும், அனுபவித்த அனுபவங்களின் மூலமாகவும் கூறியிருக்கிறார். 'மனித இனம் முழுவதும் ஒன்று' என்ற ஆராய்ச்சி, விஞ்ஞான அடிப்படையில், சமய உலகில் முதல் முதலாக ஸ்ரீராமகிருஷ்ணரால் செய்து காட்டி நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இன்றைய விஞ்ஞான உலகம் நாம் எதைச் சொன்னாலும் அதை ஏற்றுக் கொள்ளுவதற்கு நம்மிடம் அத்தாட்சியாகக் கேட்பது நேரடியான அனுபவத்தையும், நாம் பின்பற்றிய வழிமுறைகளையும்தான். ஸ்ரீராமகிருஷ்ணர் உலக ஒற்றுமைக்கான இந்தக் கொள்கையை வெறும் கற்பனையாலோ, தத்துவ விளக்கத்தாலோ அல்லது சமயப் புதிராலோ வெளிப்படுத்தவில்லை. தமது நேரடியான அனுபவத்தின், ஆராய்ச்சியின் மூலமாக இவற்றைக் கூறியிருக்கிறார்.*

இரண்டு சிறப்புக்கள்

எனவே, 'எல்லாச் சமயங்களிடையிலும் ஒற்றுமை', 'உலகம் ஒன்றுபடுதல்' என்ற இந்த இரண்டு கொள்கைகள் இன்றைய உலகிற்கு மிகவும் தேவை. அப்பொழுதுதான் மக்கள் அமைதியோடும் மகிழ்ச்சியோடும் வாழ முடியும். இந்த இரண்டையும் ஸ்ரீராமகிருஷ்ணர் நமக்குத் தந்துள்ளார்.

உலகில் இந்தியர், ஐரோப்பியர், ஆப்பிரிக்கர், அமெரிக்கர் என்று நாடுகளினால் பிரிக்கப்பட்ட எல்லா மக்களுக்காகவும், கிறித்துவர், முஸ்லிம், பௌத்தர், சைவர், வைணவர், சமணர் என்று பலவேறு சமயத்தால் பிரிவுபட்டிருக்கும் எல்லோருக்காகவும் ஸ்ரீராமகிருஷ்ணரின் ஆலயம் திறந்திருக்கிறது. எல்லா மக்களும் அவருடைய ஆலயத்துக்குள் செல்லலாம். அவரை வழிபடலாம். இங்கு வேறுபாடே இல்லை.

* ஸ்ரீராமகிருஷ்ணரின் இந்த அற்புதமான, மனத்தைச் சிலிர்க்க வைக்கும் ஆராய்ச்சியை அவருடைய வாழ்க்கை வரலாற்றில் காணலாம்.

உலக வரலாற்றில்

நாம் உலக வரலாற்றை ஆழ்ந்து பார்த்தோமானால், அதில் காணப்படும் ஒவ்வொரு மகத்தான நாகரிக காலமும், மகோன்னதமான சில சமயப் பெரியோர்களின் வாழ்க்கையாலும் உபதேசங்களாலுமே உருவாகி யிருப்பதைக் காணலாம். புத்தர் கால நாகரிக உயர்வு, கிறிஸ்துவ நாகரிக உயர்வு, இஸ்லாமிய நாகரிக உயர்வு முதலியன எல்லாம் புத்தர், கிறிஸ்து, நபிநாயகம் இவர்களின் வாழ்க்கையால் உருவானவைதாம்.

இன்றைய நவீன விஞ்ஞான உலகில் நாம் பெற்றிருக்கிற மகத்தான தெய்விகப் பெரியவர் ஸ்ரீராமகிருஷ்ணர். அவருடைய மகத்தான வாழ்க்கையும் உபதேசங்களும் நான் முன்பு சொன்ன 'எல்லாச் சமயங்களிடையேயும் ஒற்றுமை', 'மனித குலம் முழுவதும் ஆன்மாவின் அடிப்படையில் ஒன்றுபடுதல்' என்ற உன்னதமான கொள்கைகளை உருவாக்கியிருக்கின்றன.

நிலைநிறுத்தியிருக்கிறார்

அதோடு, 'உலகில் கடவுள் இருக்கிறாரா?' என்று கேட்கப்படும் கேள்விக்கு, 'கடவுள் இருக்கிறார்' என்பதை விஞ்ஞான அடிப்படையில், நேரடியான அனுபவம், அத்தாட்சிகளின் மூலம் ஸ்ரீராமகிருஷ்ணர் நிலைநிறுத்தியிருக்கிறார். இப்படி நிலைநிறுத்தியதன் மூலம், இன்று விஞ்ஞானத்தின் மாபெரும் வளர்ச்சியாலும் சாதனைகளாலும் 'கடவுள் என்று ஒருவர் இருக்கிறார்' என்ற நம்பிக்கையே குலைந்துபோன காலத்தில், கடவுள் இருப்பிற்கு உறுதியான வலிமையை அளித்துள்ளார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் தந்த இந்த உண்மைகள் புத்தம் புதிய வாழ்வையும் நாகரிகத்தையும் உருவாக்கி, அவற்றின் சிறப்பிற்கு உலகம் முழுவதும் கட்டியம் கூறும் ஆற்றலை நமக்குத் தந்துள்ளன. இதன் மூலம் நாம் 'கடவுளை நம்பு' என்று வெறுமனே பேசும் சகாப்தத்தின் முடிவிலும், 'கடவுளை இதோ இந்த வழிகள் மூலம் நீ பார்' என்று தெளிவாகக் கூறும் மற்றொரு சகாப்தத்தின் துவக்கத்திலும் நிற்கிறோம். இந்தச் சகாப்தத்தை உருவாக்கியவர் ஸ்ரீராமகிருஷ்ணர். ★

கைவல்ய உபநிஷதம்

'அண்ணு' சுப்ரமண்யம்

கைவல்ய உபநிஷத்தின் கருத்துக்கள் ஆங்காங்கே சில விளக்கங்களுடன் இங்கே தரப்பெறுகின்றன.

கைவல்ய உபநிஷதம் கிருஷ்ண யஜுர் வேதத்தைச் சேர்ந்தது என்று முக்திகோபநிஷத்தில் கூறப்பட்டிருக்கிறது. கைவல்ய உபநிஷத்தில் பிரம்மவித்யை ஆச்வலாயனருக்குப் பிரம்மாவால் உபதேசிக்கப்படுகிறது.

ஸ்ரீஆதிசங்கரர் பத்து உபநிஷதங்களுக்கு மட்டும் பாஷ்யம் இயற்றியிருக்கிறார். என்றாலும், அவர் வேறு சில உபநிஷதங்களையும் முக்கியமாகக் கையாளுகிறார். அவற்றுள் ஒன்றாகக் கைவல்ய உபநிஷதம் விளங்குகிறது.

'கைவல்யம்' என்பது 'ஸ்வருபப்ரதிஷ்டா' அல்லது தான் தானாகவே இருப்பதாகும். 'முக்திர் ஹித்வா அந்யதாருபம் ஸ்வருபேண வ்யவஸ்திதி:' என்று ஸ்ரீமத் பாகவதம் கூறுகிறது. அத்தகைய கைவல்யநிலையை அடைவதற்கு வழியைக் கூறுவதனால் இந்த உபநிஷதம் 'கைவல்ய உபநிஷதம்' என்ற பெயரைப் பெற்றிருக்கிறது.

முதல் கண்டம்

நிலையுள்ளனவும் நிலையற்றனவுமான பொருள் களைப் பற்றிய பகுத்தறிவு (நித்யாநித்ய வஸ்து விவேகம்); இந்த உலகங்களிலும் மரணத்திற்குப் பிறகு பெறப்படும் மேல் உலகங்களிலும் கர்மத்தின் பயனாக ஏற்படும் இன்பநுகர்ச்சிகளில் பற்றின்மை (இஹாமுத்ர - அர்த்தபலபோகவிராக:); சமம் தமம் உபரதி திதிக்ஷை சிரத்தை ஸமாதானம் என்ற ஆறு வகையான ஞானச் செல்வம் (சமாதி ஷட்க ஸம்பத்தி:); முக்தி அடையவேண்டும் என்ற ஆவல் (முமுக்ஷுத்வம்) ஆகிய இந்த நான்கு ஆன்மிகச் சாதனங்களும் கூடியதற்கு மேல், ஆச்வலாயனர் பகவான் பிரம்மாவை அணுகி, "பகவானே! சிறந்ததும், எப்போதும் நல்லோர்களால் நாடப் பெற்றதும், மறைவாக இருப்பதுமாகிய பிரம்ம வித்யையை உபதேசித்து அருளுங்கள்" என்று கேட்டுக்கொண்டார்.

பாட்டனாராகிய* பிரம்மா, "சிரத்தையாலும் பக்தியாலும் தியானயோகத்தாலும் அதை அடைவாயாக" என்று ஆச்வலாயனரிடம் கூறினார். பிரம்மா மேலும் அவருக்குக் கூறியதாவது :

கர்மத்தாலன்று, மக்களாலன்று, செல்வத்தாலன்று, தியாகத்தாலேயே சிலர் சாகாநிலையை எய்தியுள்ளனர். யோகமுயற்சி உள்ளவர்கள் எய்தும் அந்தப் பதவி, சொர்க்கத்தை விடவும் சிறந்ததாகவும் புத்திகுகையில் நிலைத்துப் பிரகாசிப்பதாகவும் விளங்குகிறது.

செம்மையான வேதாந்தஞானத்தால் நிச்சயபுத்தி உடையவர்களும், சன்னியாச யோகத்தால் பரிசுத்தமான அந்தக்கரணம் உடையவர்களுமான துறவிகளாகிய அவர்கள் எல்லோரும் பரம அம்ருதமாகிய பிரம்மத்தில் நிலைபெற்று (ஜீவன்முக்தர்களாகவே வாழ்ந்து) அந்திமகாலத்தில் (உடல் விழுந்தபிறகு) எல்லாவிதப் பற்றுகளிலிருந்தும் அறவே விடுபடுகிறார்கள்.

கடைசி ஆசிரமத்திலுள்ள சன்னியாசியானவன் தனிமையான இடத்தில் சுகமான ஆசனத்தில் அமர்ந்து, பரிசுத்தமானவனாக, கழுத்து தலை உடல் ஆகியவற்றைச் சமமாக நிறுத்தி, எல்லா இந்திரியங்களையும் அடக்கிப் பக்தியுடன் தன் குருவை முதலில் வணங்க வேண்டும்.

பிறகு, இதயகமல மத்தியில், அழுக்கற்றதும், பரிசுத்தமானதும், தெளிவானதும், துன்பமற்றதும், சிந்தனைக்கு எட்டாததும், வெளிப்படையாகத் தோன்றாததும், எண்ணற்ற வடிவம் கொண்டதும், மங்களமும் சாந்தமும் நிறைந்ததும், அழிவற்றதும்,

* உலகை வளர்த்த பிரஜாபதிகளுக்குப் பிதாவாகிய பிரம்மாவைப் பாட்டனார் என்று சொல்வது வழக்கம்.

பிரம்மாண்டங்களின் பிறப்பிடமும்; ஆதியும் நடுவும் முடிவும் இல்லாததும், ஒன்றேயாகியதும், எங்கும் நிறைந்ததும், அறிவும் ஆனந்தமுமே வடிவாகியதும், வேறு வடிவம் இல்லாததும், அற்புதமானதும் ஆகிய பரம்பொருளை, பரமசாந்தனும் நீலகண்டனும் முக்கண்ணனும் உமாதேவியுடன்* இருப்பவனும் பிரபுவுமாகிய பரமேச்வரனைத் தியானித்து உண்டாகிய உலகத்தின் உற்பத்தி ஸ்தானமும், எல்லாவற்றுக்கும் சாட்சியும், அறியாமை என்ற இருளைக் கடந்ததுமாகிய நிலையை அந்த முனிவன் அடைகிறான்.

அவனே பிரம்மா, அவனே சிவன், அவனே இந்திரன், அவனே அழிவில்லாதவன், உயர்ந்தவன், தன்னைத் தானே ஆள்பவன், அவனே விஷ்ணு, அவனே பிராணன், அவனே காலன், அக்கினி, அவனே சந்திரன்.

உண்டானதும், உண்டாகப்போவதும், என்றும் இருப்பதும், எல்லாமும் அவனே. அவனை அறிந்து ஒருவன் மரணத்தைக் கடந்து செல்லுகிறான். முக்திக்கு வேறு வழி இல்லை.

எல்லா உயிர்களிலும் தன்னையும், தன்னிடம் எல்லா உயிர்களையும் நன்கு கண்டு கொண்டு, ஒருவன் பரப்பிரம்மத்தை அடைகிறான்; வேறு எந்தக் காரணத்தாலும் அன்று.

தன்னைக் கீழ் அரணிக்கட்டையாகவும், ஓங்காரம் எனப்படும் பிரணவத்தை மேல் அரணிக்கட்டையாகவும் செய்து, ஞானத்தால் திரும்பத் திரும்பக் கடைந்து அறிவாளி பாவத்தைச் சுட்டெரிக்கிறான்.

மாயையால் மதியிழந்த ஜீவன் எவனோ அவனே உடலிலிருந்து எல்லாவற்றையும் செய்கிறான். பெண், அன்னம், பானம் முதலிய பலவகைப்பட்ட போகங்களால் அவனே விழிப்புநிலையில் திருப்தியை அடைகிறான்.

கனவுநிலையில் அந்த ஜீவன் தன் மாயையால் (அவித்தையால்) கல்பிக்கப்பட்ட ஜீவலோகத்தில் இன்பதுன்பங்களை அனுபவிப்பவனாகிறான். உறக்க நிலையில் அனைத்தும் ஒழிவடைந்தபோது அறியாமையாகிய இருளில் ஆழ்ந்து இன்பவடிவை எய்துகிறான். (அறியாமையாகிய இருளில் ஆழ்வதும், அதில் இன்பம் காண்பதும் ஆழ்ந்த தூக்கத்தின் லட்சணமாகும். அறியாமைதான் ஸுஷுப்திக்கும் சமாதிக்கும் உள்ள வேறுபாடாகத் திகழ்கிறது.)

மீண்டும் முற்பிறவிகளில் செய்த வினைகளின் கூட்டுறவால் திரும்பத் திரும்ப அதே ஜீவன் தூங்கியும் விழித்தும் முப்புரங்களிலும் (ஸ்தூல சூட்சும காரண சரீரங்களில்) விளையாடுகிறான். அவனிடமிருந்தே விசித்திரமான இந்த அனைத்தும் தோன்றியுள்ளது. எவனிடத்தில் முப்புரங்களும் ஒடுங்குகின்றனவோ அவன்தான் ஆதாரமாகவும், ஆனந்தமயனாகவும், பிளவுபடாத அறிவின் விழிப்புடையவனாகவும் உள்ள ஆத்மா ஆவான். (இங்கு நான்காவதாகிய துரீயநிலை சொல்லப்பெறுகிறது. இதில் மற்ற நிலைகள் ஒடுங்குகின்றன.)

இதிலிருந்தே பிராணனும், மனமும், எல்லா இந்திரியங்களும், ஆகாசமும், வாயுவும், அக்கினியும், அப்பும், அனைத்தையும் தாங்கும் பூமியும் உண்டாகின்றன.

எது பரப்பிரம்மமோ, அனைத்திற்கும் ஆத்மாவோ, உலகிற்குப் பெரிய இருப்பிடமோ, நுட்பத்திற்கும் அதிக நுட்பமானதோ, என்றும் இருப்பதோ அது நீயே; நீயே அது.

விழிப்பு, கனவு, உறக்கம் முதலிய பிரபஞ்சத்தை எது பிரகாசிக்கும்படி செய்கிறதோ 'அந்தப் பிரம்மம் நானே' என்று அறிந்து, ஒருவன் எல்லாவிதமான கட்டுகளிலிருந்தும் விடுபடுகிறான்.

மூன்று நிலைகளிலும் எது அனுபவிக்கப்படுவதாகவும், எது அனுபவிப்பவனாகவும் ஆகிறதோ, அவற்றிலிருந்து வேறாகவும் சாட்சியாகவும், கேவல அறிவு வடிவினனாகவும், என்றும் மங்கள வடிவம் கொண்ட சதாசிவனாகவும் இருப்பவன் நான்.

என்னிடமிருந்தே அனைத்தும் உண்டாகியிருக்கிறது. என்னிடமே அனைத்தும் லயமடைகிறது. இரண்டற்ற அந்தப் பிரம்மமாக நான் இருக்கிறேன்.

இரண்டாவது கண்டம்

அணுவுக்கும் அணுவானவன் நான்; அதுபோலவே பெரியவனும் நானே; பலவகைப்பட்ட உலகமும் நானே; நான் பழமையானவன்; உடல்களில் உறையும் புருஷன் நான்; ஈசன் நான்; பொன்போல ஒளிர்பவன் நான்; மங்கள வடிவினனாக நான் இருக்கிறேன்.

* நிர்க்குணப் பிரம்மஞானம் சித்திக்க, சகுணமூர்த்தியாகிய உமாமகேசுவரனைத் தியானம் செய்ய வேண்டும். 'உமா ஹைமவதீ' இந்திரனுக்கு ஞானத்தை அருளியதாகக் கேனோபநிஷதம் கூறுகிறது.

கைகளும் கால்களும் இல்லாத நான் நினைக்க இயலாத சக்தி படைத்தவன்; கண் இல்லாமல் காண்கிறேன்; அத்தகைய நான் காது இல்லாமல் கேட்கிறேன்; நான் அனைத்தையும் அறிகிறேன்; அனைத்திலிருந்து வேறான வடிவம் கொண்டவன்; என்னை அறிபவன் எவனும் இல்லை; எப்போதும் நான் அறிவு வடிவினனே.

அனேக வேதங்களால் அறியப்பட வேண்டிய வன் நானே; வேதத்தைச் செய்தவனும் வேதத்தை உணர்ந்தவனும் நானே. எனக்குப் புண்ணியமு மில்லை, பாவமுமில்லை. அழிவுமில்லை, பிறவியுமில்லை. உடலும் இந்திரியங்களும் புத்தியும் இல்லை.

எனக்குப் பூமியுமில்லை, நீருமில்லை, அக்கினியு மில்லை, காற்றுமில்லை, ஆகாசமுமில்லை.


இதயகுகையில் உறைபவனும், பகுக்கப்படாத வனும், இரண்டற்றவனும், அனைத்திற்கும் சாட்சி யும், காரியத்திற்கும் காரணத்திற்கும் (இருப்பதற் கும் இல்லாததற்கும்) அப்பாற்பட்டவனும் ஆகிய பரமாத்மரூபத்தை இவ்விதம் அறிந்து ஒருவன் பரி சுத்தமாகிய பரமாத்மரூபத்தையே அடைந்து விடுகிறான்.

எவன் சதருத்ரீயத்தை* அத்தியயனம் செய் கிறானோ அவன் அக்கினியால் பரிசுத்தமடைந்த வன் போலவும், வாயுவால் பரிசுத்தமடைந்தவன் போலவும், ஆத்மாவால் பரிசுத்தமடைந்தவன் போலவும் ஆகிறான். அவன் மதுபான தோஷத்தி லிருந்து பரிசுத்தியடைகிறான், பிரம்மஹத்தியி லிருந்து பரிசுத்தியடைகிறான், பொன்னைத் திருடிய திலிருந்து பரிசுத்தியடைகிறான். அதனால் (சிவனும் பார்வதியும் பிரளயத்திலும் விட்டு நீங்காத) அவி முக்தம்† என்ற பதவியை நாடியவனாகிறான். ஆசிர மங்களைக் கடந்தவன் எப்போதும் அல்லது (ஒவ் வொரு நாளும்) ஒரு தடவையாவது ஜபிக்க வேண்டும்.

பிறவிக்கடலை அழிக்கும் (வற்றச் செய்யும்) ஞானத்தை இதனால் ஒருவன் அடைகிறான். ஆகை யால் இவ்விதம் இதை அறிந்து ஒருவன் உயர்ந்த கைவல்யத்தை (தான் தானாய் நிற்கும் முக்தி இன் பத்தை) அனுபவிக்கிறான். உயர்ந்த கைவல்யத்தை அனுபவிக்கிறான். ☆

*சதருத்ரீயம் -ஸ்ரீருத்ரப்ரச்னம், யஜுர்வேதம். கைவல்ய உபநிஷதத்திற்குப் பாஷ்யம் இயற்றியுள்ள நாராயண தீர்த்தர் என்பவர் இதை 'ப்ரஹ்ம சதருத்ரீயம்' என்று கூறுகிறார். தைத்திரீய ஸம்ஹிதையிலுள்ள சதருத்ரீயத்தை ஸகுணப் பிரம்ம உபாசனை என்றும், கைவல்ய உபநிஷதத்திலுள்ளதை நிர்க்குணப் பிரம்ம உபாசனை என்றும் அவர் கொண்டிருக்கிறார்.

†அவிமுக்தம் -பிரளயகாலத்திலும் உமாமகேசுவரன் காசியை விட்டு நீங்காததனால் காசிக்கு 'அவிமுக்த க்ஷேத்திரம்' என்று பெயர். உடலில் புருவமத்திக்கும் அவி முக்தம் என்று பெயர். இங்கு ஆறு ஆதார சக்கரங்களில் ஒன்றாகிய ஆக்ஞா சக்கரம் இருக்கிறது. இந்த ஆக்ஞா சக்க ரத்தில் மனம் நிலைக்கும்போது ஞானம் அனுபவத்திற்கு வரு கிறது.



ஸ்ரீகிருஷ்ணனின் சிவபக்தி

ஸ்ரீகிருஷ்ணனைத் தோழனாகவும் வழிகாட்டியாகவும் கொண்டு வாழ்ந்த அர்ஜுனன் சிறந்த சிவபக்தனாக இருந்து, சிவபெருமானை உபாசித்து வந்தான். ஸ்ரீகிருஷ்ணரும்கூடச் சிறந்த சிவபக்தராக இருந்ததை ஹரிவம்சமும் கூர்ம புராணமும் பின்வருமாறு குறிப்பிடுகின்றன:—

பளிச்சென்று பிரகாசிக்கும் திரிபுண்டிரத்தைத் தரித்துக்கொண்டு உடல் முழுவதும் விபூதியில் வெளுத்தவராகவும், தலையில் சடையும் இடையில் மரவுரியும் அணிந்து, வேறு எந்தப் பேச்சையும் பேசாதவருமாகிய ஸ்ரீகிருஷ்ணர், சந்திரசேகரனாகிய சிவபெருமானை மனதில் இடைவிடாமல் தியானம் செய்துகொண்டு, பஞ்சாட்சரத்தை ஜபித்து வந்தார்.

—ஹரிவம்சம்

தேவகியின் மைந்தராகிய ஸ்ரீகிருஷ்ணர் எப்போதும் பாசுபதவிரதத்துடன் உடலில் எல்லா அங்கங்களிலும் விபூதிதாரணம் செய்துகொண்டும், ஸ்ரீருத்ராத்யாயத்தில் விசேஷமாக ஈடுபட்டவராகவும், பரமேச்வரனை ஆராதனம் செய்துகொண்டு இங்கு ஒரு வருடகாலம் வாழ்ந்தார்.

—கூர்ம புராணம்

கீதையும் மனித வாழ்க்கையும்

சுவாமி தபஸ்யானந்தர்



தெய்விகத்தைப் பெறுவதற்குக் கீதையில் சொல்லப்பெறுகிற ஆன்மிக விளக்கங்களும் வாதங்களும் நடைமுறையில் கடைப்பிடிக்க முடியாத, செயலுக்கு ஒத்துவராத, வெறும் வெற்றுச் சொல்லடுக்குகளோ, வாதங்களோ அல்ல. அவை வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்தவை. ஒவ்வொரு மனிதனும் கடைப்பிடிக்கக் கூடியவை. (கீதை 7-29)கடைப்பிடித்து அவற்றை நேருக்கு நேராக உணர்வதன்மூலம் நாம் மனிதப்பிறவி எடுத்ததன் மேலான குறிக்கோளை அடைகிறோம்.

கீதை கூறும் தருமம்

கீதை, 'ஒவ்வொருவரும் தங்களுக்கு வாழ்வில் இயல்பாக அமைந்துள்ள கடமைகளைச் சரிவரச் செய்வதே வாழ்க்கையின் மிக உயர்ந்த தருமம்' என்ற கொள்கையை மிகவும் அழுத்தமாகப் பற்றிப் பிடித்துக்கொண்டு உபதேசிக்கிறது. இத்தகைய கடமையைச் செய்ய முடியாமல் நிலைகுலைந்துபோன மிகப் பெரிய வீரனை அர்ஜுனனுக்கு இந்தத் தருமத்தை மிகமிக அழுத்தமாக அது வலியுறுத்து கிறது.

''அர்ஜுனா! இந்தப் போர்க்களத்தில் போர் வீரனை உனக்கு இயல்பான கடமையான போரைச் செய். போரில் நீ கொல்லப்பட்டால் சொர்க்கத்தை அடைகிறாய். வெற்றி பெற்றாலோ இந்தப் பூமியை ஆண்டு அனுபவிக்கிறாய். எனவே க்ஷத்திரியனை நீ உன் கடமையான போரைச் செய்'' என்று அவனுடைய இயல்பான கடமையைச் செய்யும்படி வற்புறுத்துகிறது.

ஆண்மை நிறைந்த போதனை

இதுதான் கீதையின் ஆண்மை நிறைந்த போதனை. இத்தகைய போதனையைத் தரும் கீதையில், 'போர் செய்யாதே, உயிர்களைக் கொல்லாதே, புண்படாதே, இறந்து போகாதே, துன்பத்தைக் கண்டால் பின்னடைந்து ஓடிவந்துவிடு' என்ற உபதேசங்கள் அறவே இல்லை. அத்தகைய போதனைகளை அது ஆதரிப்பதும் இல்லை.

அதே நேரத்தில் அளவுக்கு மீறிய அதிகார ஆசையையும் உலகப் பொருள்கள் மீது கொள்ளும் நாட்டத்தையும், அவை மனிதனை ஆன்மிக நாட்டத்திலிருந்து மிகமிகக் கீழான நிலைக்கு இழுத்துச் சென்றுவிடும் என்பதனால் மிகமிக வன்மையாகக் கண்டிக்கிறது. (கீதை, 2-44) அசுரத்தனமான ஆசைகளையும் மனநிலைகளையும் கீதை மிகமிகக் கடுமையாகக் கண்டிக்கிறது.

எதற்கு வாழ்க்கையை விரும்ப வேண்டும்?

வாழ்க்கையை அது நமக்குத் தருகிற புலன் இன்பங்களுக்காக விரும்பக் கூடாது. மனித வாழ்க்கையின் மிகவும் உயர்ந்த இலட்சியத்தை அடைவதற்கு அது வாய்ப்பைத் தருகிறது என்பதற்காக அதை விரும்ப வேண்டும். இந்த இலட்சியத்தின் மிகவும் உயர்ந்த நிலை ஜீவாத்மாவாகிய மனிதன் தன் கட்டுக்களான உடல் உணர்விலிருந்தும், புலன் உணர்விலிருந்தும் விடுபட்டு, ஈடுஇணையற்றவராகிய பகவானிடம் ஐக்கியப்பட்டு, அந்த ஐக்கியத்தில் பிறக்கும் ஆழ்ந்த அமைதியை அனுபவிப்பதில் அமைந்துள்ளது.

அந்த நிலையை அடையும்போது

கீதையின் கொள்கைப்படி மனிதவாழ்வின் இலட்சியம் பரம்பொருளான பிரம்மத்தோடு இணைகிற பிரம்மசித்தியாகும். இந்த நிலையை ஒருவன் அடையும்போது அவன் புலன்களுக்கு அடிமையாகிற நிலையிலிருந்து விடுதலை பெறுகிறான். எதைக் கண்டுமே, எதற்குமே ஒரு துளியும் அஞ்சாத மாவீரனாக மாறுகிறான்; முழுக்க முழுக்க உலகப் பற்றுக்களிலிருந்து விடுபட்டவனாகிறான்; நிறைந்து ததும்பும் தெய்விக இன்பத்தில் எப்போதும் மூழ்கிக்கொண்டிருக்கிறான்; உலகிலுள்ள எல்லா உயிர்களிடத்தும் கடல்போன்ற அன்புடையவனாகவும், எல்லோருக்கும் எப்போதும் அன்பு நன்மை செய்வதற்குத் தகுதியான, பகவானின் கையில் உள்ள ஒரு கருவியாகவும் அவன் மாறி விடுகிறான்.

இத்தகைய நிலையை ஒருவன் தன் வாழ்க்கையின் போக்கையும், மனநிலையையும், சரியான ஞானத்தின் மூலமும், சரியான செயல்கள் மூலமும்,

சிந்தனைகள் மூலமும் முழுக்க முழுக்க மாற்றிக் கொள்வதனால் மட்டுமே அடைய முடியும்.

மோட்சம் அல்லது விடுதலை

மேற்கண்ட நிலையை அடைந்து, மனிதன் பெறும் மென்மையான உள்ளத்தின் அணு ஒவ்வொன்றையும் சிலிர்க்க வைக்கிற அமைதிதான் மோட்சம் அல்லது விடுதலை. ஆன்மிக வாழ்வின் இலட்சியம் என்று சொல்லப்படும் பிறப்பு, இறப்பு அற்ற நிலை இந்த அமைதியோடு இணைந்து வருவதுதான்.

கீதை கூறும் இன்பம்

கீதையின் கருத்துப்படி இன்பம் என்பது புலன்களின்மூலம் உலகப் பொருள்களை அனுபவிப்பதில் இல்லை. புலன்களை அந்த பொருள்களின் மேல் செல்லாதபடி கட்டுப்படுத்துவதில்தான் இருக்கிறது.

உலக இன்பங்களின் மேல் அளவற்ற ஆசை கொண்டு, அவற்றைத் தேடி அலைவது பயனற்ற, தகுதியில்லாத செயல். ஏனென்றால், அவை நிலையானவையல்ல. பேரின்பம் என்று போற்றப்பெறும் அமைதியை அடைவதற்கான எல்லா வழிகளையும் அழித்துவிடுபவை அவை.

ஆனால், மோட்சம் என்பதோ, இந்த உலக இன்பத்திலிருந்து முற்றும் வேறுபட்டது; என்றும் மாறாதது; அழியாதது; எப்போதும் நிலைத்து நிற்பது. வாழ்க்கையின் இலட்சியமான ஆழ்ந்த அமைதியை எப்போதும் தருவது. அடுத்தடுத்து மனிதர்களுக்குத் தோன்றுகிற துன்பமயமான பிறப்பையும் இறப்பையும் நீக்குவது.

வாழ்க்கையில் ஒவ்வொருவனும் இந்த மோட்சத்தை—பிரம்மசமநிலையை—எதனாலும், யாராலும் கலக்க முடியாத, ஆழ்ந்த நடுநிலையான அமைதியைப் பெற வேண்டியது மிகவும் முக்கியமாகும்.

வாழ்க்கையில் ஒருவன் பெறுவதாகக் கூறப்படும் சொர்க்கம், நரகம், வினைப்பயன், இன்பதுன்பங்கள் எல்லாமே இந்தக் கலக்கப்பட முடியாத ஆழ்ந்த அமைதியோடு — மோட்சத்தோடு — பிரம்மசமநிலையோடு சேர்ந்து வருகிற நிலைகள்தாம்.

மோட்சத்தை அடைந்தவன்

இத்தகைய மோட்சம் அல்லது கலக்க முடியாத அமைதியை அடைந்தவனைக் கீதை 'ஸ்திதப்பிரக்ஞன்' (நிலையான அறிவு படைத்தவன்), 'திரிகுணாதீதன்' (மூன்று குணங்களையும் கடந்தவன்), 'பக்தன்' (கடவுளிடம் பேரன்பு கொண்டவன்), 'ஞானி' (பேரறிவு பெற்றவன்), 'யோகி' (கடவுளோடு ஒன்றியவன்) என்றெல்லாம் பலவாறாகப் பாராட்டுகிறது.

இத்தகைய ஜீவன்முக்தன் (உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும்போதே முக்தி பெற்றவன்) புலனடக்கம், பற்றற்ற தன்மை, எதையும் சரிசமமாகக் காணும் மனநிலை, எப்போதும் கடவுளையே சிந்தித்துக்கொண்டிருக்கும் மனம், மேலான—ஆழ்ந்த—யாராலும் கலக்க முடியாத—அமைதி (பரசாந்தி) முதலியவற்றை அவன் உயிரோடு வாழும்போது இந்த உலகத்திலும், இந்த உலகத்தை விட்டு நீங்கிய பிறகு எல்லாக் காலத்திலும் அடைகிறான்.


வாழ்க்கையில் ஒருவன் அடையக்கூடிய மிகவும் உயர்ந்த பேறு இதுதான். இந்தப் பேற்றை முன்பு கூறப்பட்ட மனிதனின் உண்மையான தெய்விக இயல்பையும், உலகம் முழுவதையும், உலகமாகவே அமைந்திருக்கிற பகவானின் இயல்புகளையும் உணர்ந்து, நேருக்கு நேராக அறிவதன் மூலமும் ஒருவன் பெற முடியும்.

கீதையில் கூறப்பட்டிருக்கும் தர்மமயமான, மனத்தத்துவமயமான போதனைகள் மனிதனின், உலகத்தின், உண்மையான இந்த இயல்புகளை நேருக்கு நேராக உணரப் பெரும் துணையாக விளங்குகின்றன; அதன் பயனாக மோட்சத்தை அடைய வழி செய்கின்றன. ★

கர்மஜாலங்களை உதறி எறிந்துவிட்டு, ஆத்மாவிலேயே ஆனந்திக்கிறவராக, ஜடர் போலவும், செவிடர் போலவும், குருடர் போலவும் யதிராஜர் ஒருவர் காட்டின் மூலைகளில் சஞ்சரித்துக்கொண்டிருக்கிறார்.

நீ நான் என்ற அபிமானத்தை விட்டு, பல விதமான ஜனங்களின் ஸதாசாரங்களை அனுமோதனம் செய்துகொண்டு, பரிசுத்த ஆனந்தக் கடலில் மூழ்கினவராக ஒருவர் சிறுவர் போல் சஞ்சரிக்கிறார்.

— ஸ்ரீசதாசிவப் பிரம்மேந்திரர்





புத்தர் சொன்ன கதை

நரேந்திரன்

புத்தர் பெருமான் சொன்னதாகப் பல கதைகள் வழங்கி வருகின்றன. ஜாதகக் கதைகள் எனப்படும் இந்தக் கதைகளில் புத்தர், தம்முடைய முற்பிறவிகளில் நடைபெற்ற பல நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறுகிறார். அவற்றுள் ஒரு கதை இங்கே கொடுக்கப்படுகிறது.

* * * * * *

ஒரு சமயம் பிரம்மதத்தன் என்ற அரசன் காசி நகரத்தை ஆண்டு வந்தான். அவனுக்குப் போதிசத்துவர் மகவாகப் பிறந்தார். பிறந்த குழந்தைக்கும் பிரம்மதத்தன் என்றே பெயர் சூட்டி சீராட்டி வளர்த்தார்கள்.

பிரம்மதத்தனுக்குப் பதினாறு வயது ஆயிற்று. அப்போது மன்னர் மகனைத் தட்சசீலம் என்ற இடத்திற்குக் கல்வி கற்க அனுப்பி வைத்தார். இளவரசனாகிய பிரம்மதத்தன் அங்கே சிறந்த முறையில் கல்வி பயின்றான். பின்பு காசிக்குத் திரும்பி வந்து தந்தையை வணங்கினான்.

மன்னன் மறைந்தபிறகு பிரம்மதத்தனுக்கு முடிசூட்டு விழா நடைபெற்றது. பிரம்மதத்தர் ஓர் அரசர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக அரசு செலுத்த ஆரம்பித்தார். தம்முடைய விருப்பம், தாம் சொல்வது போல்தான் அனைவரும் நடக்க வேண்டும் என்ற எண்ணமே இல்லாமல் அவர் நீதிமுறை தவறாமல் செங்கோல் செலுத்தினார்.

‘மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி’ என்பதற்கிணங்க, பிரம்மதத்தரின் அமைச்சர்களும் மன்னனின் வழியைப் பின்பற்றி நடந்தனர். ஆகவே நாட்டில் குடிமக்களிடம் அமைதியும் மகிழ்ச்சியும் பரிபூரணமாகக் கோவில் கொண்டிருந்தன.

மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்தார்கள்; நேர்மையாக வாழ்ந்தார்கள். ஆகவே நாட்டில் எந்தவிதக் குற்றமும் ஏற்படுவதற்கு வழியே இல்லாமல் போயிற்று. நாட்டில் திருட்டோ, கொலையோ, கொள்ளையோ ஏற்படாமற் போகவே நீதிமன்றங்களுக்கு வழக்குகள் வருவதே இல்லை. நீதிமன்றங்கள் தூங்க ஆரம்பித்தன. வழக்கம் போல அரசவை கூடும்; அமைச்சர்கள் வருவார்கள். ஆனால் புகார் செய்வதற்கு ஒருவருமே வரமாட்டார்கள்; அரசவை கலைந்துவிடும். இதுவே வழக்கமாக ஆகிவிட்டது. மருந்துக்குக்கூட ஒரு வழக்கு வரவில்லை. நீதிமன்றங்கள் கலைக்கப்பட்டன.

இந்த நிலையில் போதிசத்துவர் ஒருநாள், "நான் நீதிமுறை தவறாமல் செங்கோல் செலுத்துகிறேன். ஆகவேதான் மக்கள் நீதிமன்றங்களைத் தேடி வழக்குகளைக் கொண்டு வருவதில்லை. நீதிமன்றம் என்று ஒன்று இருப்பதாகவே மக்களுக்குத் தெரியவில்லை. நான் எங்காவது ஏதாவது தவறு இழைத்திருக்கிறேனா என்பதைத் தேடிக் கண்டுபிடிக்க போகிறேன். அவ்விதம் ஏதேனும் என்னால் மக்களுக்குத் தவறு இழைக்கப்பட்டிருந் தால், நான் உடனே என்னைத் திருத்திக்கொள்வேன்" என்று தமக்குள் நினைத்துக் கொண்டார்.

அதுமுதல் அரசர் அரண்மனையிலுள்ள ஒவ்வொருவரையும் தனித் தனியாக அழைத்துத் தம்மீது ஏதாகிலும் குற்றம்குறை இருந்தால் சொல்லும்படி கேட்டார். ஆனால், அனைவரும் மன்னரின் துதி பாடினார்களே தவிர ஒருவரும் வசை பாடவில்லை. போதிசத்துவர் தம்மிடமுள்ள பயத்தினால்தான் அனைவருமே இப்படிச் சொல்கிறார்கள் போல் இருக்கிறது என்று நினைத்து, அரண்மனையை விட்டு வெளியே சென்று விசாரிக்க தொடங்கினார். வெளியேயும் இதே கதைதான். மக்கள் மன்னரைப் போற்றினார்களே அன்றித் தூற்றவில்லை. அரசரும் நகரின் நான்கு கோட்டை வாயில் வரைச் சென்றும் விசாரித்துப் பார்த்தார். என்றாலும் யாரும் எந்தவிதமான குற்றத்தையும் சொல்லவில்லை.

பிறகு போதிசத்துவர் தம் அரசாங்கப் பொறுப்புகளை அமைச்சர்களிடம் ஒப்படைத்துவிட்டு, மாறுவேடத்துடன் ஒரேஒரு தேர்ப்பாகனுடன்கூடத் தேரில் ஏறிக் கொண்டு, கிராமபுறங்களுக்குச் சென்று விசாரிக்கப் புறப்பட்டார். தம்முடைய நாட்டின் எல்லை எதுவரையிலும் இருக்கிறதோ, அது வரையிலும் நாலாதிசைகளிலும் சென்று தேடியும் மன்னரைப் பற்றிக் குறை சொல்பவர் எவரையும் காண முடியவில்லை. தம் முடைய குற்றத்தைப் பற்றிக் கேட்க புறப்பட்ட அரசருக்குத் தமது புகழே பாடப் பட்டதைக் கேட்டுக் கேட்டு அலுத்துப் போய்விட்டது. ஆகவே அவர் தேரை அரண் மனையை நோக்கிச் செலுத்தும்படி சாரதியிடம் கூறினார். தேர் ராஜபாட்டையை நோக்கி ஓடத் தொடங்கியது.

போதிசத்துவரைப் போலவே, கோசலநாட்டின் மன்னராகிய மல்லிக்கும் சிறந்த அரசராக இருந்தார். அவரும் தம்மைப் பற்றிய குறையைக் கேட்கப் புறப்பட்டு எல்லா நாடுகளுக்கும் சென்றிருந்தார். எங்கே தேடியும் தம்மைப்பற்றிக் குறை சொல்பவர்களைக் காணாமல் மல்லிக்கும் தமது நாட்டை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தார்.

இரண்டு மன்னர்களும் குறுகலான பாதையைக் கொண்ட ஓர் இடத்தில் சந்திக்க நேர்ந்தது.

இரண்டு மன்னர்களும் சந்தித்துக் கொள்ள நேர்ந்த விதம் இதுதான்: வண்டி போகக்கூடிய சாலை இரண்டு ஆறுகளின் கரைகளுக்கு நடுவில் அமைந்திருந்தது. அந்த இடத்தில் சாலையில் ஒரு சமயத்தில் ஒரே ஒரு ரதம்தான் செல்ல முடியும். மற்றொரு ரதம் செல்ல வழி விடுவதற்கு அங்கே வசதி இல்லை. சிறிது நகர்ந்து கொடுத்தாலும் வண்டி ஆற்றில் விழுந்து விடும். இரண்டு ரதங்களும் ஒரே சமயத்தில் முன்னேறிச் செல்ல முடியாது. ஏதாவது ஒரு ரதம் பாதையை விட்டு விலகி, மற்றொரு ரதம் செல்வதற்கு வழி விடுவதைத் தவிர வேறு வழி இல்லை.

மன்னர் மலிக்கின் தேர்ப்பாகன் பிரம்மதத்தரின் தேர்ப்பாகனைப் பார்த்து, "உங்கள் தேரைப் பாதையிலிருந்து அகற்றுங்கள்!" என்றான்.

"இல்லை. உங்கள் தேரை நீங்கள்தாம் பாதையிலிருந்து அகற்ற வேண்டும். இந்தத் தேரில் அமர்ந்திருப்பவர் யார் தெரியுமா? காசியின் புகழ்மிக்க சக்கரவர்த்தி அமர்ந்திருக்கிறார்!" என்று பிரம்மதத்தரின் சாரதி பதில் கொடுத்தான்.

இதைக் கேட்டதும் கோசலநாட்டு மன்னரின் தேரோட்டி, "இல்லை, நீங்கள்தாம் எனக்கு வழிவிட வேண்டும். காரணம், கோசலநாட்டு மன்னர் இந்தத் தேரில் வீற்றிருக்கிறார்!" என்றான்.

இதைக் கேட்ட காசிமன்னரின் தேரோட்டி, 'இங்கும் ஓர் அரசர், அங்கும் ஓர் அரசர். என்ன செய்வது? என்று யோசித்தான். பிறகு ஒரு தீர்மானத்திற்கு வந்தான். அதாவது, இரண்டு மன்னர்களின் வயதையும் விசாரிப்பது, யார் வயதில் இளையவரோ அவர் மூத்த அரசருக்கு வழிவிடுவது என்று முடிவு செய்தான். உடனே விசாரித்துப் பார்த்தபோது, இரண்டு அரசர்களுமே சம வயதுடையவர்கள் என்பது தெரிய வந்தது. இப்போது என்ன செய்வது? மீண்டும் அவன் கோசலநாட்டின் சாரதியிடம், அந்த மன்னரின் நாட்டின் எல்லை, திறமை, செல்வம், புகழ், குடிப்பெருமை, குடும்பத்தின் சூழ்நிலை ஆகியவைபற்றி விசாரித்தான். இவற்றோடு இரண்டு மன்னர்களையும் ஒப்பிட்டுப் பார்த்து, யார் பெரியவரோ அவருக்கு மற்றொருவர் வழிவிட வேண்டும் என்று இரண்டு சாரதிகளும் முடிவு செய்தனர்.

அதன்படி விசாரித்துப் பார்த்ததில் இரண்டு அரசர்களின் நாட்டின் எல்லையும் முந்நூறு யோஜனை தூரம் உடையது என்பதும், திறமை, செல்வம், புகழ், குடிப்பெருமை, குடும்பததின் சூழ்நிலை போன்ற எல்லாவற்றிலுமே ஒருவருக்கு ஒருவர் எந்த வகையிலும் தாழ்ந்தவர் இல்லை என்பதும் தெரியவந்தன.

இதன்பிறகு, இரண்டு அரசர்களுக்குள் யார் சிறந்தவர் என்பதைத் தீர்மானித்து வழி விடலாம் என்ற முடிவுக்கு இரண்டு சாரதிகளும் வந்தனர்.

எனவே, காசி மன்னரின் தேர்ப்பாகன் கோசலநாட்டு மன்னரின் தேர்ப்பாகனிடம், "சரி, உங்கள் மன்னரின் நல்ல குணங்களைப் பற்றிச் சொல்லுங்கள்" என்றான்.

அதற்குப் பதிலாகக் கோசல அரசரின் தேரோட்டி, "எங்கள் மன்னர் மல்லிக் நல்லவருக்கு நல்லவர், கெட்டவருக்குக் கெட்டவர். நல்லவர்களை நல்லவிதமாக நடத்துவார்; கெட்டவர்களை கெட்ட வழியில் தண்டிப்பார். எனவே, இப்படிப்பட்ட சிறந்த மன்னர்தாம் முதலில் போக வேண்டும், நீங்கள் வழியை விடுங்கள்" என்று ஒரு கவிதையைக் கூறினான்.

அதற்குக் காசிமன்னரின் சாரதி, "ஓ, உங்கள் மன்னரின் புகழ் இவ்வளவுதானா? அப்படியானால் அவர் செய்த குற்றம் ஏதாகிலும் இருந்தால் சொல்லிவிடு" என்றான்.

ஆனால், கோசலநாட்டு மன்னரின் தேரோட்டியோ, "நான் எங்கள் மன்னரின் குற்றங்களைச் சொல்வதற்கு முன்னால், நீங்கள் உங்கள் மன்னரின் சிறந்த பண்புகளைப் பற்றிச் சொல்லுங்கள்" என்றான்.

அதற்குப் பதிலாகக் காசிமன்னரின் சாரதி, "எங்கள் அரசர் கடுமையான விஷயங்களை மென்மையான வழியிலும், கெட்டதை நல்ல வழியிலும் திருத்தக் கூடியவர். அவர் கருமிகளுக்கு ஏராளமாகத் தானம் கொடுப்பார்; பொய் சொல்பவர்களை உண்மையின் மூலம் நல்வழிப்படுத்துவார். அதாவது எங்கள் மன்னர் நல்லவருக்கும் நல்லவர், கெட்டவருக்கும் நல்லவர். ஏனென்றால் அவர் எல்லாவித மக்களின் மீதும் அன்பு மழை பொழிபவர். ஆகவே இப்போது சொல்லுங்கள், எங்கள் அரசரின் தேர்தானே முதலில் போக வேண்டும்?" என்ற கருத்தைக் கொண்ட ஒரு கவிதையைக் கூறினான்.

அந்தக் கவிதையைக் கேட்டதும் கோசலமன்னர் தம் தேரோட்டியிடம், "அப்படியானால் எல்லாவித மக்களின் மீதும் அன்புமழை பொழியும் காசி மன்னர்தாம் என்னைவிட உயர்ந்தவர். ஆகவே அவருக்குத்தான் வழிவிட வேண்டும்" என்று சொல்லிக் கொண்டே தம் சாரதியுடன் தேரிலிருந்து கீழே இறங்கினார்.

கோசலமன்னரின் சாரதி தன் தேரிலிருந்து குதிரைகளை அவிழ்த்துக் காசி மன்னரின் தேர் போவதற்கு வழி கொடுத்தான்.

காசிமன்னரும் கோசலமன்னரைப் பாராட்டி, "மேலும் மேலும் இது போன்ற நல்ல காரியங்களைச் செய்து உத்தம அரசராக விளங்குங்கள்" என்று வாழ்த்திவிட்டுக் காசிக்குத் திரும்பினார்.

காசிக்குத் திரும்பி வந்ததும் போதிசத்துவர், எஞ்சிய வாழ்நாள் முழுவதும் தான தர்மங்கள் செய்து ஏழை எளியவர்களுக்கும் திக்கற்றவர்களுக்கும் உதவினார். முடிவில் அவர் இந்த உலக வாழ்க்கை முடிவுற்றதும் சொர்க்கத்தின் விருந்தினராகச் சென்றார்.

கோசலமன்னர் தம் நீண்ட பயணத்தின் முடிவிலும் தம்மைப் பற்றிக் குறை சொல்பவர் எவரும் இல்லை என்று அறிந்து கொண்டார். அவரும் காசிமன்னரின் உபதேசப்படியே மேலும் மேலும் பல நல்ல காரியங்கள் செய்தார்; முடிவில் அவரும் இந்த உலக வாழ்க்கை முடிவுற்றதும் சொர்க்கத்தை அடைந்தார்.



நன்றி நவில்கிறோம்

விஜயம் சிறப்புமலருக்குக் கட்டுரைகளை வழங்கிய அன்பர்கள் அனைவருக்கும், விளம்பரங்களைத் தந்துதவிய நிறுவனங்களுக்கும் எமது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

ஆன்மிக உரையாடல்

சுவாமி துரியானந்தர்

அக்டோபர் 14

சுவாமி துரியானந்தர் தமது அறையில் அமர்ந்திருந்தார். சில சன்னியாசிகளும் பிரம்மசாரிகளும் உடன் இருந்தனர்.

சுவாமி துரியானந்தர் : என் சருமம் எப்படிச் சுருங்கியிருக்கிறது, பாருங்கள்! இது முதுமையின் ஓர் அடையாளம். யயாதி மகாராஜனுக்கு இதே அனுபவம் ஏற்பட்டது. ஒரு நாள் திடீரென அவனுடைய சதை சுருங்கிற்று, முடி நரைத்தது, உடல் சக்தி இழந்துபோயிற்று.

"எந்தப் பணியிலும் வெற்றிபெற வேண்டுமானால், அதுவே நம்முடைய லட்சியப் பணி என்ற ஈடுபாட்டை உண்டாக்கிக்கொள்ள வேண்டும். ஒரு வேலையில் இரண்டொரு நாளுக்கு மட்டுமே பிடித்தம் இருந்து, பிறகு அந்தக் கவர்ச்சி போய் அதை விட்டுவிடுவது என்பது சற்றும் சரியல்ல. பணி புரிவது எப்படி என்பதைச் சசி மகராஜ் (சுவாமி ராமகிருஷ்ணானந்தர்) தம் வாழ்க்கை உதாரணத்தால் காட்டினார். பதினாறு வருஷங்கள் அவர் ஒரே இடத்தில் இருந்துகொண்டு ஒரே மாதிரியான அன்றாட அலுவல் கிரமத்தையே பின்பற்றினார். சில சமயங்களில் அவருடைய சிரமம் மிகக் கடுமையாகும்போது ஸ்ரீராமகிருஷ்ணரையும் (விவேகானந்த) சுவாமிஜியையும் பலமான கண்டன மொழியில் திட்டுவார். ஆனாலும் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த பணியை அவர் விடவில்லை."

ஏ : 'ஞானம், பக்தி, கர்மம் (சுயநலமற்ற பணி), யோகம் இவற்றுள் எது தலைசிறந்தது?' என்று சுவாமிஜியிடம் (விவேகானந்தரிடம்) ஒரு முறை கேட்கப்பட்டது. அவர், "அதைப்பற்றிக் குழப்பிக் கொள்ளாதே. இவற்றில் எது உனக்கு விருப்பமாக இருந்தாலும் எடுத்துக்கொள். அதையே சிரத்தையுடன் உன்னால் இயன்ற முழு அளவுக்குப் பின்பற்று" என்றார்.

சுவாமி துரியானந்தர் : பணிக்காகவே பணி. உன் முழு மனமும் பணியில் நிலைநாட்டப்பட வேண்டும். அதுவே உன் குறிக்கோளாக வேண்டும். வாழ்வின் இருப்பு, முடிவு அனைத்தும் அதுவே ஆகவேண்டும். வெற்றி தோல்வியைக் கருதாதே.

அக்டோபர் 15

சுவாமி துரியானந்தர் தம்முடைய அறையில் சில சன்னியாசிகளுடனும் பிரம்மசாரிகளுடனும் அமர்ந்திருந்தார். அவருக்கு உடல்நலம் சரியாயில்லை. உரையாடல் பாலைப்பற்றித் திரும்பியது.

சுவாமி துரியானந்தர் : ஒரு சமயம் (சிறுவன்) உபமன்யுவுக்குப் பால் குடிக்க ஆசை ஏற்பட்டது. அவன் அப்போதுதான் அத்தை வீட்டிலிருந்து திரும்பியிருந்தான். அங்கேதான் அவன் பாலின் சுவை கண்டுவிட்டான். எனவே அன்னையிடம் பால் கொடுக்கச் சொல்லி வற்புறுத்தினான். அவள் ஓர் ஏழைக் கைம்பெண். மகனுக்குப் பால் வாங்கித் தரும் வசதி அவளுக்கு இல்லை. ஆனால் அவன் விடாமல் பிடிவாதம் செய்ததனால் அவள் அரிசி மாவைத் தண்ணீரில் கரைத்து, அதுதான் பாலென்று கொடுத்தாள். உபமன்யு அது அத்தை வீட்டில் சுவைத்த பொருளாக ருசிக்கவில்லை எனக் கண்டான். "இது பால்தான்" என்று தாய் சொல்லியும் அவன் நம்ப மறுத்தான். பிறகு அவள் அழுத வண்ணம், "நான் ஓர் ஏழை ஸ்திரீ. நான் பாலுக்கு எங்கே போவேன், என் பிள்ளாய்? சிவபெருமான்தான் செல்வம் தருபவர். அவரை நீ உன் பிரார்த்தனையாலும் நியம நிஷ்டைகளாலும் பிரீதி செய்வித்தால் அவரே உனக்குக் குறைவில்லாமல் பால் கிடைக்க வரம் அருளலாம்" என்றாள். உடனே உபமன்யு கடுந்தவம் மேற்கொண்டான். மகாதேவர் பிரசன்னமாகும் வரை தவமிருந்தான். அவர் அவன் வேண்டியவாறே வரம் ஈந்தார். உபமன்யு தவம் செய்தது இவ்வொரு சமயத்தில் மட்டுமில்லை; பிற்பாடும் வாழ்நாளில் நிரம்பத் தவமிருந்தார். மகாபாரதத்தில் கொண்டாடப்பெறும் மகரிஷிகளில் அவர் ஒருவர்.

ஸ்ரீகிருஷ்ணருக்குத் துவாரகையிலிருந்த பத்தினிகளுள் ஜாம்பவதி என்பவளுக்கு மகவு வாய்க்கவில்லை. ஒரு நாள் அவள் ஸ்ரீகிருஷ்ணரிடம் தன் வருத்தத்தை இப்படித் தெரிவித்தாள்: "தங்கள் கிருபையால் எல்லாருக்கும் புத்திர ஸந்தானம் அருளப்பட்டும், துர்ப்பாக்கியவதியான நான் மட்டும் விலக்காக மகவின்றி இருக்கிறேன். எனக்கும் புத்திரனை அளித்தருளுங்கள்." ஸ்ரீகிருஷ்ணர் சிறிது நேரம் தீர்க்க சிந்தனை செய்தார். பிறகு துவாரகையிலிருந்து புறப்பட்டுப் போய் உபமன்யுவிடம் சிஷ்யரானார். உபமன்யு அவருக்குத் தீக்ஷை கொடுத்தார். அவரது துணையின்கீழ் ஸ்ரீகிருஷ்ணர் சிவனைப் பிரீதி செய்யக் கடுந்தவம் புரிந்தார். பின்பு சிவனருளால் ஜாம்பவதி ஓர் ஆண்மகவைப் பெற்றெடுத்தாள். அவனுக்கு, சிவன் பெயரான ஸாம்பன் என்று பெயரிடப்பட்டது. பாருங்கள், கிருஷ்ணரும் கூடப் பிள்ளைக்காகச் சிவனை வழிபட வேண்டியிருந்திருக்கிறது! மகாபாரதத்தில் சிவ வழிபாட்டு மதம் பற்றிப் பல குறிப்புக்கள் உள்ளன. ஆகையால் சுவாமி விவேகானந்தர், 'மகாபாரதத்தின் தெய்வம் சிவனேயன்றி ஸ்ரீகிருஷ்ணனல்ல' என்பார்.

எனக்கு எருமைப் பால் பிடிப்பதில்லை. அது கொழுப்பை அதிகமாக்குகிறது. பசும்பால்தான் மிகவும் உத்தமமானது. குழந்தைப் பருவத்திலிருந்தே யுதிஷ்டிரருக்குப் பசும்பால்தான் பிடிக்கும்; துரியோதனனுக்கோ எருமைப் பால்தான் பிடிக்கும். அவர்களது குணவியல்பின் மாறுபாட்டை நீங்களே பார்க்கலாம்.

எத்தனை அற்பமானதாயினும் எந்தப் பொருளையும் வீண் செய்யலாகாது. எங்களில் ஒருவர் ஓர் எலுமிச்சம்பழத்தைச் சற்று அதிக ஆழமாக வெட்டி, அதனால் சாறு வீணாக ஒழுகச்செய்துவிட்டார் என்பதற்காக, குருமகராஜ் எப்படிக் கடிந்து கொண்டார் தெரியுமோ? உண்டு முடித்தபின் கலத்தில் சிறிது சாதம் மீதி இருந்தாலும் சசி மகராஜ் எரிச்சலடைவார்.

கே: ஆம், மகராஜ். இம்மாதிரி மீகுந்த சோற்றை நாய்களுக்குப் போட்டுவிடலாம் என்று யாரேனும் கூறினால் அவருக்குப் பொறுக்காது. "என்ன! பகவானுக்காக ஆக்கிய அமுதை நாய்களுக்குக் கொடுக்கவா?" என்பார்.

'எம்' உள்ளே வந்தார். சுவாமி துரியானந்தரை வணங்கிவிட்டுக் கீழே அமர்ந்தார்.

சுவாமி துரியானந்தர்: எப்படி இருக்கிறீர்கள்?

எம்: நலமாக இருக்கிறேன், மகராஜ். வாரணஸியைப் போல ஓர் இடமும் இல்லை. ஏற்கனவே அதன் மகிமைபற்றி நான் அதிகம் அறிந்திருக்கவில்லை. ஆனால் 'காசிகண்டம்' படித்தது என் கண்களைத் திறந்துவிட்டிருக்கிறது.

கே: ஆம், வாராணஸி மாதிரி ஓர் இடமும் இல்லைதான். இங்கு எவன் வசித்தாலும் அவனுடைய மனம் தன்னியல்பாகவே அமைதியாகி விச்வநாதனின் பாதத்தில் அடங்கி உறைகிறது. காலை மூன்று மணியிலிருந்தே இங்கே மக்கள், 'பிரபோ விச்வநாதா!' என்று கூவியபடிப் புறப்பட்டு விடுகிறார்கள்.

சுவாமி துரியானந்தர்: ஆம், இங்கு வசிப்பதென்பதே ஓர் ஆன்ம சாதனையாகும். இங்கே ஒருவர் தினமும் கங்கா ஸ்நானம் செய்து விச்வநாதர் ஆலயத்துக்குச் செல்ல வேண்டும். ஆனால் என் காலில் ஏற்பட்டுள்ள வலியால் நான் துர்ப்பாக்கியவசமாக விச்வநாதரிடம் சென்று வழிபட முடியாமலிருக்கிறது. அந்தக் கோவிலுக்கு நான் ஒரே ஒரு முறைதான் சென்று வந்தேன்.

எம்: தினந்தோறும் கோவில் செல்வது என்னிடம் உண்டாக்கிவிட்ட மனோபாவம் காரணமாக, ஒரு நாள் அதைத் தவறவிட்டாலும் எனக்கு மிகவும் துக்கமாகிவிடுகிறது.

சீடர்: என் துரதிருஷ்டம் பாருங்கள், அம்மாதிரி உணர்வு எனக்கு ஏற்படுவதே இல்லை. கோவிலுக்குப் போனாலும் அங்கே ஒரு கல் பாளத்தைத்தான் பார்க்கிறேன். வேறு எதையுமல்ல. உங்களுக்கு இருப்பது போன்ற எந்த ஆகர்ஷணமும் எனக்குத் தெரியவில்லை.

சுவாமி துரியானந்தர்: ஹா, என்ன சொன்னாய்? எல்லோரும் 'எம்'மைப்போல்தான் உணர்கிறார்கள். அதெப்படி நீ அவ்விதமில்லை?

சீடர்: எனக்கு அவ்வித உணர்வு இல்லாதபோது, இருப்பதாக நான் சொல்லிப் பயனில்லை. காலம் கணிக்க முடியாத தொன்மையிலிருந்து விச்வநாதரைக் காண்பதற்காக ஆணும் பெண்ணுமாக மக்கள் வாராணஸிக்கு வந்துகொண்டிருப்பதற்கு ஏதோ பொருள் இருக்க வேண்டுமென எனக்குத் தெரிகிறது. ஆயினும் என்னைப் பொறுத்த வரையில் எவ்வித ஆகர்ஷணமும் உணர்ந்தேனில்லை.

சுவாமி துரியானந்தர்: பக்தியினால் கண்ணீர் வடிக்க ஒருவனுக்கு இயலவில்லையாயின் அவன்

(தொடர்ச்சி—369-ஆம் பக்கம் பார்க்க)

சைவ சித்தாந்தம்

வாகீசகலாநிதி கி. வா. ஜகந்நாதன்

சிவத்தோடு சம்பந்தமுடையது சைவம். சித்தாந்தம் என்ருல் முடிந்த முடிபு என்று பொருள். இவற்ரேடு இரண்டறக் கலக்கும் முடிந்த முடிபைச் சொல்வது சைவ சித்தாந்தம்.

சைவ சித்தாந்தம் மூன்று பொருளை அநாதி நித்தியம் என்று சொல்கிறது. பரசிவமாகிய பரம்பொருளே பதி. உலகிலுள்ள ஜீவன்கள் பசு. அந்தப் பசுவைக் கட்டிப்போட்டுப் பிறப்பு இறப்புகளைப் பெறச் செய்து ஜீவயாத்திரையை நடத்தக் காரணமாக இருப்பது பாசம். பாசக்கட்டறுத்து இவற்ரேடு இரண்டறக் கலப்பதே முக்தி அல்லது வீடு. ஜீவர்களின் அல்லது பசுக்களின் லட்சியம், பாசத் தளையினின்றும் வீடுபட்டு இறைவனேடு ஒன்றி இன்பம் உறுவது. பாசத்தினின்றும் விடுபட்டு இன்பம் அடைவதால் அந்த இன்ப நிலைக்கு வீடு என்ற பெயர் அமைந்தது.

விடுதல் என்பதற்குத் தங்குதல் என்றும் விடுதலை என்றும் இரண்டு முக்கியமான பொருள்கள் உண்டு. இந்த உடம்பிலே தங்கி உயிர் வாழ்வதால் இது வாழும் வீடு. நாம் தங்கியிருக்கும் இல்லத்துக்கு வீடு என்ற பெயர் அந்தக் காரணத்தால்தான் ஏற்பட்டது. உடம்பு உயிருக்கு வீடு; விடுதி; உயிருக்கு வீடு முக்தி. இந்த உடலாகிய வீட்டை விட்டு இறைவனேடு தங்குவது முக்தியாகிய வீடு. கட்டுப்பட்ட ஜீவனைப் பெத்தன் என்பார்கள். பத்தம் என்ற வட சொல்லே தமிழில் பெத்தம் என்று வரும். பாசத்தால் கட்டுப்பட்ட ஆன்மாவைப் பெத்த ஆன்மா என்றும், அதனின்றும் விடுதலை பெற்ற ஆன்மாவை முக்த ஆன்மா என்றும் சொல்வர்.

வீட்டிலே பசுவைக் கயிற்ருல் கட்டிப் போடுகிரேம். அது போல இந்த உலகத்தில் பசுவாகிய உயிரைக் கட்டிப் போட்டிருப்பது பாசம்.

பதி விபுவாகவும், பாசத்திற்கு அகப்படாததாகவும், என்றும் சச்சிதானந்தப் பொருளாகவும், ஆன்மாவைக் கர்மவினைகளுக்கு ஏற்றபடி சுகதுக்கங்களை அனுபவிக்கும்படி ஆணை செலுத்துவதாகவும் இருப்பது. தனது கருணையினல் உயிர் வாழ்வதற்குரிய தனுவாகிய உடம்பையும், அதில் பஞ்சேந்திரியங்களாகிய புறக்கரணங்களையும், மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்னும் அகக்கரணங்களையும் அமைத்துத் தருவது அது. தன்னுடைய திருவருளால் பசுவை நடத்தி, நல்வினை தீவினைகளாகிய நெறியைக் காட்டுகிறது. தீவினைகளையே மிகுதியாகப் பண்ணும் ஜீவர்கள் நல்வினையை மிகுதியாகப் பண்ணித் தீவினைகளைக் கழித்துவிட்டால் அதற்கு இருவினை ஒப்பு உண்டாகிறது. கடன்பட்டவன் பொருள் சேர்த்து அந்தக் கடனை ஒழித்துவிடுவது போன்ற நிலை அது. கடன்பட்டவன் தண்டனை பெறுவதும், பொருள் சேர்ப்பவன் லௌகிகச் சுகங்களைப் பெறுவதும் உலகியல். அவ்வண்ணமே பாவம் மிகுதியானுல் இழிந்த பிறப்பை எடுத்து அல்லலுறுவதும், புண்ணியம் அதிகமானுல் தேவலுகை வாழ்ந்து இன்புறுவதும் பசுக்களுக்கு இறைவன் வகுக்கும் நியதி. இந்த நியதியையே ஊழ் என்றும் விதி என்றும் சொல்வார்கள். கலப்பு வினைகளை அனுபவிப்பது மனிதப் பிறவி.

இரண்டு வினைகளும் ஒத்து நடுநிலையில் பந்தமற்று இருக்கும் பசுவுக்கு உள்ள மலங்கள் பக்குவப்பட்டு உரம் குறைந்து நிற்கும். பாசத்தை மும்மலம் என்றும் சொல்வதுண்டு. ஆணவம், கன்மம், மாயை என்பவை மூன்று மலங்கள். ஆணவம் என்பது அநாதியாகப் பசுவோடு ஒட்டி வருவது; அதைச் சகஜமலம் என்பார்கள். ஆணவத்தோடு இரண்டறக் கலந்த ஆன்மா, மலங்களினின்றும் விடுபட்டு ஆணவமும் அகன்று நின்ருல், இறைவனேடு ஒன்றும் இன்பநிலை கிடைக்கும்.

"ஆணவத்தோடு அத்துவிதம் ஆனபடி மெய்ஞ்ஞானத்
தானுவினேடு அத்துவிதம் சாரும்நாள் எந்நாளோ?"

என்பது தாயுமானவர் வாக்கு.

கன்மமலம் என்பது வினைகள். நாம் செய்யும் நற்செயல்களாலும் தீய செயல்களாலும் விளையும் புண்ணிய பாவங்களே கன்மம் அல்லது வினையாகும். அது மூன்று வகைப்படும். சஞ்சிதம், பிராரப்தம், ஆகாம்யம் என்பவை அவை. பல பிறவிகளிலும் செய்து நம் கணக்கில் சேர்ந்த வினையின் மூட்டையே சஞ்சிதம். அவ்வளவையும் ஒரு பிறவி

யில் அனுபவித்துக் கழிக்க முடியாது என்று இறைவன் கருணையினால் இந்தப் பிறவியில் அனுபவிப்பதற்காக ஒரு பகுதியை ஒதுக்குகிறான். அதை அனுபவித்துக் கழிக்க வேண்டும். அதுதான் பிராரப்தம். ஊழ் என்றும், விதி என்றும் அதைச் சொல்வர்.

பிராரப்தவினை அனுபவித்துக் கழித்தே தீர வேண்டும். பழைய கடனைத் தீர்க்க வந்தவன் அதைத் தீர்த்துவிட்டு மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும். அப்படியின்றிப் புதிய கடனை வாங்குபவர்களும் உண்டு. அவ்வாறு வினையின் பயனை அனுபவிக்கப் பிறப்பெடுக்கும் உயிர்கள், அந்தப் பயனை அனுபவிப்பதோடு புதிய வினைகளையும் செய்து கடன் மூட்டையைப் பெருக்கச் செய்கின்றன. அப்படி இந்தப் பிறவியில் புதியதாகச் சேரும் வினைக்கு ஆகாம்யம் என்று பெயர்.

இறையருளை முன்னிட்டுப் பக்திசெய்து ஞானம் பெற்ற உயிர் இந்தப் பிறவியில் புதிய வினைகளை நினைந்து செய்வதில்லை. ஆகையால் ஞானிகளுக்கு ஆகாம்யம் இராது. பிராரப்தத்தை அனுபவித்துத் தீர்க்குமட்டும் அந்த உயிர் இங்கு வாழ வேண்டும். ஞானம் பெற்ற உயிருக்குப் பழைய மூட்டையாகிய சஞ்சிதம் இல்லாமற் போய்விடும். அதை அனுபவிப்பதற்கு வேறு பிறவி வேண்டும். ஞானிகள் இனிப் பிறப்பதில்லையாகையால் சஞ்சிதம் அவர்களை அணுகாது. விட்டை எரித்தவர்களுக்கு மூட்டைப் பூச்சி முதலியவற்றின் தொல்லைகளும் இல்லாமற்போவது போல, அவித்தையாகிய அஞ்ஞானத்தை அழித்து ஞானம் பெற்றவர்களுக்கு வரும் பிறவிக்கு உரிய ஆகாம்யமோ சஞ்சிதமோ தொல்லை கொடுப்பதில்லை. பழைய கடனை வஜா செய்துவிடுவது போல, சஞ்சிதகர்மத்தின் தொடர்பு அவர்களுக்கு இல்லாமற் போய்விடும்.

தனு கரண புவன போகங்களைப் பெற்ற உயிர் இந்த உலகில் வாழும்போது இறைவனை முன்னிட்டுப் பக்திசெய்து ஞானம் பெற வேண்டும். மற்றப் பிறவிகளைவிட மனிதப் பிறவி அறிவுடையதாதலால், மனிதன் தக்கது இது, தகாதது இது என்பதை உணர்ந்து தக்கனவாகிய செயல்களைச் செய்ய வேண்டும். முள்ளை முள்ளால் எடுப்பது போல இந்த உடம்பைப் பெற்ற பயனாக, இனி உடம்பைப் பெறாதபடி செய்துகொள்ள வேண்டும்.

> "பெற்றாலும் பிறந்தேன் இனிப் பிறவாத
> தன்மைவந்து எய்தினேன்"

என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடுகிறார். இந்தப் பிறவியே நம்முடைய கடைசிப் பிறவியாக இருக்கும்படி செய்ய வேண்டும். இந்தப் பிறவியோடு நம்முடைய ஜீவயாத்திரைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

அதற்கு உரிய நெறியைச் சைவ சித்தாந்தம் சொல்கிறது. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவை உயிர் முன்னேறுவதற்குரிய நான்கு படிகள். சரியையாவது நல்லொழுக்கம் உடையவனாய் இறைவனை வழிபட்டு ஆலய தரிசனம் செய்து புண்ணிய கர்மங்களைச் செய்வது. சரியை என்ற சொல்லுக்கு ஒழுக்கம் என்பது பொருள். எல்லா வகையான நற்செயல்களுக்கும் இது ஆதாரசுருதி போன்றது.

கிரியை என்பது செயல். இறைவனைத் தானே பூசிப்பதும் குருவை அடைந்து வழிபடுவதும் போன்றவை கிரியையுள் அடங்கும். நற்குண நற்செயல்களை உடையவனாகி, பதியிடம் அன்பு கொண்டு, இறைவனைப் பூசித்துத் தன் செயல்களையெல்லாம் சிவ சம்பந்தமாகச் செய்வது கிரியை. ஐம்பொறிகளுக்கும் உணவாக உள்ளவற்றிலெல்லாம் இறைவனுடைய தொடர்பை வைத்துக்கொள்ள வேண்டும். கண் என்னும் பொறியால் அவன் திருவுருவத்தைத் தரிசிப்பதும், அவன் அடியார்களையும் குருவையும் தரிசிப்பதும் கண்ணின் கிரியை. அவன் புகழைக் கேட்பதும், அடியார்களின் அறிவுரைகளைக் கேட்பதும், குருநாதனுடைய உபதேசங்களைச் சிரவணம் செய்வதும் செவியின் கிரியை. இறைவனுடைய பூசைக்குப் பயன்பட்ட நறுமணமலர்களையும் சந்தனம் முதலியவற்றையும் மோந்து இறை நினைவில் ஈடுபடுவது மூக்கின் கிரியை. இறைவனுக்கு நிவேதித்ததை உண்பதும், சத்துவ உணவுகளை நுகர்வதும், அடியார்களுக்கு உணவளித்து எஞ்சியதை உண்பதும் நாவின் கிரியை. அவனுடைய திருவுருவங்களைத் தொடுவதும், அவனடியார்களோடு இணைந்து பழகுவதும், நமஸ்காரம் செய்வதும் மெய்யின் கிரியை.

அடுத்தது யோகம். புறத்தே செய்த வழிபாடுகளை அகத்தே செய்வது யோகம். சித்தவிருத்திகளை ஒடுக்குவதற்குப் பயன்படுவது யோகம். மனம் என்னும் பொல்லாத மாடு பல விஷயங்களில் அலைந்து திரியாமல் இறைவனுடைய சம்பந்தமான பொருள்களையே சிந்தித்து நிற்பது யோகத்தின் முதற்படி. தன் மனம் போனபடி ஓடித் திரியும் ஒரு மாட்டை நீண்ட கயிற்றால் கட்டி ஒரு முளையை அடித்து

அதில் கட்டிவிட்டால் அந்த மாடு வழக்கம் போல் ஓடினாலும், இப்போது அந்த ஓட்டத்தில் ஒரு வரையறை ஏற்பட்டுவிடும். எவ்வளவு வேகமாக ஓடினாலும், அது முளையைச் சுற்றியே வட்டமாக ஓடும். வரவரக் கயிற்றின் நீளம் குறைந்து கொண்டே வரும். அது ஓடும் வட்டம் வரவரச் சிறிதாகிவிடும். கடைசியில் முளைக்கு அருகில் வந்து ஓடமுடியாத நிலையை அடையும். அவ்வாறு இறைவன் என்னும் முளையை அடித்து, அன்பு என்னும் கயிற்றைக் கட்டி, மனம் என்னும் மாட்டை ஓடவிட்டால், முதலில் அதன் ஓட்டம் ஒரு வரையறைக்குள் இருந்து, வரவரக் குறைந்து இறுதியில் ஓட்டமே நின்றுவிடும். சிவசம்பந்தமான எண்ணங்களில் உலாவும் மனம் நாளடைவில் சிவத்தின் அருகில் வந்து செயலிழந்து நின்றுவிடும்.

மனம் ஒருமைப்பட்டுச் செயலிழந்து நிற்கும்போது உயிருக்கு ஞானம் உண்டாகும். இது மெய், இது பொய் என்று அறிந்து மெய்யோடு ஒன்றி நிற்கும் தெளிந்த நிலையே ஞானம். நூல்களால் அறியும் அறிவையும் ஞானம் என்று சொல்வதுண்டு. அது பரோக்ஷஞானம் அல்லது அபரஞானம். அதனால் ஓரளவு அறிவு விளக்கம் பெறுமேயன்றித் தெளிவு பிறவாது. பலகாலும் மனத்தைப் பயிற்றும் யோகம் என்னும் மூன்றும் படியில் செய்யும் அப்பியாசங்களே மனத்தின் துடிப்பை அடக்கும் வழிகள்.

ஞானம் பெற்ற உயிர் தெளிவு பெற்றுச் சிவபரம் பொருளே என்றும் உள்ள உண்மையான நித்தியப் பொருள் என்பதை அனுபவத்திலே உணரத் தலைப்படும். நூலினாற் பெறும் நூலறிவு ரெயில்வே கால அட்டவணை போன்றது. கால அட்டவணையைப் படித்து இன்ன நேரத்தில் இன்ன வண்டி புறப்பட்டு இன்ன நேரத்தில் இன்ன ஊரை அடையும் என்று தெரிந்துகொள்ளலாம். அப்படித் தெரிந்துகொண்ட அறிவே பிரயாணம் ஆகாது. பயணம் செய்பவனுக்குத்தான் அந்த அறிவு உண்மையான பலனைத் தரும். வெறும் நூலறிவு பெற்றவன் ஞானியாக மாட்டான்.

"நூலறிவு பேசி நுழைவிலா தார்திரிக"

என்று காரைக்காலம்மையார் பாடுகிறார். நூலறிவு பெற்றவனும் பிறப்பிறப்புகளில் உழன்று திரிய வேண்டியவன்தான். பயிற்சி செய்து படிப்படியாக இறையருளனுபவத்தில் முன்னேறுகின்றவன்தான் நற்பயனை அடையலாம்.

ஞானம் என்னும் மேற்படியை அடைந்து மயக்கம் நீங்கித் தெளிவோடு இருப்பவன் இந்த உலகத்திலேயே ஆனந்த அனுபவத்தைப் பெறுகிறான். அவனை ஜீவன்முக்தன் என்று சொல்வார்கள். ஆன்மா சரீர சம்பந்தம் உள்ள மட்டும் ஜீவன் என்னும் பெயரைப் பெறுகிறான். அப்படி இருக்கும் போது இருவினை ஒப்பு உண்டாகி, மலங்களினின்றும் நீங்கினால் இறைவன் அருள் அவனிடத்திலே பதியும். இருவினை ஒப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் என்று இந்த மூன்று நிலைகளைக் குறிப்பார்கள். சத்தி என்பது இறைவனுடைய திருவருள். அது உயிரிலே பதிவதே சத்திநிபாதம்.



இந்த உடம்பில் இருக்கும்போதே சத்திநிபாதம் பெற்று, சுகதுக்கங்களுக்கு அப்பாற்பட்ட ஆனந்த அனுபவம் பெறுகிறவர்கள் ஜீவன்முக்தர்கள். சுகம் என்பதற்கு மறுதலை துக்கம். இந்த இரண்டும் மனத்திலே சார்வது. மனம் செயலற்றுப் போகும் போது சுகதுக்க உணர்ச்சி இராது. நெறிஞ்சி முள் குத்தினாலும் துடிதுடித்துப் போகும் ஒருவனுக்கு அறுவை மருத்துவம் செய்கிறார்கள். அவன் உடலில் உள்ள உறுப்பைக் கீறுகிறார்கள், வெட்டுகிறார்கள். அதற்கு முன்பு மயக்க மருந்தைக் கொடுத்துவிடுவார்கள். அந்த மருந்து மனத்தைச் செயற்படாமல் செய்துவிடுகிறது. அதனால் மற்றச் சமயங்களில் துன்பத்தை உண்டாக்கும் எதுவும் அப்போதைக்கு எந்த உணர்ச்சியும் உண்டாக்காது. இது செயற்கையாக நிகழச்செய்வது. ஆனால் ஞானம் என்னும் மயக்க மருந்தை உண்டவர்கள் இயற்கையாகவே

மனத்தின் அனுபவமாகிய சுகதுக்கங்களுக்கு அப்பாற்பட்டவர்களாக இருப்பார்கள். ஞானத்தை மயக்க மருந்து என்று சொல்வதைவிட மயக்கம் தீர்க்கும் மருந்து என்றுதான் சொல்ல வேண்டும். கெட்ட கனவைக் காண்பவன் திருடர்களால் அடிபட்டவனைப் போலத் துடிதுடிக்கிறுன். அவன் உடம்புகூடச் சில சமயங்களில் தூக்கிப்போடுகிறது. பூச்சாண்டி பயமுறுத்துவதாகக் கனவு கண்ட குழந்தை படுக்கையை நனைத்துவிடுகிறது. கனவு தீர்ந்து எழுந்தால், ''அப்பாடி!'' என்று ஆறுதல் பெருமூச்சு வருகிறது.

ஞானம் பெற்ற ஆன்மாவும் கெட்ட கனவினின்றும் விழித்துத் தெளிவு பெற்றவனைப் போலாகிறது.

மாயை என்பது உலகமெல்லாம் உண்டாவதற்குக் காரணமாக இருப்பது. அது சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை என்று மூன்று வகைப்படும். தத்துவங்கள் முப்பத்தாறு. சிவ தத்துவம் முதல் பிருதுவி தத்துவம் ஈருக உள்ளவை அவை. இவற்றின் சார்பாக உள்ளவை அறுபது தாத்துவிகங்கள். எல்லாவற்றையும் இணைத்து 96 தத்துவங்கள் என்பதும் ஒரு வழக்கு.

சுத்தமாயா புவனத்தில் சிவ தத்துவம் முதலியவை தோன்றுகின்றன. அசுத்த மாயையால், அவற்றின் கீழுள்ள சில தத்துவங்கள் தோன்றுகின்றன. பிரகிருதி மாயையால் உயிரோடு ஒட்டிய ஆன்ம தத்துவங்கள் தோன்றுகின்றன. தத்துவங்களெல்லாம் கழன்று மேலே போகப் போக மாயையின் வகைகளும் கழலும். இறுதியில் எந்த மாயை உயிருக்குக் கட்டை உண்டாக்கியதோ, அதுவே அதை இறைவனேடு சேர்க்க உதவும். அப்போது அதற்குத் திரோதாயி என்று பெயர். கட்டையையும் கல்லையும் கட்டிக்கொண்டு கடலில் விழுந்தவன் கீழே ஆழ்கிறுன். கல்லின் கட்டு நெகிழ்ந்ததால் மேலே வந்து அந்தக் கட்டையே தெப்பமாக உதவ அவன் கரையேறுகிறுன். அஞ்ஞான நிலையில் பிறப்பிலே அழுத்தும் மாயை, ஞான நிலையில் அவனுக்குத் தெப்பமாக உதவிக் கரையில் சேர்க்கிறது. சைவ சித்தாந்தத்தில் சிறப்பாக உள்ள பகுதி இது.

உயிர்களுக்கு மூன்று வகை உடல்கள் உண்டு. நாம் காணும் இந்தப் புறவுடல் பருவுடல்; ஸ்தூலசரீரம். இதனுள்ளே மனத்தை மையமாகக் கொண்ட உடல் நுண்ணுடல்; சூக்ஷ்மசரீரம். இவை காலத்துக்குக் காலம் மாறிவரும். ஆணவம் உள்ளவரைக்கும் உயிரோடு ஒட்டியிருக்கும் உடல் கருவுடல்; காரண சரீரம். சர்வப்பிரளய காலத்தில் எல்லா உயிர்களும் இறைவன் திருவடியில் ஒன்றுகின்றன. இறைவன் திருவடியில் ஒன்றுவதுதான் முக்தி. அப்படியானல் பிரளயகாலத்தில் எல்லா உயிர்களும் முக்தியை அடையும் என்று சொல்லலாமா? முடியாது. அப்போது உயிர்களுக்குச் சரீர சம்பந்தம் இருக்கும். அந்தக் காலத்தில் உயிர்கள் காரணசரீரத்தோடு இருக்கும். ஆதலால் சரீர சம்பந்தமுடையவைகளாகவே இருக்கும். எனவே முத்தியானந்தம் சித்திக்காது.

தேங்காயில் மேலே உரிமட்டை இருக்கிறது. அது போன்றது இந்தப் பருவுடல். மட்டையை உரித்த பிறகு தேங்காய் ஓட்டோடு இருக்கிறது. அந்த ஓடு போன்றது நுண்ணுடல்; சூட்சும சரீரம். ஓட்டையும் உடைத்து எடுத்துவிட்டால் தேங்காய்ப் பருப்பைக் காண்கிறோம். அப்போதும் அதன்மேல் மெல்லிய பழுப்பு நிறமான தோல் ஒன்று இருக்கும். அது போன்றது காரண சரீரம். பர்பி முதலிய தின்பண்டங்கள் செய்கிறவர்கள் அந்த மெல்லிய தோலையும் சுரண்டி விடுவார்கள். பிறகு தின்பண்டம் செய்து உண்பார்கள். உயிர் முக்தி பெறும்போது மூவகைச் சரீரங்களையும் விட்டு, இறைவனேடு ஒன்றி இன்பத்தை அடையும்.

உயிர் இறைவனேடு இரண்டறக் கலத்தலே முக்தி; அத்துவித நிலை இது. அத்துவிதம் மூன்று வகைப்படும். கேவலாத்துவிதம், சுத்தாத்துவிதம், விசிஷ்டாத்துவிதம் என்பவை அவை. மூன்றும் இறைவனேடு ஒன்றுபடுவதையே இலட்சியமாகக் கொண்டாலும் அவற்றிலே வேறுபாடு உண்டு. இப்போது வேதாந்திகள் என்றும் அத்வைதிகள் என்றும் உள்ளவர்கள் சங்கராசாரியார் பிரகாசப்படுத்திய கேவலாத்துவைதிகள். இறைவனேடு ஆன்மா ஒன்ருகவே கலப்பதைச் சொல்கிறவர்கள். விசிஷ்டாத்வைதிகள் முக்திநிலையில் சில வேறுபாடுகளைச் சொல்வார்கள். சுத்தாத்வைதம் என்பது ஒன்றும் இன்றி இரண்டும் இன்றி உள்ள அனுபவ நிலை. அதுவே சித்தாந்த முக்தி. பேரானந்தத்தில் ஈடுபட்ட ஆன்மா இறைவனேடு ஒன்றி நின்ருலும், இறைவனைப் போல விபுவாகவும், படைத்தல் முதலிய செயல்களைச் செய்வதாகவும் இராது. இன்பம் அனுபவித்துக்கொண்டு இருக்கும். இரண்டும் அல்லாமல் ஒன்றும் அல்லாமல் உள்ள நிலையாதலின் இரண்டற்ற நிலை என்ருர்கள்; ஒன்ரும் நிலை என்று சொல்வதில்லை.

பாலும் பாலும் கலந்தால் வேறுபாடின்றிக் கலந்து விடும். அதுவே கேவலாத்வைதம். பாலும் சர்க்

கரையும் கலந்தால் பாலோடு சர்க்கரை கரைந்து நிற்கும். சர்க்கரையைத் தனியே பிரிக்க முடியாது. ஆகையால் அந்த நிலையில் இரண்டு உண்டு என்று சொல்வதற்கில்லை. ஆனாலும் அதைச் சுவைக்கும் போது பாலின் சுவையும் சர்க்கரையின் சுவையும் தெளிவாகத் தெரியும். ஆதலால் அதை ஒன்று என்றும் சொல்வதற்கில்லை. பிரிக்க முடியாததால் இரண்டென்று சொல்வதற்கின்றி,வேறு வேறு சுவை தருவதால் ஒன்றென்று சொல்வதற்கின்றி உள்ள நிலை அது. அதுவே சுத்தாத்வைத நிலை.

ஜீவன்முக்தர்கள் மலமற்ற தூயவர்களானாலும் வாசனாமலம் வந்து தாக்க வாய்ப்பு உண்டாகையால் தம்மை அந்த மலம் தாக்காமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அடியார்களுடைய கூட்டுறவும் ஆலயதரிசனமும் அத்தகைய பாதுகாப்பாக இருக்கும். பரந்த வெளியில் விளக்கை ஏற்றி, இருள் நீங்குவதனால் பல பொருள்களைப் பார்க்கும் வாய்ப்பு நேர்ந்தாலும், அந்த விளக்கு அணையாமல் பாதுகாப்பது போல, ஜீவன்முக்தர்கள் வாசனாமலம் தாக்காமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அமைந்த சைவ சித்தாந்தக் கருத்துக்கள் பழங்காலம் முதலே இருந்து வருகின்றன. திருமூலர் திருமந்திரத்தில் அவற்றில் பலவற்றைக் காணலாம். தேவார திருவாசகங்களில் அவற்றின் கூறுபாடுகள் இருக்கும். பாலிலே வெண்ணெய் இருப்பது போல அவை அந்த நூல்களில் பரவியிருக்கும்.

அவற்றையெல்லாம் கடைந்து சைவசித்தாந்தக் கருத்துக்களை வெண்ணெய் எடுப்பதுபோல எடுத்துத் திரட்டிப் பன்னிரண்டு சூத்திரங்களாக்கி வழங்கினவர் திருவெண்ணெய்நல்லூரில் வாழ்ந்த மெய்கண்டார் என்ற ஆசாரியார். அவர் வழங்கிய சிவஞான போதம் சைவ சித்தாந்தத்துக்கு அஸ்திவாரம் போன்றது. பன்னிரண்டு சூத்திரங்களே அமைந்த அது கடலைப் போன்ற ஆழமுடையது. அதிலுள்ள கருத்தை விரித்துச் சிவஞானசித்தியார் என்ற அரிய நூலை அருளினார் அருணந்திசிவாசாரியார். பின்னும் விளக்கத்தைத் தந்த நூல் சிவப்பிரகாசம். அதன் பின் சைவ சித்தாந்த விளக்க நூல்கள் பல வந்துள்ளன. எல்லாம் மெய்கண்டார் அருளிய பன்னிரண்டு சூத்திரங்களடங்கிய சிவஞானபோதத்திலிருந்து தோன்றிய மரங்களாகவும், சோலைகளாகவும், ஆரண்யங்களாகவும் விளங்குகின்றன. ☆

(364-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கண்களில் எண்ணெயும் மிளகாய்ப் பொடியும் போட்டுக்கொண்டாவது நீர்விடலாம். ஸ்ரீ சைதன்யரின் காலத்தில் ஒருவர் உண்மையாகவே இவ்விதம் செய்தார். ஸ்ரீ சைதன்யர் ஸ்ரீவாஸரின் வீட்டில் சங்கீர்த்தனம் நடத்தியபோது எல்லோரும் பக்தியில் கண்ணீர் பெருக்கினார்கள். ஒருத்தரால் மட்டும் முடியவில்லை. அதற்காக அவர் மிகவும் வருந்தினார். அதனால் ஒரு நாள் கீர்த்தனம் நடைபெற்ற சமயம் அவர் கண்களில் மிளகாய்ப் பொடியை அப்பிக்கொண்டார். இது ஸ்ரீ சைதன்யருக்குத் தெரிய வந்ததும் அவர் ஓடிப் போய் அவரைத் தழுவிக்கொண்டார். அந்த மனிதருக்கு மிகுந்த பக்தி இருக்க வேண்டும், இல்லாவிட்டால் அழ இயலவில்லையே என்று அவர் இவ்வளவு துக்கித்திருக்கமாட்டார் என்று ஸ்ரீ சைதன்யர் கருதினார்.

கே: இவர் (சீடர்) மனச் சுத்தமாகச் சொல்கிறார். இவரும் விச்வநாதனிடம் கவரப்படாததில் தம்மைத் தாழ்வாக எண்ணி வருந்துகிறார் என்று நான் நிச்சயமாக எண்ணுகிறேன்.

சுவாமி துரியானந்தர்: (சீடரிடம்) நீயும் உணர்வாய், நீயும் உணர்வாய். அவனருளாலே இந்த உணர்வு தன்னால் உண்டாகும். ☆



சிவபெருமான் சிரிக்கிறார்!

திருமுருக கிருபானந்த வாரியார்

சிரிப்புப் பல சந்தர்ப்பங்களில் வரும். ஏதாவது ஓர் அதிசயத்தைக் கண்டால் சிரிப்பு வரும். கோபம் அதிகம் வந்தாலும் சிரிப்பு வரும்; சில சமயத்தில் துக்கத்திலும் சிரிப்பு வரும்; ஏளனமாகச் சிரிப்பதும் உண்டு; இவை யாவுமின்றித் தன்னை யாராவது ஒருவன் ஏமாற்றுவான் எனின் அவனைக் கண்டு ஓர் அறிஞன் சிரிப்பான். ''தம்பி! நீ என்னையே வந்து ஏமாற்றுகிறாயா? ஆ! நீ எங்கே? நான் எங்கே? உனக்கு எளிதில் நான் ஏமாறுகிறவனா? சுற்றி வளைத்துச் செம்புக்கு நாமம் போடுவது போல், நீ அவரை ஏமாற்றி, இவரை ஏமாற்றி, முடிவில் என்னையே ஏமாற்ற வந்து விட்டாயே? பேஷ்!'' என்று கூறிச் சிரிப்பான்.

ஆண்டவன் அகிலாண்டகோடிப் பிரம்மாண்ட நாயகன்; அவன் அடி பாதாளம் ஏழுக்கும் அப்பால் உள்ளது; அவன் முடி அண்டங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டது. மாலும் அயனும் தேடி அறிய முடியாத அடிமுடிகளையுடையவன். அண்டகோடி அனைத்தும் அவன் திருமேனியிலே அடங்கி நிற்கும் விசுவரூபன். ''ஏழண்டத்தப்பாலான்'' என்கிறார் அப்பர்.

ஆனால், அத்துணைப் பெரிய வடிவுடைய பெருமான் தன்னை நினைந்து அன்பினால் என்புருக அன்பு பெருகக் குழைந்து சிந்திப்பார் சிந்தையிலே அந்தச் சுருங்கிய இடத்தில் மெல்ல வளைந்து நுழைந்து வீற்றிருப்பான்.

> ''நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
> புக்கு நிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன்.''

அன்புக்கு இறைவன் கட்டுப்படுகிறான். இதயமாகிய குடிசையிலே நுழைந்துவிடுகிறான். ஆகவே, இறைவனை அடைவதற்கு மிகவும் எளிதான வழி உருகி நினைப்பதுவேயாகும். அவனை நினைக்கும் போது மனம் உருக வேண்டும். உருகியதற்கு அடையாளம் கண்ணீர் பெருக வேண்டும்.

> ''அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
> புன்கணீர் பூசல் தரும்''

என்பது திருக்குறள்.

ஆகவே, ''மலர்ப்பதத்தினில் உருகவும் இனியருள் புரிவாயே'', ''முருகன் குமரன் குகன் என்று மொழிந்து உருகும் செயல் தந்து உணர்வு என்று அருள்வாய்'' என்று அருணகிரிநாதர் ஆண்டவனை வேண்டுகிறார். உருகிய தங்கத்தில் இரத்தினக்கல் பதிவது போல், உருகிய உள்ளத்துள் இறைவனது மணிச் சேவடி பதியும்.

இங்ஙனம் உருகும் தன்மையின்றிப் பலர் பிறர் மெச்சுவதற்காகவும், தான் செய்யும் மறச்செயலை மறைக்கும்பொருட்டும் சிவலிங்கத்தை வைத்து அல்லது ஒரு திருவுருவத்தை வைத்து, நீர்வார்த்துப் பூவையிட்டு வணங்குவது போலப் பொய்ம்மையாக நடிப்பர்; அவர்களைக் கண்டு, திரிபுராதிகளின் முன் சிரித்த சிவபெருமான் மெல்லத் தமது பவழவாய் திறந்து சிரிக்கிறார்.

ஏன்? அவர் தலையில் கங்காநதி விளங்குகிறது. விண்ணுக்கு அடங்காமல் வெற்புக்கு அடங்காமல் மண்ணுக்கு அடங்காமல் வந்து கங்கையை-- நில்லாத நீர்வெள்ளத்தைத் தலையிலே முடிந்தவர். அந்தப் பெருமானுக்கு ஒரு செம்பு தண்ணீரை விடுத்தால் அவர் மகிழ்வாரா? மகிழ்வார். எப்படி மகிழ்வார்? தண்ணீரோடு கண்ணீரும் சேர்ந்து காதலாகிக் கசிந்து கண்ணீர் சொரிந்தால் அந்தப் பெருமான் மகிழ்வான். ''நறுங்கொன்றைப் போதில் உள்ளான்'' என்கிறார் அப்பர். கற்பக மலர்களால் கனகாதி பரமபதியை ஏதோ சில மலரால் அர்ச்சித்தால் அவன் அருள்பாலிக்கிறான். ஆனால் அன்பு இன்றி வெறும் டம்பமாகப் பூவை எடுத்து இட்டால்

அந்தத் தேவதேவன் அவர்களை நோக்கிச் சிரிக்கிறான்.

"அப்பனே! உலகத்தில் உள்ளவர்களை ஏமாற்றுவது போல் என்னையும் பொய்ம்மையாகப் பூவும் நீரும் கொண்டு ஏமாற்றப் பார்க்கிறாய். இவற்றை மெய்ம்மையாக அன்போடு கொடு. நான் ஏற்றுக் கொள்வேன் ஒரு உத்தரணி தண்ணீர் வார்த்து ஒரு பச்சிலையிடு; போதும். ஆனால் அகங்குழைந்து அன்போடு கொடு. உனது தீவினைகளைப் பூஜை என்ற போர்வையில் மறைக்கும்பொருட்டுச் செய்யாதே" என்று கூறிச் சிரிக்கிறான் சிவபெருமான்.

"பொக்க மிக்கவர் பூவும் நீரும் கண்டு
நக்கு நிற்பர் அவர்தம்மை நாணியே."

இது அப்பர் திருவாக்கு.

இறைவனை அடைவதற்கு, இறைவன் அருளைப் பெறுவதற்குப் பூவும் நீரும்தாம் சிறந்த சாதனம்.

நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டாய்; யாரறிவார்
சாநாளும் வாழ்நாளும் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளும் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே."

"ஏ நெஞ்சே! நெடுங்காலம் வாழ்வோம் என்று எண்ணற்க. சாகின்ற நாளும் வாழ்நாளும் அறியவொண்ணாதன. எந்தக் கணத்தில் மரணம் வருமோ அறியோம். மரணம் வருமுன் இறைவன் சரணம் அடைதல் வேண்டும். ஆதலினால் அந்தச் சரணத்தில் மலரிட்டு அர்ச்சனை செய். தலையினால் நிரம்பவும் பூக்களைச் சுமந்துகொண்டு கோயிலுக்குப் போ; அவன் புகழை, திருநாமங்களைக் காதாரக் கேள். நாவார அவன் நாமங்களை நவில். அப்படிச் செய்தால் நீ கடைத்தேறலாம்." என்று தம் நெஞ்சை நோக்கிக் கூறுகிறார் திருஞானசம்பந்தர்.

"புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண் டருள் புரியாநிற்கும்
எண்ணிலி பாவிகள் எம்மிறை யீசனை
நண்ணறியாமல் நழுவுகின் றாரே"

என்கிறார் திருமூலநாயனார். ஆனபடியால் இறைவன் திருவடியில் அன்போடு அகங்குழைந்து நீர்வார்த்து மலரிட்டு வணங்குதல் வேண்டும். அங்ஙனம் வழிபடாதார் வீணே அழிந்து மண்ணாய்ப் போகிறார்கள். "பல பச்சிலையால் எண்ணுண்டு சாத்த எதிர்நிற்க ஈசனை இருக்கையிலே மண்ணுண்டு போகுதையோ கெடுவீர் இந்த மானிடமே" என்று, மலரிட்டு வணங்காதாரைக் கண்டு இரங்குகிறார் பட்டினத்து சுவாமிகள்.

இறைவன் வாக்கும் மனமும் கடந்தவன். அடியார்பொருட்டு நாம் வணங்கும் மூர்த்தங்களில் எழுந்தருளுகிறான்.

அன்போடு மலர்களால் அர்ச்சிக்க வேண்டும். அர்ச்சனைக்கு உயிர் அன்பு.

அப்படி பந்தி பழுத்த மனத்தினர் அர்ச்சனை
மெச்சிய செச்சை மணிப் புயன்

என்பது அருணகிரிநாதரின் திருவாக்கு.

இத்தகைய பக்தியின்றி, சீலமின்றி, செம்மையின்றி, திருவருள் தாகமின்றி, பொய்ம்மையாகப் பூவும் நீரும் இட்டுப் பூசை செய்வோர் போல நடிப்பவர்களைக் கண்டு ஈசன் சிரிக்கிறான். இப்படி நமக்கு அறிவிக்கிறார் திருநாவுக்கரசு சுவாமிகள்.

நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவும் நீருங்கண்டு
நக்குநிற்பர் அவர்தம்மை நாணியே.

என்ன அழகாகப் பாடுகிறார்! ஆதலினால் கடைத்தேற வேண்டும் என்ற கருத்துடையவர்கள் பொய்ம்மையை விடுத்து, மெய்ம்மையை அடுத்து, உன்னதமான உள்ளத்துடன் பக்தியுடன் சித்தம் வைத்து நீர்வார்த்து மலரிட்டு வழிபடுவார்களாக. செந்நெறி வளர்க. ☆



மூவுலகிலும் ஒவ்வொருவனும் தான் இன்பத்தை அடைய வேண்டும் என்று தான் முயற்சி செய்கிறான். துன்பத்தை அடைய ஒருவரும் முயற்சி செய்வதில்லை. துன்பத்திற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன; ஒன்று—உடலையே நான் (ஆத்மா) என்று நினைப்பது. இரண்டாவது—அதையொட்டி உடலுடன் சம்பந்தப்பட்டவற்றில் என்னுடையது என்ற எண்ணம் கொள்ளுவது. அழிந்து போகும் உடலை நான் என்று நினைப்பதனால், உடலில் வியாதி ஏற்படும்போது இவன் துன்பப்படுகிறான். தன் உடலுடன் சம்பந்தப்பட்ட மனைவி மக்களை விட்டுப் பிரிந்தால் வருத்தப்படுகிறான். எதிரி அழிந்தால் துன்புறுவதில்லை.

—சதச்லோகி, சு. 15

தியான வேளையிலே....

எப்.ஜே.அலெக்சாண்டர்

தியானவேளையில் ஆத்மா தனக்குத் தானே சொல்லிக்கொள்வதாவது :—

சந்தடியற்ற இடத்தில்தான் சாந்தி நிலவுகிறது. நீ சாந்தியைப் பெற வலிமை உள்ளவனாக இருக்க வேண்டும். துறவு மனப்பான்மை என்னும் சக்தி வாய்ந்த பேரமைதியில் புலன்களின் அமளிதுமளி எல்லாம் அமிழ்த்தப்படும்போது சாந்தி நிலவும்.

இந்த உலகமாகிய வனாந்தரத்தில் நீ திரியும் ஒரு பிரயாணி. ஜாக்கிரதை! பாதையோரத்தில் விழுந்து மாண்டு மடிந்துவிடப் போகிறாய். தாமதிக்காதே, வழியில் தங்காமல் முன்னோக்கிச் செல். பாலைவனத்தில் செல்லும் வர்த்தகர்கள் கூட்டமாகச் சேர்ந்தும், வேண்டிய தண்ணீரை நிரப்பிக் கொண்டும் செல்லுவது போல, உன் பிரயாணத்திற்கு அனுகூலமாக நீ நல்ல எண்ணங்களையும் உயிர்சக்தி நிரம்பிய நம்பிக்கையாகிய தண்ணீரையும் சேகரித்துக்கொள்.

ஜாக்கிரதை! கானல்நீரைப் பார்த்துத் தண்ணீர் என்று நம்பி ஏமாந்துவிடாதே. அங்கே உன் இலட்சியம் இல்லை. வெளித் தோற்றங்களின் கவர்ச்சியைக் கண்டு ஏமாந்து போகாதே. இவற்றையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு, உன் உள்ளாராய்வு என்னும் ஏகாந்தமாகிய தனிமைக்கு அழைத்துச் செல்லும் பாதைகளின் வழியாகச் செல்.

நானாவிதம் என்ற வலையில் சிக்கிக் கட்டுண்டு கிடக்கும் பலரை நீ பின்பற்ற வேண்டாம். மகான்கள் தனியாகவும் வெவ்வேறாகவும், ஏகத்துவம் என்ற இலட்சியத்தை நோக்கிப் பிரயாணம் செய்யும் பாதைகளின் வழியாகச் செல்.

தைரியமாக இருப்பதற்குத் துணிந்திரு. முதல் முதலில் மேற்கொள்ளும் முயற்சியில்தான் முடிவில் பெறப்போகும் வெற்றி அடங்கியிருக்கிறது. முயற்சியில் வெற்றி பெறுவோமா மாட்டோமா என்ற மனச் சஞ்சலமே வேண்டாம். புனிதத்தில் குதித்து மூழ்கிவிடு. கடவுளாகிய பெருங்கடலில் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அமிழ்ந்து மூழ்கிவிடு. இரண்டறக் கலக்கும் தெய்விகத்தன்மைதான் அதன் முடிவு. பேரொளி பொருந்திய ஓர் அகண்ட ஜோதியின் ஒளிக்கிரணமே! இயற்கையின் நியதியில் தெய்விகத்தில் ஒன்றுபடுவதைத் தவிர உனக்கு வேறொரு முடிவும் இருக்கவே முடியாது.

விரைவாகச் செல்; இல்லாவிட்டால் பின்னால் வருந்தப் போகிறாய். ஜாக்கிரதை! அருள்தாகம், மகத்தான நம்பிக்கை என்ற குதிரைகளுக்குச் சாட்டையடி கொடுத்துத் தூண்டி முடுக்கி விரைவாக ஓட்டிச் செல். அவசியமானால் அதன் பொருட்டு உன்னை நீ எந்த அளவிற்கு வேண்டுமானாலும் சிரமப்படுத்திக்கொள்ளத் தயங்க வேண்டாம். உன் வழியை எதுவும் தடைப்படுத்தாமல் பார்த்துக்கொள். தற்செயலாக எது நேருகிறதோ நேரட்டும் என்று விட்டுவிடுவது உன்விதி அல்ல.

இலட்சியத்தை அடையப்போவது நிச்சயம் என்ற எண்ணத்துடன் ஆத்மாவின் வலிமையைக் கொண்டு முன்னோக்கிச் செல். நீ இறுதியில் சேர வேண்டிய இடம் ஸத்பொருள் (உண்மைப் பொருள், பிரம்மம்) என்பது நினைவில் இருக்கட்டும். சொல்லப் போனால், நீயேதான் அந்த ஸத்பொருளாக இருந்து கொண்டிருக்கிறாய். ஆகவே சுதந்திரமாக இரு! எல்லா விதமான பந்தங்களையும் அறுத்துத் தள்ளிக் காற்றைப் போலச் சுதந்திரமாக இரு!

ஆத்ம சாட்சாத்காரம் பற்றிய எல்லா மொழியிலும், வலிமை என்ற சொல்லைப் போல அவ்வளவு மதிப்பு வாய்ந்த சொல் வேறு ஒன்றுமில்லை. முதலிலும் முடிவிலும், எப்போதும் என்றென்றும், நீ வலிமையுடன் இரு. சொர்க்கங்களையோ நரகங்களையோ, தேவர்களையோ பேய்களையோ கண்டு நீ அச்சம் கொள்ளாமல் தைரியமாக முன்னோக்கிச் செல்வாயாக! உன்னை எதனாலுமே வெற்றிகொள்ள

முடியாது. கடவுள்கூட உனக்குத் தொண்டு செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்; ஏனென்றால் அவரேயான எந்தப் பொருள் உன்னிடம் உறைகிறதோ, அந்தப் பொருளால் அவர் ஈர்க்கப்படுகிறார்.

இவ்விதம் ஏகத்துவம் என்பதுதான் பரிசுத்தம் வாய்ந்த ஆழ்ந்த உள்ளாராய்ச்சியின் சாரமாக விளங்குகிறது; ஏனென்றால், எது உனக்குள் இருக்கிறதோ, எது நீயே ஆகிறாயோ அதுதான் கடவுள். உண்மையில் நீயே தெய்வத்தன்மை பொருந்தியவன்.

தத் த்வம் அஸி. ஹரி: ஓம் தத் ஸத்.

நீ நம்பவில்லையா? முதலில் உன்னிடமே நீ நம்பிக்கை கொள். உன் ஆத்மாவிலேயே உனக்கு நம்பிக்கை இல்லாவிட்டால் நீ எப்படிக் கடவுளிடம் நம்பிக்கை கொள்ள முடியும்? உனக்கு முக்தியைத் தேடுவதன்மூலம் உன்னை நீயேதான் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். 'தனக்குத் தானே உதவி செய்துகொள்பவனுக்குத்தான் கடவுள் உதவுகிறார்.'

உனது உண்மையான ஆத்ம சொரூபத்தைத் தெரிந்துகொண்டு அதை ஆன்மிக அளவுகோலால் அளந்து பார். நீ உடல் அல்ல. இதைத் தெரிந்து கொள். நீ எண்ணம்கூட அல்ல. எண்ணம் என்பது ஆத்மாவை உணர்வதற்கு உரிய வழி; ஆனால் தீர்க்க திருஷ்டியாகிய ஆத்ம சாட்சாத்காரம்தான் முடிவு. ஆகவே முடிந்த முடிவாக இருப்பது ஆத்ம சாட்சாத்காரமே ஆகும்.

கடைசிக் கட்டளை, 'மனிதனே! ஆத்மாவாகிய உன்னையே நீ அறிந்துகொள். மனிதா, உன் சொரூபத்தை அறிந்துகொள்!' என்பதுதான். நம்பிக்கை! நம்பிக்கை! அசையாத நம்பிக்கை! எல்லாமே நம்பிக்கையில்தான் அடங்கியிருக்கிறது. ஆத்மாவைக் குறித்து அபிப்பிராயம், கருத்து என்று மற்றவர்கள் சொல்கிறார்களே, அதைக் கண்மூடித்தனமாக நம்பிக் கேட்டுக் கொள்ளுவதாகிய குருட்டு நம்பிக்கை அல்ல—ஆத்மா, பரம்பொருள் என்று சொல்லப்படுவதைச் சுய வாழ்க்கையில் சாட்சாத்கரிப்பதனால் ஏற்படும் நம்பிக்கையை நீ பெற வேண்டும்.

சந்தேகப்படுவதைத் தவிரப் பாவம் வேறு இல்லை; விஷத்தை வெறுத்துத் தள்ளுவதைப் போல, சந்தேகத்தை வெறுத்துத் தள்ளக் கற்றுக் கொள்; சந்தேகப்படுவது மிகவும் பெரிய பலவீனமாகும்; பலவீனங்களுக்குள் முதலாக நிற்பது சந்தேகம் தான்.

உன் ஆத்மாவைச் சந்தேகிப்பது—இது, உண்மையில் தெய்வத்தையே நிந்திப்பது ஆகுமே! நீ ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம்—கடவுளுக்குக் கூடப் பயப்பட வேண்டாம்; ஏனென்றால் கடவுளிடம் அன்பு கொள்ள வேண்டுமே தவிர அச்சம் கொள்ள வேண்டாம். நீ உன்னிடமே எப்படி அச்சம் கொள்ள முடியும்? கடவுளோ, உன் ஆத்மாவாயிற்றே! கடவுளைத் தவிரப் பிரபஞ்சத்தில் வேறொன்றுமில்லையே! தத் த்வம் அஸி! நீ கடவுளாகவே இருக்கிறாய்! ஆகவே, "எழுந்திரு! விழித்துக்கொள்! போய்ச் சேர வேண்டிய இலட்சியத்தை அடையும் வரையிலும் நிற்காதே!" இதுதான் பெருமானாகிய குருவின் வேதவாக்கு! ●

நேர்மை

ஈச்வரசந்திர வித்யாசாகரரின் நாணயம் மிகவும் அலாதியானது, தனித் தன்மையானது. அவர் இறப்பதற்குச் சில ஆண்டுகளுக்கு முன், தம் சொந்த வரவு செலவுக் கணக்குகளைப் பரிசோதனை செய்தார். அவரிடம் இருக்க வேண்டிய இருப்புத் தொகையைவிடப் பன்மடங்கு அதிகமான தொகை இருப்பில் இருந்தது.



தாம் பள்ளிக்கூட இன்ஸ்பெக்டராக இருந்தபோது, அரசாங்கப் பணத்தை ஒரு வேளை வைத்துக்கொண்டுவிட்டோமோ என்ற சந்தேகம் அவருக்கு ஏற்பட்டது. உடனே, அக்கவுண்டன்ட் ஜெனரலுக்கு ஒரு கடிதம் எழுதி, தம்மிடம் இருந்த அதிகத் தொகையை அரசாங்கத்தின் சார்பாகப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொண்டார். இந்தப் பணம் எப்படி அரசாங்கத்துக்குப் பாக்கி என்பதை அக்கவுண்டன்ட் ஜெனரல் எவ்வளவோ முயன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை. என்றபோதிலும் வித்யாசாகரர் அந்தப் பணத்தை அவருக்கு அனுப்பி மனஅமைதி பெற்றார்.

—ஜி. பரமேச்வரன் பிள்ளை, Representative Indian (1897), பக்கம் 28.



செல்வம் எது?

'குகப்ரியை'

இது ஓர் அருமையான கேள்வி. இந்தக் கேள்விக்குப் பலர் பலவிதமாய் விடை கூறுவர். ஒருவர் சொல்வார்: "எது செல்வம் என்ற கேள்விக்கு விடை, செல்வம், செல்வம்தான். அதுதான் பொருட் செல்வம். பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை" என்பார். மற்றவர், "செல்வத் திருமகளின் அருள் வேண்டும். ஆனால் அதுவே செல்வமாகிவிடாது. வீட்டிலே செல்வம் நிறைந்திருந்து ஒரு மழலை இல்லாவிட்டால் அது எப்படி நிறைவாகும்? ஆகவே குழந்தைதான் செல்வம்" என்பார். "சரி, குழந்தை இருக்கிறது. அதற்கு அறிவு இல்லாவிட்டால் என்ன செய்ய முடியும்? ஆகவே அறிவுதான் செல்வம்" என்பார் மற்றொருவர். "சரி, குழந்தை, செல்வம், அறிவு மூன்றும் உண்டு. அந்தக் குழந்தைக்கு ஆரோக்கியம் இல்லாவிட்டால்? ஆரோக்கியம் தான் முதன்மையான செல்வம். அதனால்தான் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பார் இன்னொருவர். "செல்வம் என்பது சிந்தையின் நிறைவு. திருப்திதான் பெருஞ்செல்வம்" என்கிறார் மற்றொருவர். ஆனால் குமரகுருபரர் இதை ஏற்க வில்லை. "நுண் உணர்வு இன்மை வறுமை; அஃது உடைமை பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்" என்றார். நுண் உணர்வு எது? அன்பு, பக்தி, வாத்சல்யம் இவையே. இப்படிச் செல்வத்திற்கு எத்தனையோ விளக்கங்கள் சொல்லலாம்.

ஆனால் நம் முன்னோர் இவற்றையெல்லாம் ஏற்க வில்லை. ஒரு நாட்டின் பெருமையை மதிப்பிடுவதானால் அந்த நாட்டின் இலக்கியங்களை, அதிலும் முக்கியமாய்க் கவிதைகளையே மதிப்பது வழக்கம். கம்பர்பெருமான், ராமனுடைய புகழைச் சொல்லும் பொழுது 'கவியமை கீர்த்தியான்' என்றார். ஔவை யாரோ ஒரு தலைவனைப் பார்த்து, "பாடல் பெறுனே, பலர் மெச்ச வாழானே!" என்றார், பாடலுக்கு ஏற்றம் கொடுத்து. அது மட்டுமா? கம்பர் தமது சடகோபர் அந்தாதியிலே ஓர் அழகான பாடலில் இறைவனது புகழை எப்படிச் சொல்லுகிறார், பாருங்கள்:—

சேராதன உளவோ? திருச்சேர்ந்தார்க்கு வேதம் செப்பும்
பேராயிரம் திண்பெரும் புயம் ஆயிரம், நறைபெய்துழைத்
தாரார் முடிஆயிரம், நம் குருகூர்ச் சடகோபன் சொன்ன
ஆரா அமுதக்கவி ஆயிரம் அவ்வரியினுக்கே.

ஸ்ரீதேவியின் சேர்க்கையால்தான் ஸ்ரீமந்நாராயணனுக்குப் பெருமை. அவள் செல்வத் திருமகள்தான். அவளைவிட உயர்ந்தவை வேதம் என்ற பேரேட்டில் பதிந்த ஆயிரம் நாமங்கள். அவற்றைவிட உயர்ந்தவை தேன் சிந்தும் துளஸிதள மாலைகள். அவையே உயர்ந்தவை; அவற்றிலும் உயர்ந்தவை எவை தெரியுமா? நம்மாழ்வார் என்று பாராட்டப் பெற்ற குருகூர்ச் சடகோபன் மொழிந்த ஆராத அமுதமயமான கவிதை ஆயிரம் அந்த மகாவிஷ்ணுவுக்குக் கிடைத்தனவே, அதுதான் மிகமிக உயர்வு என்கிறார்.

பாரதியார் நாட்டைப்பற்றிப் பாடும்பொழுது, "தானத்திலே பரமோனத்திலே உயர் ஞானத்திலே அன்னதானத்திலே" என்றெல்லாம் சொல்லி வந்தவர், "கானத்திலே அமுதாக நிறைந்த கவிதையிலே உயர்நாடு எங்கள் பாரதம்" என்றார்.

இப்படிக் கவிதைக்கு ஏற்றம் கொடுப்பதைக்கூட ஞானசம்பந்தப் பெருமான் ஒப்பவில்லை. செல்வம் எது தெரியுமா?

செல்வ நெடுமாடம் சென்றுசேண் ஓங்கச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம்பலம் மேய
செல்வன் கழல் ஏற்றும் செல்வம் செல்வமே.

'கவிதைச் செல்வத்தினாலே செல்வனது திருவடிகளைத் தொழுகிற செல்வம் இருக்கிறதே, அதுதான் உண்மையான செல்வம்' என்று முடிவுகட்டிவிட்டார். இதைத்தான் நம் முன்னோர் பக்திச் செல்வத்தைக் கவிதைச் செல்வத்திலே புதைந்து நமக்கு வற்றாப் பெருஞ் செல்வமாக நிதிக் குவியலாக வழங்கியிருக்கின்றனர். அப்படிப்பட்ட அருமையான கவிதைச் செல்வத்திலே சிலவற்றைப் பார்ப்போம். நம்மவர் எல்லாம் தெய்வமயம் என்று கண்டவர்.

நிற்கின்றதெல்லாம் நெடுமால் என்று ஓராதார்
கற்கின்றதெல்லாம் கடை

என்று இகழ்ந்துவிட்டார் ஆழ்வார். 'பார்க்கின்ற மலருடு நீயே இருத்தி அப்பனிமலர் எடுக்க மனமும் நண்ணேன்' என்ருர் தாயுமானுர். நம்மைச் சுற்றி யுள்ள எல்லாமே தெய்வசம்பந்தம் பெற்றவை. காலேயில் எழுந்ததும் கதிரவன் உதயம்.

கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணேந்தான்
கன இருள் அகன்றது

என்று பாடி வரவேற்பர். கதிரவன் நமது தெய்வம். சூரியநாராயணன் என்று போற்றிப் பொங்கலிட்டுக் கும்பிடுகிருேம். பாலேப் பொழிந்து தரும் பசு நமக்குத் தெய்வம். கோமாதா என்கிருேம். வீட்டைக் காக்கும் வாயிற்படிக்குக் குங்குமம் அப்பிக் குளிர் சாந்தம் வட்டித்து வழிபடுவதைத் தமிழ்நாடு முழுவதும் காணலாம்.

நம்மை வாழ்விக்கும் நதிகள் தெய்வம். காற்றும் தெய்வம், வருணனும் தெய்வம். இப்படி நாற்புறமும் தெய்வத்தின் சூழலிலேயே நாம் வாழ்கிருேம்.

ஆனுல் கவிஞர்கள் நம்மைவிட ஒரு படி முன்னே சென்றுவிடுகிருர்கள். இயற்கை முழுவதும் அற்புதமாகக் காட்சி தருகிறது அவர்களுக்கு. அதோ ஒரு புதுமைக் கவிஞர், மலேப் பகுதியிலே நடந்து போகிருர். அந்தி மயங்கும் நேரம். வானத்திலே மலேமுகட்டிலே பிறை தெரிகிறது. மலேயையே சிவபெருமானுகப் பார்க்கிருர்.

வானவெளிதனிலே கவிந்தெழும் மாலேப் பொழுதினிலே
கூனப் பிறை வரவே சிவன் திருக்காட்சி வியப்பேனடி!

உமையும் சிவனும் அமர்ந்திருக்கும் கோலத்திலே மலேமுகடுகள் ஜடாமகுடமாகவும் அதன்மேல் இளம் பிறை அணிந்த தருணேந்துசேகரனுகக் காட்சி தெரிகிறது. அவரது நெஞ்சம் ஆனந்தமிகுதியினுல் விம்முகிறது. அடுத்தபடியாக மேட்டுநிலம் வருகிறது. அதிலே தினேப்பயிர் வயல்கள், மயில்கள் கூட்டம் கூட்டமாகத் தானியக் கதிர்களே அபகரிக்க ஓடி வருவது தெரிகிறது. அங்கே என்ன கண்டார்?

மேட்டு நிலங்களிலே தினேக்கதிர் விம்மி விளேகையிலே,
காட்டுமயில் வரவே குகனும் என் காதல் விளேப்பாரடி.

அங்கே பாலவேலன் அந்தத் தினேப்புனத்தின் நடுவே தண்டையும் சிலம்பும் குலுங்க, சுருண்டு இருண்ட குழல்கள் அசைய, புன்முறுவலுடன் வேல் கையில் ஏந்தி அடியிட்டு மெல்ல மெல்ல நடந்து வருகிருன். அந்த அற்புதக் காட்சி அவரது கவிதைக்கு ஊற்றுகிச் சுரக்கச் செய்கிறது. அன்று அதோடு மெய்சிலிர்த்து நின்றுவிடுகிருர்.

ஊரை அடுத்து அழகிய நீர்நிலே. அதிலேதான் என்ன தாமரைகள்! காலேக்கதிரவன் உதிக்கும் பொழுது அங்கே சென்ற கவிஞர் அந்த மலர்களின் அழகிலே சொக்கி நின்றுவிடுகிருர். கதிரவன் மெல்ல மெல்ல எழுகிருன். மலர் இதழ்விரிய ஆரம்பிக்கிறது. கதிரவனது பொற்கிரணங்கள் அந்த மலர்க் கதவுகளேத் தட்டுகின்றன. செந்தாமரைமகள் முகமலர்கிருள்.

தாமரைப்பூவினிலே கதிர்ஒளி தட்டும் அவ்வேளேயிலே

என்ன தெரிகிறது? சூரியநாராயணன் காதலியைத் துயிலுணர்த்தும் அற்புதச் சௌந்தரியம். பூ மலர்ந்து நீர்மட்டத்திற்கு மேலே குத்துவிளக்குப் போல் உயர்கிறது. கவிஞரது ஆனந்தம் எல்லேமீறுகிறது.

தாமரைப் பூவினிலே கதிரொளி தட்டும் அவ்வேளேயிலே,
பூமலர்ந் தோங்கிடவே ஹரியென்று போதம் நயப்பேனடி!

என்று, ஹரி, சாக்ஷாத் மகாவிஷ்ணு அங்கே அந்த மலரணேயிலே ஸ்ரீரங்கநாதனுகப் பள்ளிகொண்டிருக்கும் ரூபசௌந்தர்யத்திலே மனதைப் பறிகொடுத்து மெய்ம்மறந்து நின்றுவிடுகிருர். இத்தகைய அற்புதக் காட்சிகளேத் தமிழ்நாட்டிலேயன்றி வேறு எங்கே காண முடியும்?

அங்கிருந்து திரும்ப மனம் வருமோ? ஆழ்வார்கள் கண்ட அழகுத் தெய்வம் கண்களுக்கெதிரில் புலனுகிவிட்டால் வேறு என்னதான் வேண்டும்? 'தில்லேவெளியிலே கலந்துவிட்டால் அவர் திரும்பவும் வருவாரோ?' என்று நம்மைத் திகைக்க வைக்கிருர் கவிஞர்.

இயற்கையின் ஒப்புயர்வற்ற சௌந்தர்யம் யாரைத்தான் வசீகரிக்காது?

அழகிய கடற்கரை; மயிலேக் கடற்கரை. காலேயில் கதிரவனே வரவேற்கவே செல்லுகிருர் புதுமைக் கவிஞர். கடலில் அலேகள் குறைந்து ஒரே பசுமையாய் நீலமாய் மாறி மாறிக் காட்சி தருகின்றன. வைத்த கண் வாங்காமல் அதையே பார்த்துப் பார்த்துக் கண்மூடி மௌனியாகி நிற்கிருர். பின் சற்று நேரத்தில் கதிரொளி கண்களேத் திறக்கத் தூண்டுகிறது. கண்களே மலர விழிக்கிருர். ஆச்சரியம் பன்மடங்காகிறது. பாடல் எப்படித் துள்ளி வருகிறது, பாருங்கள்!

முற்றிய ஆழியிலே அலைவந்து மோதி எறிகையிலே
கற்றைக் கதிர் எழவே உமைதிருக் காட்சி வியப்பேனடீ!

முற்றிய ஆழி! அப்படி விம்மித் தேங்கி அதிலே அலையெறியும் காட்சி. சூரியோதயம் அன்னையின் மணிமுடியாக, பச்சைப் பசும் பட்டாடை தரித்த பேரழகியாகத் தேவி மெல்ல மெல்ல எழுந்து வருகிறாள். உதிக்கிற செங்கதிர், உச்சித் திலகமல்ல. இங்கே மணிமுடியாகவே அந்த ஸுதாஸாகரத்திலிருந்து தோன்றுகிறாள் அன்னை கற்பகவல்லி. அவளுடைய பேரழகை எந்தக் கவிஞர்தாம் முற்றும் வருணிக்க முடியும்? அன்னையின் கருணைப்பெருக்கு அவர்மீது ஒரு திவலை விழுமோ?

இதே காட்சியைத்தான் இராமலிங்க அடிகளார் இதே கடற்கரையில்,

சீர்திகழ் தோகை மயில் மேலே—ஒரு
செஞ்சுடர் தோன்றும் திறம்போலே

என்று பாடியிருக்க வேண்டும். இவருக்கு அன்னையின் காட்சி; அவருக்குச் செல்வமுருகனின் காட்சி. இப்படிப்பட்ட அற்புதமான காட்சிகள் எல்லோருக்குமே கிடைக்க வேண்டும். கிடைத்த அற்புதங்களை வாரி வாரி வழங்கவும் வேண்டும். அந்தக் காட்சிகளுடன் ஒன்றிவிட வேண்டும், கண்டு கண்டு மகிழ வேண்டும் என்பதுதானே வாழ்க்கையின் குறிக்கோள்? கவிஞனது குறிக்கோளும் அதுவேதான். யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பது போல், 'ஏழிசையாய் இசைப்பயனாய் விளங்கும் செல்வன் கழலிணைகளைக் கவிதைவடிவான பண் சுமந்த பாடல்களால் ஏத்தும் செல்வம்தான் செல்வம்' என்ற ஒலி நமது செவிகளுள் ஒலிக்கிறது. மனக்குகையிலே ஒளிக்கீற்றாய் மின்னி நம்மைப் பேரின்பப் பெருவீட்டிற்கு இரண்டறக் கலக்கச் செய்யும், பக்தி வேறு, முக்தி வேறு அல்ல. வழியும் அதுவே, பயனும் அதுவே என்று முடிவு செய்கிறார் ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதர்கள் தமது சிவானந்த லஹரியிலே.

என்றைய தினம் வைராக்கியம் ஏற்படுகிறதோ, அன்றைய தினமே சன்னியாசம் செய்து கொள்ள வேண்டும்.

—ஜாபாலோபநிஷத்

இந்த மானிடப்பிறவி போய் மறுபிறவியில் பசு முதலியவற்றின் உடலை அடைந்தோமானால், தன் உடலைப் பற்றியே நன்கு அறிய முடியாத நிலையில் பரதத்துவத்தை எப்படி அறிந்துகொள்ள முடியும்? இந்த மானிடப் பிறவியிலேயே எவர் பிரம்மத்தை அறிய முயற்சி செய்யவில்லையோ அவர்களுக்கு இந்த உடல் போனபிறகு அந்தப் பிரம்மம் இன்னும் எட்டிச் செல்கிறது.

—ஸ்ரீசங்கரர், பிரபோதஸுதாகரம்



சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் என்ற ஐந்து விஷயங்களில், சப்தம் ஒன்றை மட்டும் சுகத்திற்குச் சாதனம் என்று பிரமித்து, மான் உயிரை விடுகிறது. காட்டில் வேடர்கள் வாத்தியங்களை வாசித்து, அந்தக் கானத்தில் காதைக் கொடுத்து மான்கள் மெய்ம்மறந்திருக்கும் போது அவற்றைக் கொல்கிறார்கள். பெண்யானையின் ஸ்பர்ச சுகத்திற்கு ஆசைப்பட்டு, காட்டில் யானை அதன் கூடவே சென்று, மனிதர்களின் கையில் அகப்பட்டுத் திண்டாடுகிறது. விட்டிற்பூச்சி, தீபஜ்வாலையின் ரூபத்தில் ஆசை கொண்டு, அதில் விழுந்து பிராணனை விடுகிறது. ரஸத்திற்காக மீன்கள் தூண்டிலில் அகப்பட்டு இறக்கின்றன. வாசனைக்கு ஆசைப்பட்டு வண்டு புஷ்பத்தில் இருக்கும்போது புஷ்பம் மூடிக்கொண்டதும் வெளியே வர முடியாமல் தவிக்கிறது. இவ்விதம் ஐந்தில் ஒவ்வொன்றை மட்டும் இன்பத்திற்குச் சாதனம் என்று நினைத்துச் செல்லும் பிராணிகள் அங்கு இன்பத்தை அடைவதில்லை என்பது மட்டுமல்ல; மிகுந்த துன்பத்தையும் அடைகின்றன. இப்படி இருக்கும்போது ஐந்தையுமே சுகத்திற்குச் சாதனம் என்று நினைத்துச் செல்லும் மனிதன் எந்தக் கதியை அடைவான்?

—விவேகசூடாமணி, 78

பக்தியோகம்

ஆத்திரேய சுந்தரநாராயணன்

யோகம் என்பது மார்க்கம், அதிர்ஷ்டம், இணைப்பு முதலிய பல பொருள்கள் உடையது. ஜீவாத்மா பரமாத்மாவுடன் இணைவதே இங்கு யோகம் எனப்படும். இந்த வகை இணைப்பிற்குக் கர்மா, பக்தி, ராஜயோகம், ஞானம், சரணுகதி ஆகிய மார்க்கங்கள் இருக்கின்றன. இவற்றுள் ஒவ்வொன்றும் மற்றவற்றுடன் சார்பு உடையதாகவே விளங்குகிறது.

பக்தி என்ருல் என்ன? 'பகவானிடம் பரமப்ரேமை செலுத்துவது பக்தி' என்கிருர் நாரத மகரிஷி. இவர் நூறு பக்திசூத்திரங்கள் இயற்றியுள்ளார். எதை அடைந்து மனிதன் ஸித்தனுகவும், சாவற்றவனுகவும், திருப்தி அடைந்தவனுகவும் ஆகிருனே அது பக்தி. எதை அடைந்து மற்றவற்றில் ஆசைப்பட மாட்டானே, துக்கப்பட மாட்டானே அல்லது மகிழ மாட்டானே அது பக்தி. எதை அறிந்து மது உண்டவன் போல ஆகிருனே, ஆத்மாவிலேயே மகிழ்கிருனே அது பக்தி என்கிருர் நாரதர்.

"பூஜை, பாராயணம், ஜபம், பஜனை முதலியவற்றில் ஆழ்ந்த பற்றே பக்தி" என்று கூறுகிருர் வியாசர்.


பகவான் கிருஷ்ணனுக்கு நாமகரணம் செய்த கர்க மகரிஷி, "தெய்விகக் கதைகளில் பற்று பக்தி" என்கிருர்.

"எல்லாவற்றையும் பகவானுக்கு அர்ப்பணம் செய்து அவனை எப்போதாவது மறந்தால் மிகுந்த கவலை உண்டாக்குவது பக்தி" என்கிருர் நாரதர்.

ஆத்மதியானத்தில் மகிழ்வதற்குப் பாதகம் இல்லாமல் பூஜை, பாகவதம், பஜனை முதலியவற்றில் பற்றே பக்தி" என்கிருர் சாண்டில்ய மகரிஷி. இவரும் நூறு பக்திசூத்திரங்கள் இயற்றியுள்ளார்.

பக்தி பலவகைப்பட்டது. முக்கியமல்லாத கௌணி பக்தி மூன்று வகையானது என்கிருர் நாரதர். (சூ. 56) ஹிம்சை, டம்பம், பொருமை காரணமாகக் கடவுளை வழிபடுகிறவன் தாமஸன். புகழ், சுகம், செல்வம் ஆகியவற்றை விரும்பிப் பூஜிப்பவன் ராஜஸன். பாவத்தைப் போக்குவதற்கோ, கடமை என்ற உணர்வுடனே அல்லது பகவானுக்கு அர்ப்பணமாகவோ, அவனது பிரீதிக்காகவோ பூஜிப்பவன் சாத்துவிகன். (பாகவதம்)

ஆர்த்தன், அர்த்தார்த்தன், ஜிஜ்ஞாஸு என்றும் கௌணீ பக்தியுள்ளவரை வகைப்படுத்தலாம். துன்பமுற்று அதைப் போக்க ஈசனைத் துதிப்பவர் ஆர்த்தர். இதற்குக் குந்தி, திரௌபதி ஆகியோரை உதாரணமாகச் சொல்லலாம். பொருள், பதவி வேண்டித் துதிப்பவன் அர்த்தார்த்தன். இதற்கு உதாரணம்—துருவன், திரௌபதி. பிரம்மஞானம் பெறத் துதிப்பவன் ஜிஜ்ஞாஸு. "இந்த வகைப் பக்தர்களைவிட உண்மை ஞானியே எனக்குப் பிரியமானவன்" என்கிருர் பகவான் கிருஷ்ணன் (கீதை 7–16).



பாஹ்ய பக்தியில் இறைவன் கோவிலில் இருப்பதாகக் கருதி அங்கே சென்று பக்தன் துதிக்கிருன். அனன்ய பக்தன் இஷ்டதேவதையை இதயத்தில் இருத்தித் துதிக்கிருன். ஏகாந்த பக்தி என்பது ஒரே அர்ச்சாமூர்த்தியிடம் தீவிர பக்தி செலுத்துதல். அந்தர பக்திக்கு வைராக்கியம், ஞானம், உபாசனம், யோகப் பயிற்சி ஆகியவை வேண்டும். இந்த வகைப் பக்திக்கு உபநிடதங்களில் கூறப்பட்ட தஹரவித்யை, சாண்டில்ய வித்யை, மதுவித்யை, ஆத்ம வித்யை, புருஷ வித்யை, பூமா வித்யை, பஞ்சாக்கினி வித்யை முதலிய 32 வித்யைகள் உதவும். பரபக்தியில் பக்தன் கடவுளைக் காணத் துடிக்கிருன்; அருளும் பெறுகிருன். பரமபக்தியில் பக்தன் முக்தி பெற்றுப் பகவானுடன் எப்போதும் இருந்து ஆனந்தம் அடைய விழைகிருன்.

பக்தனின் தன்மை என்ன? பகவத்கீதையில் 12-ஆம் அத்தியாயத்தில் இது விவரிக்கப்பட்டிருக்கிறது. பக்தன் ஒருவனையும் வெறுக்க மாட்டான்; இவன் அச்சம், சினம், மகிழ்ச்சி, மனக்கிளர்ச்சி ஆகியவற்றிலிருந்து விடுபட்டவன்; எவ்வுயிர்களிடத்தும் கருணை செலுத்துபவன்; கர்மங்களில் உள்ள பற்றை விட்டு, நித்திய கர்மங்களைப் பகவானுக்கு

அர்ப்பணமாகச் செய்து காம்ய கர்மங்களை விடுப வன்; இன்ப துன்பம், லாப நஷ்டம், புகழ்ச்சி இகழ்ச்சி, விருப்பு வெறுப்பு என்னும் இரட்டைகளி லின்று விடுபட்டு, மனதைச் சமநிலையில் வைப்ப வன்; அடக்கம், பொறுமை, திருப்தி, நேர்மை, மனஅமைதி; புலனடக்கம் இவையும் மாதா பிதா குரு ஈசன் அடியார்கள் இவர்களிடம் பக்தியும் உடையவன்.

"துன்பக் கண்ணீரைத் துடைக்கும் பகவானின் தரிசனம் துன்பம் வரும்போது கிட்டுவதால் அடிக் கடி எனக்குத் துன்பம் வரட்டும்" என்று குந்தி தேவி கிருஷ்ணனிடம் கூறினாளாம் (பாகவதம் 1-8-25). ராமதாசருக்குச் சிறையும், தியாகராஜ ருக்கு வறுமையும் கிடைத்தாலும் தங்கத்தைத் தீயிலிட்டால் மாசு விலகி ஒளிர்வது போல் அவர் களது ஈசுவரபக்தி ஒளிர்ந்தது.

"சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம் சுடச்சுட நோக்கிற் பவர்க்கு" என்றார் வள்ளுவர்.

"வாளால் அறுத்துச் சுடினும் மருத்து வன்பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர் தரினும் வித்துவக் கோட்டம்மா நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே"
என்றார் குலசேகராழ்வார்.

முக்தி பெறுமுன் பிராரப்த கர்மமாகக் கர்ம பலனைச் செலவழிக்க வேண்டியுள்ளதால், துன்பத் தினால் பக்தர்கள் வருந்துவதில்லை. பக்தர்களுக்குக் குலம் கல்வி பணம் பலம் ரூபம் வேறுபாடுகள் இல்லை. பக்தன் 'நான்', 'எனது' என்ற எண்ணங் களை இழப்பான்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"
என்றார் வள்ளுவர்.
"அற்றது பற்று எனில் உற்றது வீடு"
என்றார் நம்மாழ்வார்.

உண்மைப் பக்தன் பால் உணர்ச்சி தூண்டும் கதைகள், நாவல், படங்கள் முதலியனவும், தனம் தேடினவர், நாஸ்திகர் இவர்களது வரலாற்றையும் பார்க்கவோ கேட்கவோ மாட்டான். (நா. சூ. 63) தெய்வக் கதைகளைக் கேட்டபின் காதலாகிக் கண்ணீர் உருகி, குரல் தழுதழுக்க, மயிர்சிலிர்ப்பு அடைந்து ஆனந்தப் பெருக்கில் மூழ்கிச் சுற்றுப் புறத்தைக் காணான் பக்தன். (பாகவதம் 1-6-17) தீவிரபக்தி அடைந்தவன் பித்தன் போன்று இருப் பானும். "பேயரே எனக்கு யாவரும், யானும் ஓர் பேயனே; பேயனாய் ஒழிந்தேன் எம்பிரானுக்கே" என்றார் குலசேகராழ்வார்.

"பகவானைப்பற்றிய சிந்தனையில் பிரகலாதன் ஒரு சமயம் சிரிப்பான்; ஒரு சமயம் அழுவான்; ஒரு சமயம் பாடுவான் அல்லது கதறுவான்; ஒரு சமயம் ஆனந்தக் கூத்தாடுவான். ஒரு சமயம் பக்திப் பிரவாகத்தால் புளகாங்கிதனாய்க் கண்ணிலிருந்து ஆனந்தபாஷ்பம் பெருக மௌனமாக இருப்பான்" என்று பாகவதம் கூறுகிறது.

கோபிகளின் பக்தி சாலச் சிறப்புடையது. தயிர், பால் முதலியவற்றை விற்கச் சென்ற ஓர் இடைப் பெண் கிருஷ்ணனிடம் பக்திப்பெருக்கினால் வைத்த சிந்தனையால் தன்வயமிழந்து "தயிரோ, பாலோ!" என்று கூறாமல் "கோவிந்தா! தாமோதரா! மாதவா!" என்று தெருவில் கூவிக்கொண்டு சென்றாளாம். (கிருஷ்ண கர்ணாமிருதம் 2-55.)

பக்தனுக்கு வாய்மையும் அகிம்சையும் மனம் வாக்குக் காய சுத்தமும் முற்றிலும் வேண்டும். 'வைஷ்ணவ ஜனதோ' என்ற பாட்டில் பக்தனின் தன்மையை நரசிம்ம மேதா விவரித்திருக்கிறார். இந்தப் பாட்டை மகாத்மா காந்தி ஒவ்வொரு கூட்டத்திலும் பாடச் சொல்வது வழக்கம்.

பக்திக்குச் சாதனங்கள் யாவை? பகவானின் நாமங்களைப் பஜனை செய்து பக்தர்கள் ஆடிப் பாடு வார்கள். ராமானந்தர், சைதன்யர், வல்லபர், துளசிதாசர், கபீர், குருநானக், மீராபாய், தியாக ராஜர், புரந்தரதாசர், கனகதாசர், ஆழ்வார்கள், நாயன்மார்கள் ஆகியோர் அனைவரும் வெளிப் படையாகப் பகிரங்க பக்தியைச் செலுத்தினர். குசேலர் கிருஷ்ணனிடம் நண்பனாகவும், அனுமன் இராமனிடம் தாசனாகவும், யசோதை கண்ணனிடம் தாயாகவும், ஆண்டாள் அரங்கனிடம் காதலியாக வும் பக்தி செலுத்தினர்.

ச்ரவணம் கீர்த்தநம் விஷ்ணோ: ஸ்மரணம் பாத ஸேவநம்; அர்ச்சநம் வந்தநம் தாஸ்யம் ஸக்யம் ஆத்மநிவேதநம்—என்று பாகவதத்தில் (7-5-23) பிரகலாதன் ஒன்பது உபாயங்கள் பக்தி செலுத்து வதற்குக் கூறுகிறான்.

பகவத்கதையைக் கேட்டதனால் பரீக்ஷித் சக்கர வர்த்தியும், கதாகீர்த்தனத்தால் சுகமகரிஷியும், பகவானைச் சதா நினைப்பதால் பிரகலாதனும், பகவானுக்குப் பாதப் பணிவிடை செய்வதால் லட்சுமிப் பிராட்டியும், பகவான் கிருஷ்ணனை உப சரித்து நமஸ்கரித்ததால் கம்ஸனின் மந்திரியான அக்ரூரரும், இராமருக்குச் சேவையால் ஆஞ்ச

நேயரும், நண்பனுக இருந்து பகவான் கிருஷ்ண னிடம் பக்தி செலுத்தியதனுல் அர்ஜுனனும், தன் ஆத்மாவையும் தனது எல்லாவற்றையும் வாமன ருக்கு அர்ப்பணம் செய்த பலி சக்கரவர்த்தியும் பக்தியில் சிறப்புப் பெற்றனர். மேலும், பிரிவாற்ரு மையினுல் நம்மாழ்வார், சைதன்யர் போன்றவர் களும், பகவான் அழகில் மயங்கிக் கோபிகைகளும், பகவான் குணங்களைப் பாடி நாரத மகரிஷியும் வியா சரும் பக்தி செலுத்தினர். பக்தன் ஈசனது அடியார் களிடமும் பக்திசெலுத்துவான்; பெரியோர்களைச் சார்வான்.

''அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்''

என்ருர் வள்ளுவர்.

பஜகோவிந்தத்தில், சத்சங்கத்தால் ஜீவன்முக்தி பெறலாம் என்கிருர் சங்கரர். ஒரு பணிப்பெண்ணின் மகனுகத் தாம் பிறந்தாலும் ரிஷிகளுக்குப் பணி விடை செய்ததனுல் மறு ஜன்மத்திலே தாம் தேவ ரிஷி ஆகிவிட்டதாக நாரதர் வியாசருக்குக் கூறிய தாகப் பாகவதத்தில் காண்கிறது. ''மனிதப்பிறவி, முக்தியில் ஆசை, பெரியோர்களை நாடி அடைதல் இம் மூன்றும் தெய்வ அருளினுலேயே சித்திக்கும்'' என்று ஆதிசங்கரர் கூறுகிருர். (விவேகசூடா மணி 3.)

''மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால் தொடங்கி னர்க்கோர் வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே'' என்ருர் தாயுமானவர். புண்ணிய ஸ்தலம் செல்லல், மூர்த்தியை வணங்குதல், புண்ணியநதி நீராடல் இவற்ருல் பக்தி பிறந்து, இவர்களுக்கு உபதேசம் செய்யக் கடவுளே குரு உருவில் வருவானும். ''உலக விவகாரங்களில் ஈடு பட்டாலும் எப்போதும் பகவானின் நினைவாகவே இருக்க வேண்டும்'' என்ருர் பகவான் ஸ்ரீராம கிருஷ்ணர்.

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்தவா வினையே நெடுங் காலமே

என்ருர் நாவுக்கரசர்.

காலையில் தினமும் நீராடித் தூய ஆடைஅணிந்து, பூசித்தல், ஆலயம் சென்று வணங்குதல், எளிய வர்க்கு அன்னமிடுதல், வேதபாடசாலை வைத்தல், அநாதை இல்லம் நடத்துதல் இவையும் பக்திப் பயிரை வளர்க்கும். எளியோர்க்கு உதவுவதே இறைவனுக்கு உகந்த மிகவும் நல்ல பணியாகும்.

பக்தர்கள் வேறு மூன்று முறைகளில் பக்தி செலுத்துவதுண்டு. பூனைக்குட்டி முறை அல்லது மார்ஜாரகிசோர முறையில் பக்தி செலுத்துவர். பூனைக்குட்டி தன் தாயைத் தஞ்சமடைய, பூனை அதை வாயில் கவ்விச் செல்வது போல, பகவானே அருளட்டும் என்று இருக்காமல் பக்தர் பகவானை மாணிக்கவாசகர் தமது பதிகங்களில் கூறுவது போல, 'சிக்' எனப் பிடிப்பர். பக்தர்கள் விரிக்கும் பக்திவலையில் பகவான் சிக்கி விடுவார். மூன்ருவது முறையாக, ஆதிசங்கரர் சிவானந்தலஹரியில், ''எனக்குச் சரணமடையப் பக்குவமில்லை. பற்றிக்கொள்ளவும் சக்தி இல்லை. ஆகவே, குரங்காகத் தாவும் எனது மனதை அடக்கிக் குரங்காட்டியாக இருந்து அருள்புரிவாய், ஈசனே!'' என்கிருர்.

முக்தி மார்க்கங்களில் பக்தியே சிறந்தது; எளிதானது. ''பக்தியின்றிப் பிரம்மஞானம் கிட் டாது'' என்று நாராயண உபநிஷத் கூறுகிறது. ''கர்ம, ஞான, யோக மார்க்கங்களைவிடப் பக்தி மார்க்கமே சாலச் சிறப்புற்றது; ஏனெனில் அவற் றின் பயனுய் இருத்தலால்'' என்று நாரதரின் சூத்திரங்கள் (25, 26) கூறுகின்றன.

''என்னை உண்மையான பக்தியுடன் எவன் வணங்குகிருனே அவனே யோகிகளில் சிறந் தவன்'' என்கிருர் பகவான். (கீதை 6—47.)

ஞானம் முதிர்ந்து பக்தியாகப் பழுக்கிறது. வெறும் ஞானம் பயனில்லை. பக்தியை வளர்க்கவே ஆதி சங்கரர் மூர்த்திகளின்மீது பல ஸ்தோத்திரங்கள் பாடியுள்ளார். ''விஷ்ணு ஸகஸ்ரநாம பாஷ்யத்தில் சங்கரர் பகவானின் குணசாகரத்தில் ஆழ்ந்து ஆனந்தம் பெறுகிருர்'' என்கிருர் ராஜாஜி.

''தூயோமாய் வந்துநாம் தூமலர் தூவித்தொழுது
வாயினுல் பாடி மனத்தினுல் சிந்திக்க,
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தூயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய்''

என்ருள் ஆண்டாள்.

''அரண்மனைச் சாப்பாடு என்ருல் சாப்பாட்டின் திருப்தி வந்துவிடாது. அனுபவம் வேண்டும். பக்தியின் அனுபவத்தால் திருப்தியும் ஆனந்தமும் விளைகின்றன'' என்கிருர் நாரதர். ''பக்தியே உத்தமமானது; நேரில் கண்டு அனுபவிக்கக் கூடி யது; அனுஷ்டிப்பதற்கு எளியது; என்றும் அழியா தது'' என்று கீதையில் (9–2) பகவான் கூறுகிருர்.

''கனவிலும் கிட்ட முடியாததைத் தோத்திரத்தால் அடையலாம்'' என்கிருர் ஆங்கிலக்கவி டென்னிஸன் பிரபு. பக்தியோகத்தின்மூலம் பகவத் பக்தி சாகரத்தில் ஆழ்ந்து உய்வு பெறுவதே வாழ்க்கையின் இலட்சியமாகும். ☆

கைங்கரிய வாழ்க்கை

பி. ஸ்ரீ.

"பிரார்த்தனை?" என்று கேட்டார், குருமூர்த்திக்கு அருகில் நின்ற ஆஸ்தான மகாவித்துவான், எதிரே தண்டனிட்டு நின்ற அம்மையாரை நோக்கி.

"கைங்கரியப் பிரார்த்தனை" என்று பதில் வந்தது.

"அதனால் பிரயோஜனம்?"

"அதுவே பிரயோஜனம்!"

சூத்திரம் போலுள்ள இந்தத் துணுக்கு, 'சின்னியம்மாள் இரகசியம்' என்ற ஸ்ரீவைஷ்ணவ குருபரம்பரைக் கதையின் இறுதிப் பகுதி.

'குருநாதரிடம் நீ பிரார்த்திப்பதுதான் என்ன?' என்ற வினவுக்கு, 'மேலும் மேலும் கைங்கரியம் புரிய வாய்ப்பு வேண்டும்' என்பது சின்னியம்மாளின் விடை. 'அதனால் பிரயோஜனம் ஏதாவது உனக்குக் கிடைக்க வேண்டாமா? ஓரளவு ஊதியமோ, உண்ண உணவோ நீ பணி செய்வதன் பயனாகப் பெற்றுக்கொள்ள வேண்டாமா?' என்று பொருள்படும் அடுத்த கேள்விக்கு, 'கைங்கரியம் தவிர வேறொரு பயனையும் அடியேன் எதிர்பார்த்து வரவில்லை' என்று சின்னியம்மாள் உறுதியாகக் கூறி முடிப்பதைக் காண்கிறோம்.

நெறியும் குறியும் ஒன்றே !

கைங்கரியத்தின் பயன் கைங்கரியமே என்பது சின்னியம்மாள் கண்ட ஓர் அரிய இரகசியம். 'நல்லொழுக்கத்துக்கு வெகுமதி அதுவேதான். Virtue is its own reward' என்று ஆங்கிலத்தில் கூறுவதுண்டு. அப்படியே, கைங்கரியத்துக்கு வெகுமதி கைங்கரியமேதான் என்ற உண்மையைப் புலப்படுத்துகிறது சின்னியம்மையின் சூத்திர வாக்கியம்.

நன்னெறியில் ஒழுகுபவன், மேன்மேலும் அதே நெறியில் ஒழுகுவதையே ஆனந்தமாகக் காண்பான். கைங்கரிய நெறியில் செல்பவனும் அதே நெறியில் நிலையாகச் சென்றுகொண்டிருப்பதையே பேரின்பமாகக் கருதுவான். இத்தகைய நெறியில், நெறி வேறு, குறி வேறு என்பதில்லை. நெறியும் குறிக்கோளும் ஒன்றே. கைங்கரியத்தை ஒரு சாதனமாகக் கொண்டு வேறொன்றைச் சாதித்துக் கொள்வோர் பலராக இருக்கும் இவ்வுலகில், சின்னியம்மாளின் இரகசியத்தை உள்ளபடி புரிந்துகொள்வது சிரமமான காரியம்தான்.

'சாதனையின்றி ஒன்றைச் சாதிப்பார் உலகில் இல்லை' என்ற கொள்கை தவசிகளுக்கும் யோகிகளுக்குங்கூட உரியதுதான். கோரமான தவங்கள் புரிந்து அரக்கர்களும் வரங்கள் பல பெற்று லோக பயங்கரர் ஆனார்கள் என்று புராணங்களும் இதிகாசங்களும் கூறுகின்றன. அவர்களுக்குக் குறியும்



நெறியும் ஒன்றல்ல; தவநெறியும், தன்னலக் குறி அடைவதற்கு உரிய ஓர் உபாயம்தான், சாதனம் தான். தோட்டி போல் உழைத்து அப்பால் துரை போல் சுகிக்க விரும்புகிறவனைப் போல், அரக்கர் அசுரர் முதலானோர் கடுந்தவம் புரிந்து ஈட்டிய தபோதனத்தைக் கொண்டு சுகபோகங்களை அனுபவித்தார்கள். ஆனால் அது இரக்கமிலா அரக்கர் வாழ்வுதானே.

கைங்கரிய நெறியில் செல்வோர் அருளாளர்கள், அடியவர்கள், அன்பர்கள். வாழ்க்கை அன்பு மயமாகும்போது கைங்கரியம் இன்பமயமாகிவிடும். அன்பே கைங்கரியமாகக் கனிந்துவிடும். செயற்படாத அறிவு போல், கைங்கரியமாகப் பழுத்து விடாத அன்பும் மலடுதான். இத்தகைய கைங்கரிய நெறியை இன்று, இந்த விளம்பர யுகத்தில், பெரும்பாலும் காண்பதற்கில்லை. இராவணாகாரமான ஆணவத்துடன் பலன் கருதிப் பணிபுரிவோரையே இந்நாளில் அங்கும் இங்கும் எங்கும் காண்கிறோம்.

கைங்கரியத்தையே குறியாகவும் நெறியாகவும் உடையவன், 'உப்பைப் போல் இருப்பான்' எனக்

கூறுவதுண்டு. இதற்குச் சாதாரணமான பொருளும் உண்டு, உட்பொருளும் உண்டு. உப்பைப் போல் சமுதாயத்துக்கு இன்றியமையாதவன் பணியாளன், கைங்கரிய நெறியாளன் என்பது சாதாரணப் பொருள். 'நான் இன்றியமையாதவன்' என்ற நினைப்பே வீண் கர்வமாக விளைந்து, கைங்கரியத்தை வேரிலேயே கெடுத்துவிடும். ஆகவேதான்,

நான் எனும் ஆணவம் தள்ளலும் – இந்த
ஞாலத்தைத் தானெனக் கொள்ளலும்

கைங்கரியத்தின் அடிப்படைத் தத்துவமாகும் என்பதைப் பாரதியார் குறிப்பாக வற்புறுத்தியுள்ளார். இதே கருத்தை, 'உப்பைப் போல் இருப்பது கைங்கரிய நெறி' என்பதன் உட்பொருளாகக் கொள்வதும் பொருத்தமே.

'நான் எனும் ஆணவ'த்துடன் உப்பு முனைந்து நின்றால் கறியமுது கெட்டுப் போய்விடும் என்பதைச் சொல்லவா வேண்டும்? கறியமுது நன்றாய்ச் சுவையாக இருக்கிறது என்ற எண்ணம்தான் வர வேண்டும்; உப்பைப் பற்றிய எண்ணமே வர வேண்டியதில்லை. தான் அழிய மாறிய நிலையில் தான் சுவை தருகிறது கறியமுதிற்கு உப்பு. அப்படியே கைங்கரியம் புரிபவன் தன்னைக் கைங்கரியத்தில் முழுக்க முழுக்க இழந்துவிட வேண்டும். 'கைங்கரியம் நன்று' என்று மக்கள் சொல்ல வேண்டுமே தவிர, கைங்கரியம் புரிந்தவனைப் புகழ வேண்டியது அவசியமில்லை. உண்மைக் கைங்கரியத்துக்குப் பேரும் புகழும் இடையூறுகளே. கைங்கரியமே கண்ணாக இருப்பவன் வேறு பயனைப் பார்க்கவே மாட்டான்.

ஆழ்வார் காட்டும் கைங்கரிய நெறி

தொண்டரடிப்பொடியாழ்வார் என்ற பெயரே தொண்டுநெறியை நினைவூட்டுகிறது.

அன்பர் பணி செய்ய எனை
ஆளாக்கி விட்டுவிட்டால்,
இன்பநிலை தானே வந்து
எய்தும், பராபரமே!

என்ற பிற்காலத் தாயுமான சுவாமிகளின் வாக்குக்கு 8-ஆம் நூற்றாண்டில் ஓர் இலக்கியமாக வாழ்ந்து, ஆண்டவனுக்கும் அன்பர்களுக்கும் பணிபுரிவதையே நெறியாகவும் குறியாகவும் கொண்டிருந்தவர் தொண்டரடிப்பொடியாழ்வார்.

இந்தப் பெரியார் விப்ரநாராயணன் என்றும், திருமண்டங்குடி அந்தணர்களின் தலைவர் என்றும் பேரும் புகழும் பெற்றிருந்தார். 'கிராம குலாதிகளால் வரும் பெயர் அநர்த்தஹேது' என்று இவர் அந்தப் பெயரையும் புகழையும் துறந்து, தொண்டர்களின் பாத தூளாக (அடிப் பொடியாக) மாறி விட்டார். அந்த அகப் புரட்சியையும் கைங்கரிய வாழ்வையும் சித்திரிக்கின்றன இவர் பாடல்கள். இவற்றுள் கைங்கரிய லட்சணத்தைக் குறையும் இன்றி மிகையும் இன்றி வெளியிடும் பாட்டு ஒன்று திருமாலை என்ற இவர் பிரபந்தத்தில் காண்கிறது. பாசுரம் வருமாறு :—

மேம்பொருள் போகவிட்டு
மெய்ம்மையை மிக உணர்ந்து,
ஆம் பரிசு அறிந்து கொண்டு,
ஐம்புலன் அகத்தடக்கி,
காம்பறத் தலை சிரைத்து, உன்
கடைத் தலை இருந்து வாழும்
சோம்பரை உகத்தி போலும்,
சூழ்புனல் அரங்கத் தானே!

இந்தப் பாட்டில், கைங்கரியம் புரிவோரை 'வாழும் சோம்பர்' என்கிறார் ஆழ்வார். சொந்த லாபத்தில் சோம்பியிருப்பார்களாம் கைங்கரிய நெறியாளர்கள். உலக நலம், அன்பர் பணி, ஆண்டவன் பணி என்றால் தங்களை முழுக்க முழுக்க இழந்துவிடுவார்களாம். 'இவர்களா இத்தகைய கைங்கரியம் புரிந்தவர்கள்?' என்று பிறர் வியக்கவும் இடம் இன்றிப் பணியிலே மறைந்து விடுவார்களாம். ஆத்திரம் இன்றி, ஆரவாரம் இன்றி, ஆடம்பரம் இன்றி, இயற்கையின் தனிப் பெருஞ் சக்திகளைப் போல், தொண்டாற்றுவார்களாம்.

பாமரர் போல்காண் பிப்பார்,
பண்டிதத் திறமை காட்டார்,
ஊமரும் ஆவார், – உள்ளத்து
உவகையார் சீவன் முத்தர்

என்ற ஜீவன்முக்தர் நிலையுடன், வாழும் சோம்பர்களின் நிலையையும் ஒப்பிடலாம். இந்த நிலையை ஆங்கிலத்தில் 'passive alertness' என்பர்.

சும்மா இருப்பது போல் சுகம் பெறுவோர்

பிறர் மதிக்கும் மேலான பொருள்களையும் போக விடுவதாலும் இவர்கள் 'சோம்பர்' ஆவர். பொருள்களின் பற்று விட, மெய்ம்மை ஒன்றையே—மெய்ப் பொருள் ஒன்றையே—பற்றி நிற்பார்களாம். 'அதனால் ஆகும் பரிசு அதுவே' என்பது இந்தச் சோம்பர்களின் நிலை.

'ஐம்புலன் அகத்து அடக்கி' என்கிறார் ஆழ்வார். அஞ்ச வேண்டாம்; அதற்காக இவர்கள் போஜனம் துறந்து கானகம் புகுவதில்லை; ஐந்து

[தொடர்ச்சி 397-ஆம் பக்கம் பார்க்க]

ஸ்ரீராமபிரானின் அருளுரைகள்

ஸ்ரீராமபிரான் பரதனுக்கு உபதேசித்த பொன்மொழிகள்

1. மனிதனது விருப்பப்படி எந்தக் காரியமும் நடைபெருது. மனிதனை ஆட்டி வைப்பவன் இறைவன்.

2. செல்வம் யாவும் அழியக் கூடியவை; உயர்வு உண்டு எனில் தாழ்வும் உண்டு. எவ்வள வுக்கு எவ்வளவு நெருங்கிப் பழகுகிறேமோ அவ் வளவுக்கு அவ்வளவு பிரிவு நிச்சயம். எத்தகைய வாழ்க்கையும் மரணத்தை முடிவாகக் கொண்டது.

3. மரத்தில் தோன்றிய பழம் பழுத்து நிலத்தில் விழுவது எவ்வளவு நிச்சயமோ, அதுபோல மனிதன் பிறந்து இறப்பது நிச்சயம். இருப்பது நிச்சய மில்லை.

4. எவ்வளவு உறுதியாக வீட்டைக் கட்டினு லும் காலப்போக்கில் வீடு இடிந்து அழிவது போல, மனிதனும் வயது முதிர்ந்து இறந்துவிடுகிருன்.

5. கழிந்த இரவு திரும்ப வருவதில்லை; கடலை அடைந்த யமுனநதி திரும்ப வருவதில்லை. அது போலவே, கழிந்த இளமை மீண்டும் வருவதில்லை.

6. எல்லாப் பிராணிகளுக்கும் இரவும் பகலும் கழிந்தபடியே உள்ளன. கோடைக்காலத்தில் நீர் வற்றிக் குறைவது போலவே, பிராணிகளுக்கும் ஆயுள் விரைவில் குறைந்துகொண்டே வருகிறது.

7. நீ உன் நிலையை எண்ணி வருந்தாமல் பிறரைப்பற்றி ஏன் வருந்துகிருய்? நீ நிற்கும் காலத் திலும் போகும் காலத்திலும் உன் ஆயுள் குறைந்து கொண்டே போகிறது.

8. நீ செல்லுகிற காலத்திலும், உட்காருகிற காலத்திலும், வெகு தூரம் சென்று திரும்பும் காலத்தி லும் யமன் அதே வழியில் உன்னுடன் சென்று கூடவே திரும்பி வருகிருன்.

9. உடலெங்கும் தசை சுருங்கிவிடுகிறது; தலை மயிர் நரைத்துவிடுகிறது; முதுமையால் உடல் தளர்ச்சியடைகிறது; என்ன செய்தால் இவற்றை அகற்ற முடியும்?

10. சூரியன் உதித்த காலத்திலும் மறைந்த காலத்திலும் மனிதன் மகிழ்ச்சியடைகிருன். அதனுல் தன் வாழ்நாளில் ஒரு நாள் குறைந்ததை அவன் அறிவதில்லை.

11. புதிது புதிதான ருதுக்களின் ஆரம்ப காலத் தைக் கண்டு மனிதன் மகிழ்ச்சியடைகிருன். ஆனுல் ருதுக்களின் கழிவால் தன் ஆயுள்காலம் கழிவதை அவன் அறிவதில்லை.

12. கடலில் வெவ்வேருன இடங்களில் இருந்த கட்டைகள் ஒரு காலத்தில் ஒன்றுகூடுகின்றன. கூடியிருந்த கட்டைகள் ஒரு காலத்தில் பிரிந்து விடுகின்றன. அதுபோலவே, மனைவி மக்கள் தாயாதிகள் செல்வம் யாவும் ஒன்றுசேர வேண்டிய காலத்தில் ஒன்றுசேருகின்றனர்; பிரிய வேண்டிய காலத்தில் பிரிந்துவிடுகின்றனர். சேர்க்கை எப்படி நிச்சயமோ அவ்வாறே பிரிவும் நிச்சயம்.

13. பிராணிகள் தோன்றியபடி இருப்பதில்லை; முதுமையால் இறந்துவிடுகின்றன. இறந்ததை எண்ணி வருந்தலாமே தவிரத் திரும்பக் கொண்டு வர எவராலும் இயலாது.

14. வழியில் நடந்து செல்கிறவனைப் பார்த்த வழிப்போக்கன், 'நானும் உன்னுடன் வருகிறேன்' என்று கூறி, தொடர்ந்து வருவது போல, தந்தை, பாட்டன் சென்ற வழியில் நாமும் செல்வது நிச்ச யம். மீண்டு வருவது என்பது இயலாது; ஆகையால் பிரிவால் வருந்துவதில் பயன் என்ன?

15. போகிற வெள்ளத்தை நிறுத்த முடியாதது போல, வயதுமுதிர்ச்சியால் இறப்பவனைத் தடுக்க முடியாது. கிடைத்ததைக் கொண்டு மகிழ்கிறவர் களே சுகத்தையடைந்தவர் ஆவர்.

16. பிரிவால் உண்டாகப்போகும் துன்பத்தை முன்பாகவே எண்ணிப் பிறருடன் நெருங்கிய நட்புக் கொள்ள வேண்டும்.

17. எண்ணெயில் நனைந்த வர்த்தி, தண்ணீர் பட்டாலும் எரிவது போல, அதிக நட்பால் பிரிவு ஏற்பட்டால் துன்பம் மேலிடும். *

அருள்நெறிக் கதை

கங்கையில் சேரும் பாவம் என்ன ஆகிறது?

சத்தியகாமன்

ஒரு சமயம் காசி க்ஷேத்திரத்திற்குச் சன்னியாசியாகிய ஒருமகான் விஜயம் செய்தார். அவர் தன்னிடம் நீராட வருவதைத் தூரத்திலிருந்தே கவனித்த கங்கை, 'இந்த மகான் என்னிடம் இப்போது நீராடப்போகிருர்!' என்று தனக்குத் தானே மகிழ்ச்சியுடன் சொல்லிக்கொண்டாள். ஆனுல் அந்த மகிழ்ச்சி அவளுக்கு நெடுநேரம் நீடிக்கவில்லை.

அந்த மகான் கங்கையை நெருங்கியபோது, சாக்கடை நீர் கங்கையில் வந்து கலப்பதைக் கவனித்தார். அந்தக் காட்சியே அவருக்கு அருவருப்பைத் தந்தது. ஆகவே அவர் கங்கையில் நீராடும் எண்ணத்தையே கைவிட்டு, வந்த வழியே திரும்பிப் போக ஆரம்பித்தார்.

கரையில் நின்ற அந்த மகான் சில நொடிகள் ஏதோ யோசித்துவிட்டு நீராடாமலே திரும்பிப் போக ஆரம்பித்ததும், கங்கைக்கு மிகவும் ஏமாற்றமாகிவிட்டது. அவள் ஒரு சாதாரணப் பெண்ணைப் போன்ற வடிவம் எடுத்துக்கொண்டு அந்தச் சன்னியாசியை அணுகி, "சுவாமி! தாங்கள் ஏன் கங்கையில் நீராடாமலே திரும்பிப் போகிறீர்கள்?" என்று கேட்டாள்.

அதற்கு அந்த மகான் அவளிடம், "மகளே! கங்கை தன்னிடம் குளிப்பவர்களின் பாவத்தைச் சுமந்தபடி ஓடிக்கொண்டிருக்கிருள். ஏற்கனவே உள்ள அந்தப் பாவங்கள் போதாததற்குப் பாவிகளின் கழிவுப் பொருள்களெல்லாம் வேறு சாக்கடையில் வந்து கங்கையில் கலப்பதைப் பார்த்தேன். இவ்விதம் அருவருக்கத் தக்க பாவங்களைச் சுமந்து செல்லும் கங்கையில் நீராட எனக்கு மனம் வரவில்லை" என்ருர்.

அது கேட்ட கங்கை, "சுவாமி! குளிப்பவர்களின் பாவங்களும், கழிவுப்பொருள்களாகச் சாக்கடை மூலம் வந்து கலக்கும் பாவங்களும், கங்கையில் நீராட வருபவர்களை அணுகமாட்டா. அவள் புதிய நீரை ஒவ்வொரு விநாடியும் இமயமலையிலிருந்து கொண்டுவருவதும், பழைய நீரைக்கடலில் கொண்டு போய்ச் சேர்ப்பதுமாக இருக்கிருள். ஆகவே தாங்கள் குறிப்பிடும் அந்தப் பாவங்கள் கடலைத்தான் சென்றடைகின்றன. எனவே, பாவங்கள் உங்களை அணுகும் என்ற எண்ணத்தில் நீராடாமலே நீங்கள் திரும்பிச் செல்வது சரியல்ல" என்ருள்.

முனிவருக்குக் கங்கையன்னை தந்த பதில் விசித்திரமாக இருந்தது. அதோடு அவள் சொன்னது எவ்வளவு தூரம் உண்மை என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலும் அவருக்குத் தோன்றியது. ஆகவே நேராக அவர் கங்கை கடலில் கலக்கும் இடமாகிய கங்காசாகரத்தை அடைந்தார். அங்கே கடலின்முன் நின்று, "சமுத்திரராஜனே! கங்கை தான் சுமந்து வரும் பாவங்களை எல்லாம் உன்னிடம் கொண்டு வந்து சேர்த்து விடுகிருள். அப்படியானுல் பாவமெல்லாம் உன்னிடம்தானே குவிக்கப்படுகிறது! இவ்விதம் பாவங்களைச் சேர்த்து வைத்திருக்கும் உன்னிடம் நீராடினுல், நீராடுபவர்களுக்குப் பாவம் வந்து சேராதா?" என்று கேட்டார்.

முனிவர் அப்படிக் கேட்டதும் சமுத்திரராஜன் கூப்பிய கைகளுடன் அவர்முன் தோன்றி, "இல்லை, சுவாமி! பாவங்கள் என்னிடம் தங்குவதேயில்லை. அவற்றையெல்லாம் சூரியபகவான் ஆவியாக்கிக் கொண்டு சென்றுவிடுகிருர். எனவே என்னிடம் நீராடுபவர்களை ஒருபோதும் பாவம் சேராது" என்ருன்.

சமுத்திரராஜனின் பதிலைக் கேட்டதும், 'இந்தப் பாவங்கள் முடிவில் என்னதான் ஆகின்றன?' என்பதைத் தெரிந்துகொள்ளும் ஆவல் முனிவருக்கு மேலும் அதிகமாயிற்று. அவர் காயத்திரி மந்திரம் ஜபித்துச் சூரியபகவானைத் தம் முன்னுல் வரவழைத்தார். தம் முன்பு பணிந்து நின்ற சூரியபகவானிடம் அவர், "சூரியபகவானே! கடலிலிருந்து எல்லாப் பாவங்களையும் நீ ஆவியாக்கிக் கொண்டு போகிருயே! அப்படியானுல் நீயும்கூடப் பாவங்களுக்கு உடந்தையாக இருக்கிருய் என்றுதானே ஆகிறது?" என்று கேட்டார்.

அதற்குச் சூரிய பகவான், "சுவாமி! அந்தப் பாவங்களுக்கும் எனக்கும் எந்த ஒரு சம்பந்தமுமே கிடையாது. இந்த விஷயத்தில் என் பணியெல்லாம்

வெறும் கொடுக்கல் வாங்கல் என்ற அளவில்தான் இருக்கிறது. கடலிலிருந்து நான் ஆவியாக்கிக் கொண்டு வருவதை மேகங்கள் ஆர்வத்தோடு தாங்களாகவே விரும்பி உறிஞ்சிக் குடிக்கின்றன. பிறகு சூல் கொண்ட நிலையில் அவை இமயமலையில் சென்று தங்குகின்றன. ஆகவே பாவங்கள் மேகங்களையே சேருகின்றன'' என்றார்.

முனிவர் சென்றுகொண்டிருந்த மேகங்களை அழைத்து, ''ஏ மேகங்களே! இவ்விதம் மான அவமானத்தைப் பொருட்படுத்தாமல் பாவங்களைச் சுமந்துகொண்டு திரிய உங்களுக்கு வெட்கமாக இல்லை?'' என்று கேட்டார்.

மேகங்கள் வாயெல்லாம் பல் என்று சொல்லும் வகையில் இடி இடித்துச் சிரித்துக்கொண்டே, ''சுவாமி! எங்கள் செயலில் நாங்கள் வெட்கப்படுவதற்கு என்ன இருக்கிறது? மக்களுக்குத் தொண்டு செய்வதற்காகவே நியமிக்கப்பட்டவர்கள் நாங்கள். எஜமானன் நல்லதாகவோ கெட்டதாகவோ எதைப் பாரமாகப் போட்டாலும் அதைச் சுமந்து போகும் வாகனம் போலத்தான் நாங்கள் இருந்துகொண்டிருக்கிறோம். மக்களின் புண்ணிய பாவங்கள் எங்களைச் சேருவதே கிடையாது. நாங்கள் அவற்றை வைத்துக்கொள்வதே இல்லை. மக்கள் கொடுத்ததை அப்படியே சிந்தாமல் சிதறாமல் ஒரு சிறிது கூட வைத்துக்கொள்ளாமல் மழையாக இதோ பெய்யப்போகிறோம். நாங்கள் சுமந்து வருவதை எல்லாம் மழைநீராகப் பூமிதேவிதான் ஏற்றுக் கொள்கிறாள். எனவே நாங்கள் சுமந்து வரும் பாவங்கள் பூமியையே சேருகின்றன. அவளே அவற்றை மழைநீராகப் பெற்றுச் சுமந்துகொள்கிறாள்'' என்று சொல்லி மேகங்கள் மழையாகப் பெய்து ஓய்ந்தன.

மழை பெய்தவுடன் பூமியில் பயிர்களும் செடி கொடிகளும் மரங்களும் வளர்ந்து செழித்தன.

முனிவர் அடுத்ததாகப் பூமிதேவியை அழைத்து, ''பூமகளே! உன்னிடம் பச்சைப் பசேலென்று செழித்து வளரும் இந்தப் பயிர்பச்சைகள் புண்ணியத்தின் பலனாக வளர்ந்திருக்கின்றனவா, பாவத்தின் பலனாக வளர்ந்திருக்கின்றனவா? பாவத்தின் பலனாக வளர்ந்தன என்றால் பாவங்களை வைத்திருப்பவள் நீதானா?'' என்று வினவினார்.

அந்த மகான் கூறியதைக் கைகுவித்துச் சிரம் வணங்கிக் கேட்டுக்கொண்டே நிலமகள், ''சுவாமி! பயிர்பச்சைகள் வளரக் காரணமாக இருப்பது பாவமா புண்ணியமா என்பது எனக்குத் தெரியாது. என்மீது வளரும் பயிர்பச்சைகளை மக்கள் தங்கள் கர்மவினைகளுக்கு ஏற்ப எடுத்துச்சென்று அவற்றை அனுபவிக்கிறார்கள். பிறகு அவற்றைக் கழிவுப் பொருள்களாக என்மீதே போட்டுவிடுகிறார்கள். நான் அவற்றைக் கருணையின் வடிவமாக விளங்கும் கங்காதேவியிடம் கொண்டுபோய்ச் சேர்த்துவிடும் எனது தர்மத்தைச் செய்துகொண்டிருக்கிறேன்'' என்று தெரிவித்தாள்.

முனிவர் ஒன்றும் புரியாமல் சங்கடப்பட்டார். அதற்கும் மேல் அவர் யாரைப் போய்க் கேட்க முடியும்? குழம்பிய நிலையில் அவர் திரும்பவும் கங்கைக் கரைக்குத் திரும்பியபோது, கங்காதேவி முன்பு போலவே ஒரு சாதாரணப் பெண்ணாக அவரை நோக்கி வந்தாள். முனிவர் அவளிடம், ''மகளே! உண்மையில் நடப்பது என்ன என்று உனக்கே தெரியாத நிலையில் ஏதோ நீ கூறினாய். நீ சொன்னது வேறாகவும், நடப்பது வேறாகவும் இருக்கின்றன! பாவங்கள் என்னதான் ஆகின்றன என்று சமுத்திரராஜன் முதற்கொண்டு பூமகள் வரையிலுமுள்ள அனைவரையுமே விசாரித்துப் பார்த்தேன். கங்கையில் குவிக்கப்படும் பாவங்கள் ஒரு சக்கரம் போலவே சுழன்று சுழன்று வந்து கங்கையை அடைகின்றன. இந்தச் சக்கரச் சுழல் தான் பிரபஞ்சம் என்று சொல்லப்படுகிறதா? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே!'' என்றார்.

முனிவர் அப்படிக் கேட்டதும், சாதாரணப் பெண் வடிவில் வந்திருந்த கங்கை அந்த வடிவம் நீங்கித் தன் சுயவுருவத்தில் காட்சி தந்து பேசினாள்: ''சுவாமி! மக்கள் செய்யும் பாவங்களெல்லாம் சக்கரம் போன்று சுழன்று வந்து பூமிதேவியையும் என்னையுமே வந்தடைகின்றன. இது எனக்கும் பூமிதேவிக்கும் மிகவும் பெரிய ஒரு சித்திரவதையாகவே இருந்துகொண்டிருக்கிறது. எங்களுடைய இந்தத் துன்பத்திற்கு விமோசனம் தரக்கூடியவர்களாக இருப்பவர்கள் தங்களைப்போன்ற உண்மை மகாத்மாக்களே ஆவர். மகான்களுக்கு உள்ள மகிமையே அலாதியானது. எங்களிடம் உள்ள பாவங்கள் மகான்களை அணுகாததுடன் அவர்கள் தொடர்பு காரணமாக அவற்றுக்கு இருப்புக்கூட இல்லாமலே மறைந்து போகின்றன. தங்களைப் போன்ற யாராவது ஓர் உண்மை மகான் வந்து என்னிடம் நீராடும்போது, என்னிடம் சேர்க்கப் பட்டுள்ள பாவங்கள் வெகுவாகக் குறைந்து, நான் ஆறுதல் பெறுகிறேன். கனன்று எரியும் நெருப்பில் போடப்படும் விறகு தன் உருவத்தையே இழந்து சாம்பலாவதைப் போல, நான் சுமந்துகொண்டிருக்கும் மக்களின் பாவங்கள் தங்களைப் போன்ற மகான் வந்து என்னிடம் நீராடுவது காரணமாக வெகுவாகக் குறைந்து போகின்றன. தங்களைப் போன்ற உண்மை மகாத்மாக்கள் நடப்பது, சிந்திப்பது, பேசுவது, உண்பது, உறங்குவது என்று எந்தச் செயலைச் செய்தாலும் அவர்களிடம் திகழும் தெய்விகம் காரணமாகப் பூமிதேவியின் மீது குவிக்கப் பட்டிருக்கும் பாவங்கள் வெகுவாகக் குறைகின்றன. ஆகவே பூமிதேவியும் நானும், தங்களைப் போன்ற

மகான்களின் தொடர்பு எங்களுக்கு எப்போது கிடைக்கும் என்று ஆவலோடு ஏங்கிக் காத்துக் கொண்டிருக்கிறோம். எனவே தங்களைப் போன்ற உண்மையான மகான்களே எங்கள் இருவருக்கும் உபகாரம் செய்யும் உத்தம தெய்வங்களாகத் திகழ் கிறீர்கள்.''

கங்காதேவி தந்த பதில், பாவத்திற்கு எப்படி முடிவு ஏற்படுகிறது என்ற உண்மையை விளக்கி, முனிவரின் குழப்பத்தை நீக்கியது. மகிழ்ச்சியுடன் அவர் கங்கையில் இறங்கி நீராடினார். அதைக் கண்டு கங்கையும் மகிழ்ச்சியில் பூரித்தாள்.

* * *

ஒரு சமயம் கங்கையன்னை சிவபெருமானிடம், "சுவாமி! மக்கள் எப்படி எப்படியோ வாழ்ந்து எத்தனை எத்தனையோ பாவங்களைச் செய்கிறார்கள். என்னிடம் வந்து நீராடுவதனால் அவர்கள் செய்த பாவங்களையெல்லாம் நான் ஏற்றுக்கொள்கிறேன். இப்படி அவர்கள் விட்டுச் செல்லும் பாவங்களை நான் எவ்வளவு காலம்தான் சுமந்துகொண்டிருக்க முடியும்? நான் படும் இந்தச் சித்திரவதைக்கு ஒரு முடிவே கிடையாதா? எனக்கு எப்போது விமோசனம் ஏற்படும்? நான் எப்படித்தான் நற்கதி அடைவது?'' என்று கேட்டாள்.

அதற்குச் சிவபெருமான் கூறிய பதில் வருமாறு: "கங்காதேவி! நீ நற்கதி பெறவும் ஒரு வழி இருக்கிறது. உன்னிடம் வந்து நீராடும் மக்களைப் பாவங்களிலிருந்து விடுவித்து நீ புனிதப்படுத்திக் கொண்டே இரு. மகான்கள் உன்னிடம் வந்து நீராடி உன்னைப் பாவங்களிலிருந்து விடுவித்துப் புனிதப்படுத்துவார்கள்.''

* * *

'கங்கையில் சேரும் பாவம் என்ன ஆகிறது?' என்ற இந்தக் கதை மகான்களின் மகத்துவத்தை விளக்குவதற்காக எழுந்த கதை என்றே தோன்றுகிறது.

மற்றபடி கங்கைக்காவது பாவம் சேருவதாவது? கங்கை, கங்கைதான். ஒருநாளும் அதை எந்தப் பாவமும் அணுக முடியாது

மக்களைப் பாவத்திலிருந்து கங்கை விடுவிக்கிறது; பத்தாத்மாவான ஒருவன் கங்கைக் கரையில் உயிர் துறப்பானானால், அது அவனுக்கு நன்மையைத் தரும்—என்று ஆண்டாண்டு காலமாக இந்துக்கள் நம்பி வருகிறார்கள்.

கங்கையைப் பிரத்தியட்ச பிரம்மம் (பிரம்மவாரி) என்று ஸ்ரீராமகிருஷ்ணர் கருதினார். கங்கையின் மகத்துவத்தைக் குறித்து ஸ்ரீராமகிருஷ்ணர், மற்றும் அவரது சீடர்களின் வாழ்வு—வாக்கு ஆகியவற்றில் பல குறிப்புகள் காண்கின்றன.

கங்கையைப் பற்றி ஆன்றோர்களின் சில கருத்துக்கள் வருமாறு :—

புனித கங்கையில் நீராடினால், ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரி, பிறந்த நாளிலிருந்து செய்த பாவங்கள் பூராவும் தீர்ந்துவிடும்.

– மகாபாரதம்

கங்கையில் நீராடினவர்களின் ஏழு தலைமுறைகளுக்குப் பாவம் அணுகாது. ஒரு மனிதனின் அஸ்தி கங்கை ஜலத்தில் தொட்டுக் கொண்டிருக்கும் வரை அந்த மனிதன் சுவர்க்கத்திலே பெருமைப் படுத்தப்படுவான்.

– மகாபாரதம்

கங்கையே! எனக்குப் பெரிய அரச பதவிகள் வேண்டா. உன் கரையிலுள்ள மரத்தில் கூடுகட்டி வாழும் ஒரு பறவையாக நான் பிறந்தால், அதுவே போதும்! அல்லது உன்னிடம் வாழும் ஓர் ஆமையாகவோ, மீனாகவோ, புழுவாகவோ, ஜன்மமெடுத்தாலே போதும்.

- வால்மீகி மகரிஷி

கங்கையே! யமனிடமிருந்து எம்மை மீட்கும் சக்தி உன் ஒரு துளி நீருக்குத்தான் இருக்கிறது!

– மகாகவி காளிதாசன்

எவனால் பகவத்கீதை சிறிதளவாவது படிக்கப் பட்டதோ, கங்கை நீர் ஒரு துளியாவது பருகப் பட்டதோ, முராரியான பகவானுடைய பூஜை ஒரு தடவையாவது செய்யப்பட்டதோ அவனுக்கு யமபயமில்லை.

- பஜகோவிந்தம்

கங்கையே! உன் அலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தாலும், உன் நீரில் அமிழ்ந்து நீராடினாலும், இந்திர பதவி தேடி வந்து கிட்டும்.

– ஓர் ஆசாரிய புருஷர்

கங்கைக் கரையில் வசிப்பவர்கள் உண்மையிலேயே தேவர்கள்தான். கங்கைக் கரையில் வாழ்பவர்கள் தேவர்களாக அன்றி வேறு யாராக இருக்க முடியும்? தினமும் இயற்றப்படும் பாவங்கள் கங்கையில் நீராடுவதால் நிவர்த்தியாகி விடுகின்றன. ...கங்கையின் இரு கரைகளிலும் எட்டு மைல்கள் தூரத்திற்குச் சுத்தக் காற்று வீசுகிறது. இந்தக் காற்று நாராயண ஸ்வரூபமாகும்.

–அன்னை ஸ்ரீசாரதா தேவியார்

ஆன்மாவின் நிலை



ஆர். ரங்காச்சாரி

'அகவுயிர்' என்னும் ஜீவாத்மாவுக்கும், 'இறைவன்' என்னும் பரமாத்மாவுக்கும் உள்ள தொடர்பை, ஒன்பது விதமாக வைஷ்ணவ ஆசார்யர்கள் கூறுகிருர்கள்.

பிதா ச ரக்ஷக: சேஷி பர்த்தா ஜ்ஞேயோ ரமாபதி: |
ஸ்வாமீ ஆதாரோ மமாத்மா ச போக்தா ச ஆத்யம்
அ௱தித: ||

1. தந்தை—மகன், 2. காப்பவன்—காக்கப்படுபவன், 3. உடையவன்—உடைமை (சேஷி—சேஷம்), 4. நாயகன்—நாயகி, 5. அறியப்படுபவன்—அறிகிறவன், 6. ஆண்டான்—அடிமை, 7. பற்றுக்கோடு—கொடி (ஆதார—ஆதேயம்), 8. சரீரி—சரீரம் (உயிர்—உடல்), 9. அனுபவிப்பவன்—அனுபவிக்கப்படும் பொருள் (போக்தா—போக்யம்) என்று, முறையே பரத்துக்கும் ஜீவனுக்கும் உள்ள உறவு ஆகும். இதன் விவரத்தைச் சற்றுக் காணலாம்.

1. தந்தை-மகன் (பித்ரு—புத்ர ஸம்பந்தம்)

"யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே" என்று மறை முழங்குகிறது. எல்லாச் சேதனப் பொருள்களும் அசேதனப் பொருள்களும் (அறிவுடையவையும் அறிவில்லாதவையும்) பரம்பொருளிவிருந்து உண்டானவையே ஆகும். இதனை நம்மாழ்வார் விரித்து உரைக்கிருர்:—"நாம் அவன் இவன் உவன் அவள் இவள் உவள் எவள் தாம் அவர் இவர் உவர் அது இது உது எது வீமவை இவை உவை அவை நலம் தீங்கு அவை ஆம் அவை ஆயவை ஆய் நின்ற அவரே."

"அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு."

இது ப்ரணவத்தின் முதல் எழுத்தாகிய அகாரத்தின் திரண்ட பொருள்.

பசுவுக்குத் தன் கன்றினிடம் இயற்கையாகவே அன்பு பெருகும். இதனையே வாத்ஸல்யம் என்ற சொல் குறிக்கும். (ஜனனீ—ஜன்ய விளைவு.) ஆகவே, இந்தத் தொடர்பு ஒழிக்கவொண்ணுத தாம். இறைவனை விட்டு நாம் ஓடினுலும் அவன் நம்மை விடான். Francis Thompson என்னும் ஆங்கிலக் கவி இதனை 'Hound of Heaven' என்ற கவிதையில் வெகு அழகாகச் சித்திரித்துள்ளான். சைவர்கள், ஞானசம்பந்தரின் இயல்பு இந்த வாத்ஸல்ய நிலை என்பர்.

2. காப்பவன்-காக்கப்படுபவன் (ரக்ஷக-ரக்ஷ்ய)

இதுவும் வேதவாக்கே. "யேந ஜாதாநி ஜீவந்தி— மூவாத் தனிமுதலாய் மூவுலகும் காவலோன்." அறிவுடையனவும், அல்லவையும் பரமனுலேயே நிலைபெறுகின்றன. "மத்த: ஸர்வம். ப்ரவர்த்ததே" (கீதை10-8.) இதுவும் அகாரத்தின் தத்துவார்த்தம்.

3. உடையவன்-உடைமை (சேஷி-சேஷ பாவம்)

இந்தத் தொடர்பு மிகவும் பொருள்படைத்தது. ஈசாவாஸ்ய உபநிடதம் முதல் மந்த்ரத்தில் அறுதியிடப்படுவது. ஆக, 'யான், எனது' என்று கொள்ள, ஜீவனுக்கு நிலமே இல்லை. ஆதிசேஷன் ஆம் அனந்தனின் நிலை இதனை நன்கு உருவகப் படுத்துகிறது.

4. நாயகன்-நாயகி

இறைவன் ஒருவனே புருஷன்; மற்ற ஜீவன்களெல்லாம் ஸ்திரீகள் என்பதும் பிரமாணம். 'ஸ ஏவ வாஸுதேவோ ஹி ஸாக்ஷாத் புருஷ உச்யதே | ஸ்த்ரீப்ராயம் இதரத் ஸர்வம் ஜகத் ப்ரஹ்ம புரஸ்ஸரம் ||' மீராபாய் இந்த உண்மையைக் காட்டியே; பிருந்தாவனத்துள் நுழைய அனுமதி பெற்ருள். கற்புடைய பெண்டிர் தன் நாயகனையன்றி வேறொருவரையும் நோக்கார் அன்ருே? வேருெருவரிடம் எதையும் பெற விழைவரோ? அந்தப் பரமன் எல்லையற்ற அழகும் நலமும் பரிவும் கொண்டிருப்பதனுல் ஜீவனுக்கு உகந்த நாயகனுகவே எப்போதும் இருக்கக்கடவன்.

இந்த நிலை எல்லாச் சமயங்களிலும் அழகாகக் காட்டப்பட்டுள்ளது. சிறப்பாக இது மாணிக்க

வாசகர் நிலை என்பர். "ஒண்தாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கும் உணர்வு"

5. அறியப்படுபவன்-அறிகிறவன் (ஜ்ஞேய-ஜ்ஞாத்ரு)

பரமாத்மாவே அறியத் தகுந்தவன். அவனை அறியக் கூடியவன் ஜீவாத்மாவே (ஜ்ஞான ஸ்வரூபன்-ஜ்ஞான குணகன்). பராசரர் இதனைத் தெளிவுபடுத்துகிறார் — "சாஸ்திரத்தினால் உண்டான எந்த அறிவினால் பகவான் அறியப்படுகிறானோ, பகுத்தறிவினாலும் பார்க்கப்படுகிறானோ, பக்தியினால் அடையப்படுகிறானோ அதுவே ஞானம்; மற்றவை யாவும் அஞ்ஞானமேயாகும்."

"ஸம்ஜ்ஞாயதே யேந ததஸ்ததோஷம் சுத்தம் பரம் நிர்மலம் ஏகரூபம் | ஸம்த்ருச்யதே வாப்யதிகம் யதே வா தத்ஜ்ஞாநமஜ்ஞாநமதோ அந்யதுக்தம் ||" வேதவேத்யனன்றோ பரமன்.

கற்றதனால்ஆய பயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்?

6. ஆண்டான்—அடிமை

இந் நிலை இயல்பாய் விளங்கக் கூடியது. "ஸ்வத்வம் ஆத்மநி ஸஞ்ஜாதம் ஸ்வாமித்வம் ப்ரஹ்மணி ஸ்திதம்." எல்லாம் ஆண்டவன் அருளாலே என்று இருப்பது அறிவுடைமை. அவனே ஸ்வதந்த்ர கர்த்தா.

"களைவாய் துன்பம் களையா தொழிவாய், களைகண் மற்றிலேன்" "மற்றை நம் காமங்கள், மாற்று" என்றே நாம் வேண்ட வேண்டும். "ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டும்", "சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம், நின்றால் மரவடியாம் நீள் கடலுள் என்றும் புணையாம் மணி விளக்காம் பூம் பட்டாம் புல்கும் அணையாம் திருமாற்கு அரவு." இப்படி எப்போதும் பரமனுக்கு வேறொன்றும் வேண்டாது, கைங்கர்யம் செய்வதே ஜீவனுக்கு உற்ற தர்மம். பரமனை 'எதிர்த்தும்' இவ்வழி ஈடுபடலாம். ராமாயணத்தில் லக்ஷ்மணனின் நிலை காண்க. சைவத்தில் இதனைத் 'தாஸ வ்ருத்தி' என்று அப்பரின் வாழ்க்கையோடு இணைப்பர்.

7. பற்றுக்கோடு—கொடி (ஆதார-ஆதேயம்)

, எல்லாம் பரமனில் உறைகின்றன. 'தஸ்மிந் லோகா: ச்ரிதா: ஸர்வே தது நாத்யேதி கச்சந.' சொல்லப்போனால், யாவும் இறைவனுடைய ஸ்வரூபத்திலே ஒரு சிறு கூறேயாகும். விச்வரூப தர்சனங்களை எண்ணவும். பரமாத்மா தன்னைத் தவிர மற்ற எல்லா வஸ்துவுக்கும் ஆதாரம். அவை ஆதேயம் எனச் சொல்லப்படும். பரமனின் கட்டளைக்கு உட்பட்டு, யாவும் நிகழ்கின்றன. ஆகவே ஈச்வரன் தாரகனாகவும் நியந்தாவாகவும் விளங்குகிறான்.

8. சரீரி—சரீர ஸம்பந்தம்

இதுவே விசிஷ்டாத்வைத தர்சனத்துக்கு உயிர் நாடி எனலாம். பிரகிருதியும் ஜீவனும் பரமனுக்கு உடல் போன்றவை. அவன் உயிர். "ய ஆத்மநி திஷ்டந் யஸ்ய ஆத்மா சரீரம்; யோ விஜ்ஞாநே திஷ்டந் யஸ்ய விஜ்ஞாநம் சரீரம்." "உடல்மிசை உயிரெனக் கரந்து எங்கும் பரந்து உளன்." "ஸ்ரீமந் நாராயண ஏவ சித் அசித்விசிஷ்ட: அத்வைதம் தத்வம்" என்றபடி, இதுவே எல்லாப் பிரமாணங்களையும் ஒன்றுபடுத்துகிறது. இந்தத் தத்துவம் 'பலவினில் ஒன்று, ஒன்றில் பல' என்ற அளவில், பல துறைகளுக்கும் பயன் தரும்.

9. அனுபவிப்பவன்—அனுபவிக்கப்படுவது (போக்தா—போக்யம்)

இந்த நிலை மிகச் சுவையுடையது. 'அஹம் அந்நம் அஹம் அந்நாத' என்கிறது: சுருதி. ஜீவன் பரமனில் இன்பம் காண்பதில்லை. பரமனே ஜீவனைச் சுவைத்து இன்புறுகிறான். அந்த இன்பமே ஜீவனுக்கு உகப்பு. இதுவே ஆத்ம சமர்ப்பணம். "எனது என்பது என்? யான் என்பது என்? தீர இரும்பு உண்ட நீர் அதுபோல என் ஆருயிரை ஆரப் பருக எனக்கு ஆரா அமுது ஆனாயே. எனக்கு ஆரா அமுதாய், எனது ஆவியை இன் உயிரை மனக்கு ஆராமை மன்னி, உண்டிட்டாய், இனி உண்டொழியாய் புனக்காயா நிறத்த, புண்டரிகக் கண், செங்கனிவாய், உனக்கு ஏற்கும் கோலமலர்ப் பாவைக்கு அன்பா! என் அன்பேயோ!"

—திருவாய்மொழி 10,10.

குறிப்பு: ஜீவனைத் தனியாக 'அணு' 'சித்' என்றும், ஜீவன்கள் நித்ய, முக்த, பத்த என மூவகைப்படுவர் எனவும், யாவும் பரமனின் சுதந்த்ர அதீனம் என்றும், ஜீவன் பரமனின் அம்சம், ப்ரகாரம் (தோற்றம், உரு, mode) எனவும் கூறுவர்.

பரமார்த்தப் பிரசங்கம்

சுவாமி விரஜானந்தர்

யோகிகளும் துறவு மனப்பான்மை கொண்டவர்களும் தங்களுடைய சொந்த இன்பத்திற்காக எவரிடமிருந்தும் தானம் எதையும் ஏற்பதில்லை. ஏனென்றால், அவ்விதம் ஏற்பது அவர்களின் சுதந்திரத்தையும் மனத்தூய்மையையும் பாதித்து ஊறு விளைவிக்கிறது. தானம் ஏற்பதால் தானம் கொடுத்தவருக்குக் கட்டுப்பட்டுவிட்ட உணர்ச்சி வந்துவிடுகிறது; தானம் கொடுத்தவரின் பாவம், தானம் பெற்றவரின் உடலையும் உள்ளத்தையும் மாசுபடுத்துகிறது.

'இது எனக்குக் கிடைக்கட்டும்! அது எனக்குக் கிடைக்கட்டும்! இப்படி நடக்கட்டும்! அப்படி நடக்கட்டும்! இது எனக்கு வேண்டும்! அது எனக்கு வேண்டும்!' என்ற இது போன்ற ஆசைகளுக்கு உட்பட்டிருப்பதும், அந்த ஆசைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காகத் தானங்கள் ஏற்பதும் 'பரிக்கிரகம்' எனப்படும். 'அபரிக்கிரகம்' (தானங்களை ஏற்காமல் இருப்பது) என்பது ஆசையே இல்லாத துறவு மனப்பான்மை ஆகும்.

ஆனால் உடலைக் காப்பதற்காக மட்டும் எதையாவது சிறிதைத் தானமாக ஏற்பது பரிக்கிரகம் ஆகாது. மேலும், ஞானிகளோ மிகவும் அவசியமான அந்த அற்ப உடல்தேவை அல்லது உடல் வசதியின் மீதுங்கூடப் பற்றுதல் கொள்ளுவதில்லை. எந்தவிதமான போகத்திலும் சுகம் இல்லை என்பதை அவர்கள் உறுதியாக நன்கு உணர்ந்திருக்கிறார்கள்.

ஆனால் அவர்களில் ஒருசிலர் உலக நன்மையின் பொருட்டு ஏதாவது சமூகப்பணியை ஆரம்பித்து அதைத் திறமையாகவும் விரிவாகவும் நடத்துவதற்காக நன்கொடையை ஏற்பார்களானால் அதில் குற்றமே இல்லை.

• • •

நாமமும் அந்த நாமத்தால் குறிக்கப்படும் நாமியும் ஒன்றேயாகும். பகவானும் அவருடைய நாமமும் ஒன்றேயாகும்.

கடவுளின் வடிவங்கள், மங்களகுணங்கள், பாவனைகள் ஆகிய இவை எப்படி எல்லையற்றவையோ, அனந்தமோ, கணக்கற்றவையோ அதுபோலவே அவருடைய நாமங்களும் கணக்கற்றவை ஆகும்.

பகவானின் நாமத்திற்குள்ள சக்தி தடுக்கவோ எதிர்த்து நிற்கவோ இயலாதது; எல்லையற்றது.

பகவானின் எந்த நாமத்தில் உனக்கு ருசி அதாவது விருப்பம் இருக்கிறதோ அந்த நாமத்தையே தொடர்ந்து ஜபம் செய்து வா. கடவுள் அதற்கு அருள்கூர்ந்து இயங்கிவருவார். கடவுளின் நாமத்தை ஜபிப்பது என்ற ஒரு சாதனையை மேற்கொள்வதனாலேயே எல்லா விருப்பங்களும் நிறைவேறும்; கடவுளின் தரிசனத்தையும் பெற முடியும். 'ஜபாத் ஸித்தி:'—ஜபம் சித்தி தரும்; ஜபத்தின் மூலம் கடவுளின் தரிசனம் அடையப்படுகிறது.

• • *

ஆனால் குருபரம்பரையின் வழியாக வந்துகொண்டிருக்கும் ஆன்மிக அறிவுரைகளுக்கு, அதாவது சாதனைக் கிரமத்திற்குத் தன்னை உட்படுத்திக் கொண்டு அதற்கேற்ப வாழாத எவரும் உயர்ந்த ஞானபோதம் (அனுபூதியைப்) பெற இயலாது.

குருபரம்பரையின் மூலம் குருவிடமிருந்து சீடனுக்கு ஓர் ஆன்மிகச் சக்தி பாய்கிறது. அந்தச் சீடன் தன்னளவில் காலக்கிரமத்தில் குருவாக ஆனவுடனே அவனுடைய சீடர்களுக்கு அந்த ஆன்மிகச் சக்தி பாய்கிறது.

இவ்விதம் நீண்ட நெடுங்காலமாக வந்துகொண்டிருக்கும் குருமார்களின் கடுந்தவத்தின் பலனாக, பரம்பொருளின் குறிப்பிட்ட நாமங்களின் அத்யாத்ம சக்தி, ஒன்றுதிரட்டிச் சேகரிக்கப்பட்ட நிலையில் விசேஷ பீஜமந்திரங்களாக உறைந்திருக்கிறது.

இந்த மந்திரமே சாதகனின் வாழ்க்கைக்கு நம்பிக்கை யூட்டுவதாகவும், ஆசைக்கு உரிய பொருளாகவும், உயிர்நாடியாகவும் விளங்குகிறது; இந்த மந்திரமே அவனுக்குத் தன் இஷ்ட தெய்வத்தின் உயிருள்ள சின்னமாகவும் ஆகிறது.

அந்த மந்திரம், மனதை ஒருமுகப்படுத்தி இடைவிடாமல் ஜபிக்கப்பட்டால், அதனுடைய எல்லை

யற்ற ஆற்றல், மகிமை பிரத்தியட்சமாகவே வெளிப் படுகிறது. ஆனால் அதற்கு ஒரு சாதகன் தீட்சை பெற வேண்டும். சாஸ்திரங்கள் விதித்துள்ள முறைப் படி, குருபரம்பரையைச் சேர்ந்தவரிடமிருந்து தீட்சாமந்திரத்தை ஏற்றுள்ளவரும், குருவுக்கு உரிய லட்சணங்கள் பொருந்தியவருமாகிய பரிசுத்தமான ஒருவரிடமிருந்து தீட்சை ஏற்க வேண்டும். பிறகு, தன் குருவின் போதனைப்படி சாதனைசெய்து வந் தால், அந்தக் குருவிடம் பரிபூரண நம்பிக்கையும் பக்தியும் கொண்டிருந்தால், விரைவிலேயே அவன் மந்திரசித்தி அடைகிறான்; இறைவனின் சாட்சாத் காரத்தைப் பெறுகிறான்.

• • •

ஒருவன் அறையின் கதவுகளையெல்லாம் மூடி விட்டுத் தூங்கிக்கொண்டிருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அப்போது அவனுடைய பெயரைச் சொல்லி யாராவது கதவைத் தட்டினால் அவன் உடனே விழித்தெழுந்து பதிலுக்குக் குரல் கொடுத்து விட்டுக் கதவைத் திறப்பான் அல்லவா?

அது போலவே, ஒருவன் இஷ்டதெய்வத்தின் மந்திரத்தை ஜபம் செய்து நாமோச்சாரணமும் செய் தால், அத்துடன் தீவிர பக்தியோடும், குழந்தைக்கு இருப்பது போன்ற எளிய நம்பிக்கையோடும் ஆத்ம சாதனைகளில் ஈடுபட்டு வந்தால், எல்லா ஜீவன் களிடமும் குடிகொண்டிருக்கும் பகவான் விழிப் படைந்து, சாதகனின் இதயமாகிய கோவிலின் கதவைத் திறந்துவிட்டு அவனுடைய ஆவலைப் பூர்த்தி செய்துவிடுகிறார். அந்தச் சாதகனின் இஷ்ட தெய்வத்தின் வடிவத்தில் அவர் தம்மைக் காட்டி அருள்புரிகிறார்.

• • •

இறைவனின் திருநாமத்திற்கு அபார மகிமையும் எல்லையற்ற ஆற்றலும் உண்டு. அதை ஜபிப்பதால் பாவியும், துன்பத்தால் வருந்துபவனும், இறைவனைத் தூற்றுபவனும்கூட முக்தி பெறுகிறார்கள்; பக்தி இல் லாதவனும்கூட நாளடைவில் பகவானின் நாமத்தை ஜபிப்பதில் நாமருசியை (இனிய சுவையை)க் காண் கிறான்; அந்த நிலையில் லௌகிகப் பொருள்களிடம் அவனுக்கு இருந்து வந்த பற்றுதல் அகன்றுவிடு கிறது; அவற்றில் வெறுப்பும் தோன்றி வளர ஆரம் பிக்கிறது.


உன்னால் வேறு எந்தவித ஆன்மிகச் சாதனையும் செய்ய முடியாவிட்டால், குறைந்த பட்சம் பகவா னின் நாமத்தை ஜபிப்பதையாவது தொடர்ந்து செய்து வர வேண்டும்; அருள்தாகம் ததும்ப அவ ரிடம் பிரார்த்தனை செய்ய வேண்டும்; 'அப்போது மனதில் வலிமையும் சாந்தியும் தோன்றும். நாள டைவில் இறைவனின் திருவருளால் பிரேமைபக்தி யைப் பெறும் தகுதி வந்து சேரும்.

• • •

தவம் மூன்று வகைப்படும். அவை உடல், வாய், மனம் (காயிகம், வாசிகம், மானசிகம்) ஆகியவற் றுடன் தொடர்பு கொண்டவையாகும்.

விரதங்கள், தவமுயற்சிகள், துன்பத்தால் வருந்து பவர்களுக்கும் நோயாளிகளுக்கும் தொண்டு செய் வது—ஆகிய இவை போன்ற பணிகள் உடலால் செய்யப்படும் தவமாகும். உண்மையே பேசுவது, வாயினால் செய்யப்படும் தவமாகும். புலன்களை அடக்குதல், இஷ்டதெய்வத்தின்மீது மனதை ஒரு முகப்படுத்தித் தியானம் செய்வது—ஆகியவை மனதால் செய்யப்படும் தவமாகும்.

இந்த மூன்று வகையான தவங்களையும் உயர்ந்த ஆத்மானுபூதியைப் பெற விரும்புபவர்கள் அவ சியம் பழகி வர வேண்டும். *



சிவனே குரு; குருவே சிவன். முமுட்சுக்கள் இருவரிடமும் வேற்றுமை பாராட்டக்கூடாது.

—ஸர்வ வேதாந்த ஸித்தாந்த ஸார ஸங்கிரகம்

கல்வியில் சிறந்தவன் வயதில் சிறியவனாக இருந்தாலும் அவன் முதியவனே என்று தேவதைகள் கூறுகின்றனர்.

—மனுஸ்மிருதி

எல்லாப் பிராணிகளிடமும் ஈசுவரன் இருப்பதையும், பகவானிடம் எல்லாப் பிராணிகளும் இருப்பதையும் எவன் பார்க்கிறானோ, அவனே ஹரிதாசர்களில் சிறந்தவன் ஆவான்,

—ஸ்ரீசங்கரர் (பிரபோதஸுதாகரம்)



யுககுரு ஸ்ரீசங்கரர்

பேராசிரியர் டி. கே. நாராயணன்

யுகங்கள் நான்கு—ஸத்திய யுகம், திரேதா யுகம், துவாபர யுகம், கலி யுகம் என்று. நமது இதிகாஸ புராணங்களின்படி ஸத்திய யுகத்தில் தக்ஷிணு மூர்த்தியும், திரேதா யுகத்தில் தத்தாத்திரேயரும், துவாபர யுகத்தில் வேதவியாசரும், கலி யுகத்தில் சங்கரரும் யுககுருமார்களாக விளங்கி வந்துள்ளனர்.

இந்தியாவை உருவாக்கியவர்களும், இந்தியாவின் தலைவிதியை நிர்ணயித்தவர்களும் இந்த யுக குருக்களே ஆவர். இந்தியாவிற்கு மட்டும் அல்ல, அகில உலகிற்கே நல்வழியைக் காட்டிச்சென்ற பெருமை இவர்களைச் சாரும். இவர்களுக்கு நாம் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்தக் கலியுகத்தின் யுககுரு ஸ்ரீசங்கராசாரியார் ஆவார். ஸ்ரீசங்கரர் என்னும்போது ஒரு மேரு மலையே நம்முன் தோன்றி நிற்கிறது. எத்தகைய மேரு மலை? ஞானமாமேரு மலை. இன்று உலகம் முழுவதையுமே தழுவி நிற்கும் அத்வைத அமிர்தத்தை நமக்கு எடுத்து வழங்கிச் சென்ற அரும் பெருங்கடல் ஸ்ரீசங்கரரை நமது இதயக் கோயிலில் போற்றி வணங்க நாம் அனைவரும் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஸ்ரீசங்கரர் எட்டாம் நூற்றுண்டில் தோன்றினர். நாஸ்திகர்கள், கர்மகாண்டத்தில் அபார நம்பிக்கையுடையவர்கள் ஆகியோரின் பிடியிலிருந்து அன்று ஹிந்து மதத்தைக் காத்தருள இறைவனே சங்கரராகப் பாரதபூமியில் அவதாரம் செய்தார்.

அவரது காலத்தில் பாரதத்தில் எழுபதிற்கும் மேற்பட்ட பலவேறு உட்பிரிவுகள் ஹிந்து மதத்தில் காணப்பட்டன. அவை தங்களுக்குள் இட்ட சண்டையில் ஹிந்துமதம் அழிந்துவிடுமோ என ஆன்றோர் அஞ்சினர். அந்த நிலையில் ஸ்ரீசங்கரர் தோன்றி, அவை அனைத்தையும் தமது அத்வைதக் கொள்கையால் ஒன்றிணைத்து ஒற்றுமையை நிலைநாட்டி ஹிந்து தர்மத்தை மீண்டும் அரியணையில் அமர்த்தினர்.

சங்கரர் வெறும் ஞானி மட்டுமல்லர், தலைசிறந்த பக்தருமாவார் என்பது அவர் இயற்றிய எண்ணற்ற துதிகளைப் படித்து ரசிப்போருக்குத் தெரியவரும். பலவேறு தேவதைகளைக் குறித்து அவர் இயற்றியுள்ள ஸ்தோத்திரங்கள் நம் நாட்டின் மூலைமுடுக்குகளிலெல்லாம் பக்தர்களால் பாராயணம் செய்யப் பெற்று வருகின்றன.

உருவ வழிபாட்டிற்கு உட்பட்ட எல்லாத் தெய்வங்களையும் சூரியன், கணபதி, சிவன், விஷ்ணு, தேவி என்ற ஐந்தினுள் அடக்கிப் பஞ்சாயதன பூஜையை உருவாக்கிய பெருமை சங்கரரைச் சாரும்.

ஷண்மத ஸ்தாபகரும் ஸ்ரீசங்கரரே ஆவார். சைவம் வைஷ்ணவம் சாக்தம் ஸௌரம் காணபத்யம் கௌமாரம் என்ற அறுவகை வழிபாட்டு முறைகளையும் அவர் ஒன்றிணைத்தார். நீ எந்த உருவத்தை வழிபட்டாலும் இறுதியில் நீ போய்ச் சேருவது ஒரே இலட்சியத்தையே என்பதுதான் அவரது அடிப்படைப் போதனையாக விளங்கியதால் அவரது கொள்கைகள் பலதரப்பட்ட மக்களையும் கவர்ந்திழுத்தன. 'ஸ்ரீசங்கரரது கொள்கை அனைத்தையும் இணைப்பதேயன்றி ஒன்றையும் வெறுப்பது அல்ல' என்பதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

ஸ்ரீசங்கரர் புகட்டியது வெறும் வறட்டு வேதாந்தம் அல்ல. அது முழுக்க முழுக்க நடைமுறைக்கு ஏற்ற முறையில் அமைந்ததொன்றாகும். பிரம்மத்தை உணர்ந்த பிரம்மஞானியாக அவர் விளங்கிய போதிலும், அந்த உயர்ந்த நிலையில் இருந்து கொண்டு தாம் அடைந்த பெருநிலையை அனைவரும் அடைவதற்கான வழிமுறைகளைச் சாதாரண மக்களுக்கும் புரியும் வகையில் அவர் உணர்த்தினர்.

ஸ்ரீசங்கரரை மாயாவாதி எனவும், செயலற்ற சோம்பேறித்தனத்தைப் பரப்பியவர் எனவும் குறை கூறுபவர்கள் உண்மையில் அவரது தத்துவங்களைப் பற்றிக் கொஞ்சமும் தெரியாத பாமரர்களே ஆவர்.

சங்கரரது மாயாவாதம் எத்தகையது? "தோன்றி மறையும் தன்மையுடைய இந்தப் பிரபஞ்சம் நிலையானதல்ல. அது பொய். அதன்பின் உறையும் பிரம்மமாகிய பரம்பொருளே மெய்ப்பொருளாகும்" என்பதே அவர் புகட்டிய தத்துவம் ஆகும். இதை இல்லை என்று எவர் மறுக்க முடியும்? நிலையாமை தானே உலகின் இலட்சணமாகும்?

அடுத்து, 32 வயதே உலகில் உடம்போடிருந்த ஸ்ரீசங்கரர் அந்தக் குறுகிய காலத்திற்குள் செய்து சாதித்திருக்கும் செயற்கரிய செயல்களைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்ப்பவர்களுக்கு, செயலற்ற சோம்பல் நிலைக்கும் அவருக்கும் சிறிதேனும் சம்பந்தமே கிடையாது என்ற முடிவிற்கு உடனடியாக வருவதைத் தவிர வேறு வழி இல்லை. ஜெட் பிளேன் போன்ற நவீன வசதிகளையுடைய இந்த நாளில் சென்னையிலிருந்து டெல்லி போய்வருவதற்கே நாம் படுகிற பாடு நமக்குத் தெரியும். இத்தகைய வசதி ஏதும் இல்லாத அந்த நாளில் கால்நடையாகப் பாரதத்தைப் பன்முறை வலம் வந்து நாட்டின் நான்கு மூலைகளில்—சிருங்கேரி, துவாரகை, பதரிநாத், புரி—நான்கு மடங்களை ஸ்தாபனம் செய்து தர்மப்பிரசாரம் செய்து, பண்டிதர்களுடன் விவாதம் செய்து அவர்களைத் தோற்கடித்து, பிரஸ்தானத்ரயமான கீதை, உபநிடதங்கள், பிரம்மசூத்திரத்திற்குப் பாஷ்யங்களியற்றி, உள்ளத்தை உருக்கும் பலவேறு பக்திநூல்களை இயற்றிப் பல சீடர்களை உருவாக்கி எங்கும் அத்வைத மணம் கமழச்செய்த ஸ்ரீசங்கர பகவத்பாதர் எப்படிச் செயலின்மையைச் சிந்தித்திருக்க முடியும் என்பது குறித்து நாம் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

நேபாளத்திலுள்ள ஸ்ரீபசுபதிநாதர் கோயிலைப் புனருத்தாரணம் செய்து அங்கே ஒழுங்கான பூஜைமுறையை ஸ்ரீசங்கரர் உருவாக்கினார். பதரிகாசிரமத்தில் பகவானை வழிபடுகையில் 'ஹரிமீடே' ஸ்தோத்திரத்தையும், ஸ்ரீநகரில் 'ஸௌந்தர்ய லஹரி'யையும், காசியில் ஸ்ரீவிச்வநாதரின் தரிசனத்தின்போது 'அன்னபூர்ணா ஸ்தோத்திர'த்தையும் அவர் இயற்றினார். புரிக்கு அவர் விஜயம் செய்தபோது அங்கு ஓர் அற்புதத்தை நிகழ்த்தினார். "ஜகந்நாதஸ்வாமீ நயனபதகாமீ பவது மே" என்று தொடங்கும் நான்கு சுலோகங்களின் மூலம் அவர் ஜகந்நாதப் பெருமானை வழிபட்டார். அப்போது ஏரிகரையில் இருந்த ஓர் அரசமரத்தினடியில் புதைந்து கிடந்த ஜகந்நாதப் பெருமானின் மூர்த்தி அவரது ஞானதிருஷ்டிக்குப் புலப்பட்டது. அதன் விளைவாக, வெகு காலமாகக் காணாதுபோன அந்த மூர்த்தியைக் கோயிலில் பிரதிஷ்டைசெய்து மக்களையும் மன்னனையும் மகிழ்ச்சியில் திளைக்கச் செய்தார்.

ஏழைகளிடம் ஸ்ரீசங்கரர் மிகவும் பரிவு கொண்டு விளங்கினார். துறவிக் கோலத்தில் ஒரு முறை அவர் ஒரு வீட்டிற்குச் சென்று பிட்சை கேட்டார். அந்த வீட்டுப் பெண்மணியோ பரம ஏழை. அவளிடத்தில் நெல்லிக்கனி ஒன்றைத் தவிரக் கொடுப்பதற்கு ஏதும் இல்லை. எனவே அவள் அதை மனமுவந்து அவருக்குக் கொடுத்தாள். அவளது வறுமை கண்டு மனமிரங்கிய சங்கரர் 'கனகதாரா ஸ்தவ'த்தைப் பாடியருளினார். உடனே அந்த ஏழை ஸ்திரீயின் வீட்டில் பொன்மாரி பொழிந்தது. அதன்பின் அந்த இல்லம் 'ஸ்வர்ணத்துமனை' என்று அழைக்கப்பட்டதாக வரலாறு கூறுகிறது.

'மாத்ருதேவோ பவ' என்ற ச்ருதி வாக்கியத்தைத் தமது வாழ்வில் வாழ்ந்து காட்டியவர் சங்கரர். குடியிருந்த ஆலயமாகிய அன்னையினிடம் பேரன்பு கொண்டு விளங்கினார். எங்கோ சுற்றுப் பயணம் செய்துகொண்டிருந்த அவர் ஞான திருஷ்டியால் தம் அன்னையின் அந்திமகாலம் நெருங்கிவிட்டது என்பதை உணர்ந்து, ஓடோடியும் வந்து அவளை அடைந்தார். ஜீவப்பிரம்ம ஐக்கியம் பற்றி அவர் அவளிடம் எடுத்துப் புகட்டவும், அவள், "மகனே, இந்த உயர்ந்த தத்துவம் எனக்குப் புரியவில்லையே" என்று சொல்ல, உடனே சங்கரர் விஷ்ணுபகவானை ஒரு சுலோகத்தில் பாடினார். அதைக் கேட்டுக் கொண்டே அவரது அன்னை விஷ்ணுபதம் அடைந்தாள். அன்னையின் இறுதிக் கடன்களையும் தாமே செய்து, பிறகு அவர் தமது ஆன்மிகப் பணியைத் தொடர்ந்தார்.

வாழ்வில் நாம் படும் கஷ்டங்களுக்கும் இன்னல்களுக்கும் அடிப்படைக் காரணம் நம்மிலிருந்து மற்றவர்களை வேறாகக் கருதி வேற்றுமை பாராட்டுவதுதான். 'நான் வேறு, நீ வேறு' என்ற இரட்டை மனோபாவம் வந்தவுடனே மனதில் சுயநலம் தாண்டவமாடத் தொடங்கிவிடுகிறது. சுயநலம் உள்ள இடத்தில் அமைதி இருக்க வழியில்லை. ஏனெனில் சுயநலத்தைத் தொடர்ந்து சூது வாது பொறாமை முதலிய ஏனைய தீய குணங்களும் தாமே வந்து இடம் பெற்றுவிடுகின்றன. மாறாக, 'உலகிலுள்ள அனைத்தும் என்னிலிருந்து வேறுபட்டவையல்ல. நான் ஆத்மசொரூபம். அதே போல் மற்றவை யாவுமே ஆத்மசொரூபங்கள்தாம். எனவே நானும் எனக்குக் கட்புலனாகும் ஏனைய அனைத்தும் வேறு அல்ல, ஒன்றே' என்ற எண்ணத்தைக் கொண்டு விளங்கும்போது, எனது நலத்தைச்

சதா நாடும் நான், பிறவற்றின் நலனை நாடு கிறவனாக மாறிவிடுவேன். அந்த உயர்ந்த நிலை யில் என் மனதில் எங்கும் அமைதியும் ஆனந்த முமே குடிகொண்டிருக்கும். 'அனைத்தும் பிரம்ம மயம்; அனைத்தும் இறைசொரூபம்' என்ற எண்ணத் தில் சதா திளைத்து நிற்பதுதான் வையத்து வாழ் வாங்கு வாழ்வதற்கான அடிப்படைச் சாதனம் என்பது ஸ்ரீசங்கரரது கருத்தாகும்.

பக்தி வேறு, கர்மம் வேறு அல்ல. கர்மம் வேறு, ஞானம் வேறு அல்ல. அனைத்தும் ஒரே குறிக் கோளான ஆத்ம சாக்ஷாத்காரத்தை அடைவதற் கான பலவேறு மார்க்கங்களே ஆகும். யார் யாருக்கு அவரவர் தன்மைக்கேற்ப எந்த எந்த மார்க்கம் பொருந்துகிறதோ அந்த அந்த நெறியில் நின்று இலட்சியத்தை அடையலாம். குறி ஒன்று; நெறிகள் பல. இதை விளக்கும் வகையில்தான் ஸ்ரீசங்கரர் தாமே சிறந்த கர்மயோகியாகவும், மிகச் சிறந்த பக்திமானாகவும், ஒப்பற்ற ஞானவானாகவும் விளங்கினார். சுயநலமற்ற கர்மத்தின்மூலம் மாசற்ற பக்திப் பாதையில் நடந்து, உயர்ந்த அத்வைத ஞானத்தை அடையும் வழியைத்தான் ஸ்ரீசங்கரர் காட்டிச் சென்றார்.

ஸ்ரீசங்கரர் பாரதபூமியில் அவதரித்தாலும் அவரது உயர்ந்த அத்வைத தத்துவம் நமக்கு மட்டும் உரித் தானதல்ல. அது பாருலகோர் அனைவருக்கும் பொதுவான ஒன்றாகும். இதை நிரூபிக்கும் வகை யில்தான் பலவேறு சமயத்தவர்கள் இன்று சங்கரரது கொள்கைகளில் நாட்டம் கொண்டு சிறந்த அத்வைதிகளாக விளங்குகின்றனர். மேல்நாட்டுப் பல்கலைக் கழகங்கள் பலவற்றில் ஸ்ரீசங்கரரின் அத்வைத வேதாந்தம் இன்றும் பாடமாக வைக்கப் பட்டுள்ளது. நவீன விஞ்ஞானக் கொள்கைகளுக் கும் அத்வைத வேதாந்தம் எவ்வித மாறுபாடுமின்றி அப்படியே இடம் தருகிறது. ''பொருளும் சக்தியும் வேறானவை என்று எண்ணி வந்த வரையில் விஞ்ஞானிகளுக்கு அத்வைதம் புரியாமலிருந்தது. இப்பொழுது அவை இரண்டும் வேறல்ல, ஒன்றே என்று நிரூபிக்கப்பட்ட பின் தற்கால விஞ்ஞானி களால் அத்வைதக் கருத்தை ஒப்புக்கொள்ளாமல் இருக்க முடியவில்லை'' என்கிறார் ஆர்தர் ஜான்ஸன் பெர்க் என்ற மேல்நாட்டுப் பேரறிஞர்.

ஸ்ரீசங்கரரின் அத்வைதம் பகுத்தறிவின் அடிப் படையில் மிகவும் உயர்ந்த விஞ்ஞானக் கருத்துக் களுக்கும் என்றென்றும் இடம் தரும் பாங்கில் அமைக்கப்பட்டதொன்று என்பதால், அது அறிஞர் களையும் சிந்தனையாளர்களையும் மொழி, இன, தேச வேறுபாட்டிற்கெல்லாம் அப்பாற்பட்டுத் தன் னிடம் என்றும் ஈர்த்தவண்ணம் இருக்கிறது. யுக குருவாம் ஸ்ரீசங்கரரது உயர்ந்த அத்வைத தத்து வங்களைப் புரிந்துகொண்டு, அதற்கேற்ப, ஆள் வோரும் ஆளப்படுவோரும் நடக்க முற்பட்டால், உலகில் அமைதியும் இன்பமும் ஓங்கும் என்பதில் கொஞ்சமும் ஐயமில்லை.

உன்னைக் கொண்டென்னுள் வைத்தேன் என்னையும் உன்னில் இட்டேன்.

—பெரியாழ்வார்



நானே நீ நீயே நானும் இரண்டு மொன்றானால் தேனின் ருசியது போல் தெவிட்டாய் நீ பூரணமே.

—பட்டினத்தார்

எது தானம்? கைம்மாறு எதிர்பாராமல் கொடுப்பது. எவன் நண்பன்? பாவம் செய்வதிலிருந்து தடுப்பவன். எது ஆபரணம்? நல்லொழுக்கம். பேச்சுக்கு அழகு எது? உண்மை.

—ஒரு சுலோகம்

யாருக்கு அன்னம் போட வேண்டும்? பசித்தவனுக்கு. யாரைப் பூஜிக்க வேண்டும்? பகவானுடைய அவதாரத்தை. பகவான் யார்? சங்கரர் நாராயணர் இரண்டும் கலந்து ஓர் உருவமாக இருக்கும் மகேசர்.

—ப்ரச்னோத்ர ரத்னமாலிகை

இராமானுஜரின் இனிய அருளுரைகள்

ந. ரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல்.

முன்னுரை

சான்றோர்களின் உபதேசங்கள் நமக்கு வாழ்க்கையில் பெரிதும் நன்மையைத் தரக்கூடிய சிறப்புடையனவாகும்.

வழுக்கும் நிலத்தில் நடப்பதற்கு ஊன்றுகோல் பயன்படுகிறது. அதுபோல, வாழ்க்கையில் துன்பங்களும் தொல்லைகளும் தோன்றும்போது சான்றோர்களின் அறிவுரைகள் நமக்கு மிகவும் துணைபுரிகின்றன.

சான்றோர்களின் எல்லா உபதேசங்களுமே பொதுவாக நமக்கு நன்மையை விளைவிக்கும். எனினும் அந்த உபதேசங்களுக்குள்ளும் அவர்கள் தங்களின் இறுதிக் காலத்தில் கூறியருளிய சொற்கள் சிறப்பாக நமக்கு மிகவும் பயன் விளைவிக்கும் இயல்புடையனவாகும்.

இறுதிக் காலத்தில் சொல்லப்படும் சொற்கள் அனுபவத்தின் முடிவாகவும் பிழிவாகவும் தோன்றுகின்றன. அவை, தன்னலம் அற்ற நிலையில் பிறர் நலமே விழைந்து வெளிவரும் புனிதம் நிறைந்தவையாகும்; சொல்ல வேண்டிய பல கருத்துக்களையும் உள்ளடக்கிச் சுருக்கமாகப் புலப்படுத்துபவையாகும்; மீண்டும் ஒரு தடவை சொல்லவும் கேட்கவும் படாத நிலையைக் கொண்டன ஆகையால், மிக்க அருமையும் பெருமையும் வாய்ந்தனவாகும்.

சில உதாரணங்கள்

சர் வால்ட்டர் ஸ்காட் என்பவர் உலகப் புகழ் பெற்ற நாவலாசிரியரும், இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பேரறிஞருமாவார். அவர் தாம் இறந்து போகும் தறுவாயில் லாக்கர்ட் என்பவரைப் பார்த்து, "Be a good man, my dear" என்று அறிவுரை கூறினார். இந்த அறிவுரை சிறியதாக இருந்தாலும் எவ்வளவு கருத்தாழத்தைக் கொண்டிருக்கிறது!

அது போலவே மெய்ப்பொருள் நாயனர் தமது அமைச்சர்களுக்கும் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும், தம் உயிர் பிரியும்போது இறுதியாகக் கூறிய அறிவுரை, "நீங்கள் யாவரும் பரவிய திருநீற்றன்பு பாதுகாத்து உய்ப்பீர்" என்பதாகும். இந்த அறிவுரையில், அவர் தமது வாழ்நாள் முழுவதும் தாம் கடைப்பிடித்து ஒழுகி வந்த இலட்சியத்தைப் புலப்படுத்தியிருப்பதைப் பார்க்கலாம்.

இது போலவே, தாம் சிலுவையில் அறையப் பட்டபோது இயேசுபெருமான் கூறிய இறுதியுரை, "பிதாவே! தங்களின் கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்பதாகும். இவ்விதம் சொல்லி அவர் தம் உயிரை நீத்தார். இந்தச் சொல், எத்தனையோ பல நூற்றுண்டுகளாக உலகம் முழுவதும் வாழும் பக்தர்களின் மரணவேளை ஆறுதல் சொல்லாகப் பயன்படும் வகையில் அமைந்திருக்கிறது.

இவ்விதமே புத்தர், நபிகள்நாயகம், பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், அன்னை ஸ்ரீ சாரதாதேவியார், சுவாமி விவேகானந்தர், சுவாமி பிரம்மானந்தர், சுவாமி துரியானந்தர் ஆகியோரும்கூடத் தமது இறுதிக் காலங்களில் இவைபோன்ற அருளுரைகளைத் தம்மைப் பின்பற்றிச் சூழ்ந்து நின்ற அன்பர்களுக்குத் திருவாய்மலர்ந்தருளியுள்ளனர்.

இராமானுஜர்

அவை யாவும் எத்தகைய சிறப்பும் பெருமையும் உடையனவோ, அத்தகைய முறையில் ஸ்ரீ வைஷ்ணவப் பெரும் சான்றோராகிய இராமானுஜர், தாம் பரமபதத்துக்கு எழுந்தருளியபோது, அனைத்துயிர்களும் இறையருளைப் பெற்று உய்வு அடையும் பொருட்டு, தம்முடைய திருவடித் தொழும்பர்களான முதலிகளுக்கு அறிவுறுத்திய அருள்மொழிகளும் இணையற்ற பெருஞ்சிறப்பு உடையனவாகும்.

"ஒரு வைஷ்ணவனுக்கு, 'ஸ்ரீமந்நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே. ஸ்ரீமதே நாராயணாய நம:' என்ற த்வயத்தை ஒழிய மந்திரம் இல்லை; மிதுனம் (லக்ஷ்மீ நாராயணன்) ஒழிய வஸ்து இல்லை; கைங்கரியம் ஒழியப் புருஷார்த்தம் இல்லை; ஆசாரிய அபிமானம் ஒழிய மோட்ச உபாயம் இல்லை; பாகவத அபசாரம் ஒழிய மோட்ச விரோதம் இல்லை" என்று தம் திருவடியைச் சார்ந்த முதலிகளுக்கு இராமானுஜர் தமது இறுதிக் காலத்தில் அருளிச்செய்தார் என்று 'குருபரம்பரைப் பிரபாவம்' என்னும் நூல் கூறுகிறது.

'பிரபன்னாம்ருதம்' என்பது மற்றொரு நூல். அந்த நூல், இராமானுஜர் தமது திருவடி முதலிகளுக்குப் பின்வரும் 82 இனிய அருளுரைகளை உபதேசித்தருளினார் என்று சுவைபடத் தொகுத்துக் கூறுகிறது. இராமானுஜர் தம் இறுதிக் காலத்தில் அருளிச்செய்த அந்த இனிய அறிவுரைகள் மக்கள் உயிருக்கு உறுதி பயக்கும் வகையில் சிறந்து விளங்குகின்றன. இம்மைக்கும் மறுமைக்கும் நன்மை தரக்கூடியவையாகத் திகழும் அவை, மக்கள் வையத்தில் வாழ் வாங்கு வாழ்வதற்கு வழி காட்டுகின்றன. அந்த 82 இனிய அருளுரைகளும் பின்வருமாறு:—

1. இறைவன் தொண்டையும், அடியவர்களின் தொண்டையும், ஆசிரியரின் தொண்டையும் சம நிலையில் கருதி மதிக்க வேண்டும். 2. முன்னோர் அருளிச் செய்த நூல்களில் நம்பிக்கை வைக்க வேண்டும். 3. ஒருபோதும் புலன்களுக்கு அடிமைப் பட்டிருத்தல் கூடாது. 4. சாதாரண நூல்களில் ஒருபோதும் பற்றுக் கொள்ளுதல் கூடாது. 5. இறைவனைப் பற்றிக் கூறும் நூல்களில் நிலையான அன்பும் உறுதியும் கொண்டிருத்தல் வேண்டும். 6. தனது ஆசிரியர்களின் அருளால் ஞானோபதேசம் பெற்றபின்பு ஒரு பாகவதன் ஐம்புலன்களின் வழிச் செல்லுதல் கூடாது. 7. சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐந்தையும் அளவாக நுகர்தல் வேண்டும். 8. மலர் சந்தனம் வெற்றிலை முதலிய நுகர்ச்சிப் பொருள்களில் ஆசையற்றிருத்தல் வேண்டும்.

9. இறைவனின் திருப்பெயர்களில் இருப்பதைப் போல அடியார்களின் திருப்பெயர்களிலும் மதிப்பும் விருப்பமும் கொண்டிருத்தல் வேண்டும். 10. சிறந்த அடியார்களாகிய நல்லோர் இணக்கமே வீடுபேற்றுக்கு வாயில் என்று தெளிந்து அவர்களின் திருவுள்ளம் மகிழும்படி நடந்துகொள்ள வேண்டும். 11. ஒருவன் எவ்வளவுதான் அறிவுடையவனாக இருந்தாலும், இறைவனின் தொண்டையும் ஆசிரியனின் தொண்டையும் இகழ்ந்து, விருப்பு வெறுப்பு முதலியவற்றால் ஐம்புல நுகர்ச்சிகளில் ஈடுபடுவானானால், அவன் அழிந்து போவது நிச்சயம். 12. வெறும் புற ஒழுக்கங்களும் ஆசாரங்களும் மட்டுமே பகவானை அடைவிக்கும் என்று நினைத்தல் கூடாது. 13. ஸ்ரீவைஷ்ணவ ஒழுக்கங்களையே, வாழ்க்கையில் சிறந்த பயனாக மதித்தல் வேண்டும். 14. அடியார்களை ஒருபோதும் ஒருமையில் அழைத்தல் ஆகாது. 15. அடியார்களைக் காணும்போது தாமே முதலில் கைகூப்ப வேண்டும். 16. இறைவன் குரு அடியார் ஆகியோரின் முன்னிலையில் கால்களை நீட்டக்கூடாது.

17. இறைவன் குரு அடியார் ஆகியோரின் திரு மாளிகைகள் உள்ள திசையில் கால்களை நீட்டிக் கொண்டு படுத்தல் கூடாது. 18. துயில் விழித்து எழும்போது ஆசிரியர்களின் திருமரபை நினைத்துத் தியானம் செய்துகொண்டு எழுந்திருக்க வேண்டும். 19. இறைவன் சந்நிதியில் அடியார் பலர் திரளாக இருக்கும்போது, த்வய மந்திரத்தை நினைத்துக் கொண்டே வீழ்ந்து வணங்க வேண்டும். 20. ஸ்ரீ வைஷ்ணவர்கள், இறைவன் குரு அடியார் ஆகியோரின் குணநலன்களைப் புகழ்ந்து ஈடுபட்டிருக்கும் போது, அவர்களைத் தானும் இயன்ற அளவுக்கு வழிபடுவதை விட்டு, இடைநடுவில் எழுந்து போவது மிகவும் பெரிய குற்றமாகும். 21. ஸ்ரீவைஷ்ணவர்கள் எழுந்தருளினால், எதிரே சென்று வரவேற்று உபசரிக்கவும், அவர்கள் திரும்பிப் புறப்படும்போது பின்சென்று அவர்களின் திருவுருவம் கண்பார்வையிலிருந்து மறையும் வரையில் அஞ்சலியும் கையுமாகக் கண்களிக்க நோக்கிக் கொண்டிருந்து பிறகு திரும்பவும் வேண்டும். 22. ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அடிமைப்பட்டு ஆன்மாவை நற்கதி அடையச்செய்து கொள்ளாமல், வயிறு வளர்ப்பதற்காகச் சாதாரண மக்களின் பின்னே அவர்களைப் புகழ்ந்து போற்றிக்கொண்டு அலைந்து திரிதலாகாது. 23. எம்பெருமானின் விமான கோபுரங்களைக் கண்ட மாத்திரத்தில் எழுந்து அஞ்சலி செய்ய வேண்டும். 24. பிற சமயத் தெய்வங்களின் விமானம் முதலியவற்றைக் கண்டால், மிகவும் வியப்பாக நினைத்தல் கூடாது.



25. பிற சமயத் தெய்வங்கள் பற்றிய செய்திகளைக் கேட்டு மிகவும் மகிழ்தல் கூடாது. 26. ஸ்ரீ வைஷ்ணவர்கள் பகவத் பாகவத ஆசாரிய குண நலன்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது, அவற்றைக் கேட்டு மகிழ்ச்சியடையாமல், இடையில் குற்றம் குறைகளை எடுத்துக்கூறுவது பெரும் பிழையாகும். 27. ஸ்ரீவைஷ்ணவர்களின் திரு மேனி நிழலை மிதித்தல் கூடாது. 28. ஸ்ரீவைஷ்ண

வர்கள் மீது தம் நிழல் படும்படி நடத்தல் கூடாது. 29. அசுத்த மக்களைத் தொட்டு ஸ்ரீவைஷ்ணவர் களைத் தொடுதல் ஆகாது. 30. ஏழையான ஸ்ரீவைஷ்ணவன் நம் முன்னே தண்டனிட, அதை நாம் அசட்டை செய்வது அபசாரம் ஆகும்.

31. ஸ்ரீவைஷ்ணவர்கள் அடியேன் என்று முன் சொல்லி வணங்க, அவர்களைப் போற்றாமல் அசட்டை செய்தல் பெருங் குற்றமாகும். 32. யாரேனும் ஒரு ஸ்ரீவைஷ்ணவரின் குற்றம் குறைகளை நாம் அறிய நேர்ந்தாலும், அவற்றைப் பிறரிடம் சொல்லிக் கொண்டிராமல், அவரது நற் பண்புகளை மட்டுமே நினைத்துப் பாராட்டி வருதல் வேண்டும். 33. பகவத் பாகவத ஆசாரியர்களின் திருவடித் தீர்த்தங்களைச் சாதாரணப் பொதுமக்கள் பார்க்கும்படி பெறுதல் கூடாது. 34. தத்துவ ஞானம் (சித், அசித், ஈச்வரன் பற்றிய ஞானம்), இரகசியத்திரயம் என்பவற்றின் ஞானம் இல்லாதவர் களின் திருவடித் தீர்த்தத்தை ஒருபோதும் ஏற்றல் கூடாது. 1. 'ஓம் நமோ நாராயணாய' என்ற திரு மந்திரம், 2. 'ஸ்ரீமந்நாராயணசரணௌ சரணம் ப்ரபத்யே; ஸ்ரீமதே நாராயணாய நம:' என்ற த்வய மந்த்ரம், 3. கீதையின் சரமச்லோகமாகிய 'ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய ..' ஆகிய இம்மூன்றும் இரகசியத் திரயம் எனப்படும். 35. ஞான அனுஷ்டானங்கள் நன்றாகவே உடைய ஸ்ரீவைஷ்ணவர்களின் திருவடித் தீர்த்தத்தை நாள்தோறும் ஏற்றல் வேண்டும்.

36. பாகவதர்களுக்குத் தான் அடிமை என்று இராமல், தன்னை அவர்களுக்குச் சமமானவன் என்று நினைக்கக்கூடாது. 37. விழிப்பின்மையால் சாதாரணக் கீழ்மக்களைத் தீண்ட நேர்ந்தால், அந்த உடையோடு நீராடியே, பாகவதர்களின் திருவடித் தீர்த்தத்தை உட்கொள்ள வேண்டும். 38. ஞான பக்தி வைராக்கியங்கள் நிறைந்த பெருமக்களைப் பெரிதும் சிறப்பாகப் போற்றி மதிக்க வேண்டும். 39. ஞான பக்தி வைராக்கியங்களில் சிறந்த திரு மாலடியார்கள் திறத்தில், குலம் குணம் முதலியவை பற்றிக் கருதாமல், அவர்களைப் பெருமதிப்பிற்கு உரியவர்களாக மதிக்க வேண்டும். 40. சாதாரண உலக மக்களின் இல்லங்களில், பெருமாள் தீர்த்தமா கிலும் ஏற்கலாகாது. 41. அத்தகையோர் இல்லங் களில் உள்ள பெருமாள் திருவுருவங்களையும் சேவித்தலாகாது.

42. பெருமாள் உகந்தருளிய திவ்யதேசங் களில் பொதுமக்களின் பார்வை படுதலாகிய குற்றம் இல்லை. 43. இறைவன் சந்நிதியில் ஸ்ரீவைஷ்ணவர் கொடுத்த பிரசாதத்தைத் தனக்கு அன்றைய தினம் விரதநாள் என்று கூறி மறுத்தலாகாது. 44. பகவத் பிரசாதத்தை இன்னாருக்குக் கொடுத்து எஞ்சியது என்று மறுத்தலாகாது. 45. ஸ்ரீவைஷ்ண வர்களின் முன்னிலையில் தன்னுடைய பெருமை களைச் சொல்லிக்கொள்ளக் கூடாது.

46. பாகவதர்களின் எதிரில் மற்றொரு பாகவதரை அசட்டை பண்ணுதல் கூடாது. 47. பாகவத குணானுபவத்தை நாள்தோறும் ஒரு கணமேனும் செய்யாமல், தன் வேலையை மாத்திரம் பார்த்துக் கொண்டிருத்தல் ஆகாது. 48. ஆசாரியரின் குண நலங்களை நாள்தோறும் ஒரு நாழிகையாவது புகழ்ந்து போற்றுதல் வேண்டும். 49. நாள்தோறும் ஒரு நாழிகையேனும் அன்புடனும் நம்பிக்கையுட னும் திருவாய்மொழி முதலான பிரபந்தங்களை ஓதி வருதல் வேண்டும். 50. வயிறு வளர்ப்பதிலேயே காலம் கழிக்கும் உலக மக்களோடு கூட்டுறவு கொள்ளுதல் கூடாது.

51. ஸ்ரீவைஷ்ணவ சின்னங்களைத் தரித்துக் கொண்டு புலன்வழியே செல்லும் வஞ்சகர்களுடன் பழகுதல் ஆகாது. 52. எப்போதும் பிறர்மீது குற்றம் சொல்லிக்கொண்டே இருப்பவர்களோடு பேசுத லாகாது. 53. அத்தகையவரிடம் பேச நேர்ந்த குற்றத்தைப் போக்கிக்கொள்ள, ஸ்ரீவைஷ்ணவர் களோடு இடையறாது பழகி உரையாடுதல் வேண் டும். 54. ஆசாரியர்களையும் பாகவதர்களையும் சிந்திக்காதவர்களைக் கண்ணெடுத்துப் பார்த்தலும் ஆகாது. 55. த்வயத்தை அநுசந்திக்கும் (ஜபம் செய்யும்) பாகவதர்களோடு எப்போதும் பழகி நட்புக் கொள்ளல் வேண்டும்.

56. பிரபத்தி நெறியில் மூழ்கியிருக்கும் பாகவதர் களோடு இடையறாது தொடர்பு கொண்டு பழக வேண்டும். 57. தத்துவத்திரயம் இரகசியத் திரயங் களில் முழுப் புலமை வாய்ந்த பெருமக்களுடன் பழக வேண்டும். 58. உலகியலிலேயே உழலுபவர் களின் தொடர்பை விட்டு, பகவத் பக்தியிலேயே இருப்பவர்களோடு இடையறாது பேசியும் பழகியும் வரவேண்டும். 59. ஸ்ரீவைஷ்ணவர்கள் தன்னை அவ மானப்படுத்தினால் அவர்களிடம் பகைமை பாராட்டு தல் ஆகாது. 60. பரமபதத்திற்குப் போகவேண்டும் என்ற எண்ணம் கொண்டால் ஸ்ரீவைஷ்ணவர் களுக்கெல்லாம் நன்மை செய்ய வேண்டும்.

61. இறைவனுடைய கட்டளைக்கு மாறான செயல்களைச் செய்வதால் மிகப் பெரிய நன்மைகளை

அடைவதாக இருந்தாலும், ஒரு சேதனன் அவற்றைச் செய்தலாகாது. 62. பெருமாளுக்கு நிவேதனம் ஆகாத பொருள்களை உண்ணுதல் கூடாது. 63. இறைவனிடம் பக்தியின்றிப் பொருள் ஈட்டுதல், இன்பம் நுகர்தல் ஆகியவற்றிலேயே உழலுபவர்களிடத்தில், எந்தப் பொருளையும் ஏற்கலாகாது. 64. புலால் முதலிய தாமசகுணப் பொருள்களையும், சண்டாளர் மிலேச்சர் முதலியவர்களால் விரும்பப்படும் பொருள்களையும், அசுத்தமான பொருள்களையும், சிராத்தம் முதலியவற்றில் அளிக்கப்படும் பொருள்களையும், இறைவன்பால் அடைக்கலம் புகுந்த பிரபன்னர் புசித்தல் ஆகாது. 65. தனக்கு விருப்பமான பொருள்களையெல்லாம் இறைவனுக்கு நிவேதனம் செய்தல் கூடாது.

66. புனித நூல்கள் உண்ணத் தகுந்தவை என்று கூறும் பொருள்களையெல்லாம் இறைவனுக்கு நிவேதனம் செய்தல் வேண்டும். 67. பகவானுக்குப் படைத்த உணவு நீர் சந்தனம் மலர் தாம்பூலம் ஆகியவற்றைப் பிரசாதம் என்று கருத வேண்டுமே தவிர, நாம் அனுபவிக்கத் தகுந்தவை என்று கருதலாகாது. 68. சாஸ்திரங்கள் விதிக்கும் கடமைகளையெல்லாம் இறைவனின் முகமலர்ச்சிக்காகச் செய்வதாக நினைக்க வேண்டும். 69. பாகவதர்களிடத்தில் அபசாரப்படுவதைக்காட்டிலும், ஆத்மாவுக்குக் கேடு வேறு எதுவும் இல்லை; மோட்சத்தை அடைவதற்குப் பாகவதர்களை உவகையுறச் செய்வதைக் காட்டிலும் மேலான உபாயம் வேறு எதுவும் இல்லை. 70. பாகவதர்களை வணங்கி வழிபடுவதைக்காட்டிலும், நாம் செய்யத் தக்கது வேறொன்றும் இல்லை; பாகவதர்களிடம் துவேஷபுத்தி கொள்ளுவதைத் தவிர, ஆத்மா கெடுவதற்கு வேறு காரணம் இல்லை.

71. இறைவனின் விக்கிரகமாக வழிபடப்பெறும் திருவுருவங்களைக் கல் மரம் என்றும், ஆசாரியனைச் சாதாரண மனிதன் என்றும், ஸ்ரீவைஷ்ணவர்களை இன்ன சாதியார் என்றும், பகவத் பாகவதத் திருவடித் தீர்த்தத்தை வெறும்நீர் என்றும், இறைவனின் திருமந்திரத்தை எளிய சொற்கள் என்றும், திருமகள் கேள்வனை ஏனைய தெய்வங்களோடு ஒப்பு என்றும் நினைத்தல், நரகத்தை அடைய ஏதுவாகும். 72. இறைவனை மகிழ்விப்பதைவிட, அடியார்களை மகிழ்விப்பது சிறந்தது; இறைவனிடம் செய்யும் குற்றங்களைவிட, அடியார்களிடம் செய்யும் குற்றம் மிகவும் கொடியது. 73. பிரபன்னருக்கு ஆன்ம ஈடேற்றம் இறைவனால் நிகழ்வது ஆதலால், அது நேராததற்குத் தான் வருந்துதலாகாது; வருந்துவானாயின், இறைவன்பால் தன் ஆன்மாவை ஒப்படைத்தது பொய்யாகும். 74. பிரபன்னனுடைய உடல்வாழ்வு முன் செய்வினையின் பயனாக நிகழ்வது ஆதலால், அது குறித்துக் கவலையுறுதல் ஆகாது. கவலையுற்றால், கடவுளிடம் விசுவாசம் இல்லாதவனாவான். 75. நீங்கள் செய்யும் கடமைகளை ஏதேனும் நன்மை கருதிச் செய்தலாகாது. இறைவனின் திருவுள்ளம் உவப்பதற்காகவே செய்ய வேண்டும்.

76. ஸ்ரீபாஷ்யத்தைத் தக்க ஆசிரியன்பால் கேட்டுத் தெளிந்து, உலகத்தில் பரவச் செய்ய வேண்டும். 77. அது முடியாவிட்டால், ஆழ்வார்களின் அருளிச்செயல்களை நன்கினிது கற்றுத் தேர்ந்து மாணவர்களுக்கு உபதேசிக்க வேண்டும். 78. அது முடியாவிட்டால், எம்பெருமான் உகந்தருளிய திவ்ய தேசங்களில் திருவிமானம் திருமதில் திருமண்டபங்கள் திருவாராதன பாத்திரங்கள், திருவாபரணம் திருப்பரிவட்டங்கள், திருத்தேர் முதலிய வாகனங்கள், திருவிழா, அமுதுபடி (அரிசி), சாத்துபடி (சந்தனம் முதலிய அலங்காரம்), திருநந்தவனம், திருமாலை, திருவிளக்கு முதலிய தொண்டுகளில் இயன்றதைச் செய்ய வேண்டும்.

79. இதுவும் செய்ய இயலாவிட்டால், நமக்கு மிகவும் விருப்பமான திருநாராயணபுரத்தில் ஒரு கூரைவீடாகிலும் கட்டிக்கொண்டு வாசம் பண்ணுங்கள். 80. இதுவும் இயலாவிட்டால், பொருள் உணர்ந்து த்வயத்தை இடையறாது ஜபம் செய்துகொண்டு இருப்பிடத்திலேயே இருங்கள். 81. இதற்கும் இயலாவிட்டால், ஞானபக்தி வைராக்கியம் முதலான நற்குணங்கள் நிறைந்தவராய், நம்மைச் சேர்ந்தவர்கள் என்கிற நினைவுள்ள மகாத்மாக்களான ஸ்ரீவைஷ்ணவர்களுடன் சேர்ந்து, அகங்காரத்தை விட்டு அவர்களின் கட்டளைப்படி, பணிந்து நடந்துகொண்டிருங்கள். இதுவேதான் கடைசி உபாயம். இதைவிட வேறு உபாயமில்லை.

82. இவ்வாறு உய்திபெறுவதற்குரிய அன்பர்கள், ஸ்ரீவைஷ்ணவர்கள் ஆகிய அநுகூலர், பகவத் விரோதிகளாகிய பிரதிகூலர், உலகியல் வாழ்க்கையிலேயே ஊன்றியுள்ளவர்களாகிய அநுபயர் என்னும் மூவர் திறத்திலும், முன் எச்சரிக்கையாக ஆராய்ந்து நடந்துகொள்ள வேண்டிய முறைகள் மூன்று உண்டு. அநுகூலரான ஸ்ரீவைஷ்ணவர்களைச் சேவிக்கும்போது சந்தனம் புஷ்பம் தாம்பூலம் முதலானவற்றைப் பார்த்தாற்போலவும், விருப்பமான நற்பொருளைக் கண்டாற்போலவும் நடந்துகொள்ள வேண்டும். பிரதிகூலரான பகவத் விரோதிகளைக் கண்டால், நெருப்பு பாம்பு முதலியவற்றைக் கண்

டாற்போல அஞ்ச வேண்டும்; அநுபயரான உலக மக்களைக் கண்டபோது, விறகையும் மண்ணையும் கண்டாற்போல அசட்டை செய்ய வேண்டும்.

ஒருகால் பிரதிகூலர்கள் அநுகூலர்களானால் இரக்கமுற்று அவர்களை இனிது போற்ற வேண்டும். இவ்விதமின்றிப் பொருள் முதலியவற்றின் மீதுள்ள ஆசையினால் பிரதிகூலர் ஆன பகவத் விரோதிகளைப் போற்றினால், ஒரு பேரரசனின் மனைவி நீசனிடத்தில் பிச்சை ஏற்றால், அந்தப் பேரரசனுக்குப் பழியும் குற்றமும் உண்டாவதைப் போல, இறைவனின் திருவுள்ளம் நொந்துவிடும். பொருள்மீதும் இன்ப நுகர்ச்சிகளின் மீதும் கொண்ட ஆசையினால் அநுகூலரான ஸ்ரீவைஷ்ணவர்களைக் கண்டு வணங்காமலும் ஆதரிக்காமலும் இருந்தால், பேரரசனின் முன்பு அவனது அருமைப் புதல்வனை அவமதிப்புச் செய்தவன் தண்டிக்கப்படுவதைப் போல, இறைவனின் திருவுள்ளம் கலங்கிவிடும். உலக மக்களாகிய அநுபயரை விரும்பி ஆதரித்தால், அது பெருஞ் சுடர்மணிக்கும் வெறும் கல்லுக்கும் இடையே உள்ள வேறுபாட்டினை அறியாமை போன்ற குற்றமாகும். இதனால் எந்தவித நன்மையும் அடைய இயலாது.

முடிவுரை

இராமானுஜர் அருளிச்செய்த இனிய அருள்மொழிகளாகப் 'பிரபன்னாமிருதம்' என்னும் நூல் குறிப்பிடும் இந்த 82 திருவார்த்தைகளின் அருமை பெருமைகளை, அன்பர்கள் அனைவரும் அறிந்து பெரிதும் போற்றிக் கடைப்பிடித்து ஒழுகி, நலம் பலவும் எய்த முயலுவார்களாக! *

(381-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தீயிடை நின்று கடுந்தவம் கிடப்பதில்லை. அன்பு நெறியிலே, கைங்கரிய வழியிலே ஐம்புலன்களும் எளிதாக அகத்திலே அடங்கி ஒடுங்கிப் பணி செய்யும் பேறு பெற்றவர்கள் இந்தத் தொண்டர்கள் என்பது ஆழ்வார் திருவுள்ளம். 'காம்பறத் தலை சிரைத்து' என்ற வாக்கைக் கண்டதும், 'அது என்ன திருப்பதி மொட்டை!' என்று சற்றுப் பிரமிக்கிறோம். காம்பு அற்றுப் போகும்படி, அதாவது ரோமம் மீண்டும் முளைக்காதபடி—மொட்டையாக இருப்பார்களாம் வாழும் சோம்பர்கள். அதாவது, வேறு உபாயங்களையோ சாதனங்களையோ பற்றற விட்டுத் தொண்டு ஒன்றையே நெறியாகக் கொண்டு வாழ்பவர் இந்தச் சோம்பர்கள்.

'கடைத் தலை இருந்து வாழும் சோம்பர்' என்கிறார் ஆழ்வார். இறைவனது சந்நிதியிலே இன்றும் இருக்கிறோம், என்றும் இருக்கிறோம் என்ற உணர்ச்சியில் இவர்களால் எங்கும் வாழ முடியும் என்பது பொருள். இத்தகைய சோம்பர்கள் இறைவன் உகந்த தோழர் என்று கூறி முடிக்கிறார் தொண்டரடிப்பொடியார்.

வாழும் சோம்பர்களின் கைங்கரிய நெறியும் குறியும் தேடிவந்து அதற்குக் குருமூர்த்தியிடம் வழி கேட்டவள் சின்னியம்மை. வழிதெரியாப் பாலைவன வாழ்வில் ஒரு வழி தேடித் தவிக்கும் உண்மைச் சீடர்களுக்கெல்லாம் இவள் ஒரு நினைவுக் குறி. ஜீவாத்மாக்களை எல்லாம் பெண்களாக உவமித்துக் கடவுளைப் புருஷோத்தமனாகக் காட்டுவது பக்தி நெறி என்பது பிரசித்தம். வழிதேடி வந்தவள் குரு அருளால் தானே வழி காண்கிறாள். ★

வாசகர்களுக்கு

1980-ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஸ்ரீராமகிருஷ்ண விஜயத்தின் சந்தா விவரங்கள் மாற்றப்பட்டிருக்கின்றன. இந்த இதழ் அட்டையின் இரண்டாம் பக்கத்தில் புதிய சந்தா விவரம் கொடுக்கப்பட்டிருப்பதைக் கவனிக்கக் கோருகிறோம்.

—நிர்வாகி

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

லாரென்ஸ் எழுதிய கடிதம்


கிறிஸ்தவத் துறவி, சகோதரர் லாரென்ஸ் எழுதிய ஆன்மிகக் கருத்துக்கள் அடங்கிய ஒரு கடிதம் இது. இந்தக் கடிதத்தை அவர் சன்னியாசினி ஒருவருக்கு எழுதினுர்.

நவம்பர் 17, 1690

மதிப்பிற்குரிய அம்மா அவர்களுக்கு,

நீங்கள் உங்களுடைய துன்பங்களிலிருந்து விடுபட வேண்டும் என்று நான் பகவானைப் பிரார்த்திக்கவில்லை. ஆனுல், அவர் விரும்பும் காலம் வரையிலும் அந்தத் துன்பங்களைத் தாங்கிக்கொள்ளும் சக்தியையும் பொறுமையையும் அவர் உங்களுக்குத் தந்தருள வேண்டுமென்றே நான் அவரை மனதாரப் பிரார்த்தித்து வருகிறேன்.

சிலுவையோடு உங்களைச் சேர்த்துப் பிணைத்திருக்கும் அவரிடம் உங்கள் குறைகளைத் தெரிவித்து மன ஆறுதலுடன் இருங்கள்; அவர் விரும்பும் சமயத்தில் உங்களைத் துன்பங்களிலிருந்து விடுவிப்பார். கடவுளோடு சேர்ந்து துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள். இது போன்ற துன்பங்களைப் பொறுத்துக்கொள்ள நீங்கள் உங்களைப் பழக்கிக் கொள்ள வேண்டும்; உங்கள் நன்மைக்காக அவர் அவசியம் என்று கருதும் எவ்வளவு துன்பங்களைத் தந்தாலும், அவை எவ்வளவு காலத்திற்கு நீடித்திருந்தாலும், அவை தீரும் வரையிலும் பொறுத்துக் கொள்வதற்கு வேண்டிய ஆற்றலைத் தந்தருளும்படி அவரிடம் பிரார்த்தனை செய்யுங்கள்.



இந்த உண்மைகளை லௌகிக மனப்பான்மை கொண்ட உலக மக்கள் புரிந்துகொள்வதில்லை; அப்படி அவர்கள் புரிந்துகொள்ளாததில் ஆச்சரியமும் இல்லை. இந்த உண்மையை உணராத காரணத்தினுல் துன்பங்களை ஒரு பக்தன் ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் ஏற்றுக்கொள்ளாமல் உலக மக்கள் துன்பப்படுகிறுர்கள். அவர்கள் தங்களுக்கு வரும் நோயைக் கடவுளின் அனுக்கிரகம் என்று கருதாமல், இயற்கையாக ஏற்பட்ட ஒரு துன்பமாகக் கருதுகிறுர்கள். அவ்விதம் கருதுவதனுல் அவர்கள் அந்த நோயில் துக்கமும் கஷ்டமுமே நிறைந்திருப்பதாகக் காண்கிறுர்கள்.



ஆனுல், நோயைக் கடவுளின் திருக்கரங்களிலிருந்து வரும் பிரசாதம் என்றும், அவர் நம்மீது கிருபை கொண்டிருப்பதை உணர்த்தும் அறிகுறி என்றும், தங்களுடைய ஆத்மாவைக் கடைத்தேற்றுவதற்காக அவர் கையாளும் ஓர் உபாயம் என்றும் கருதுபவர்கள், அந்தத் துன்பத்தில் மிகுந்த இன்பத்தையும் பரிபூரண ஆறுதலையும் பொதுவாகக் காண்கிறுர்கள்.

பல சமயங்களில், நாம் நன்ருக இருக்கும் காலங்களைவிட நோய்வாய்ப்பட்டிருக்கும் காலங்களில் தான் கடவுள் நிச்சயமாக நமக்கு மிகவும் சமீபத்தில் இருக்கிறுர் என்றும், நமக்கு அதிக நன்மையை விளைவிக்கக் கூடியவராக நம்மோடு இருக்கிறுர் என்றும் நீங்கள் தெளிவாக உணர்ந்துகொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

கடவுள் உங்கள் நோயைத் தாமே குணப்படுத்த விரும்புகிறுர் என்று எனது புத்திக்குப் படுகிறது; ஆகவே கடவுளைத் தவிர வேறு வைத்தியனைத் தேட வேண்டாம். அவரிடமே உங்கள் முழு நம்பிக்கையையும் வையுங்கள். அவ்விதம் செய்வதனுல் விரைவிலேயே நீங்கள் குணமடைவீர்கள்.

நாம் கடவுளை நம்புவதைவிட மருந்து வகைகளையே அதிகமாக நம்புவதனுல்தான், நமது நோய் குண மடைவது நம்மாலேயே அடிக்கடி தாமதமாகிறது.

நீங்கள் உங்கள் நோயைக் குணப்படுத்துவதற்கு எந்த மருந்தை யார் கொடுத்துச் சாப்பிட்டாலும், கடவுள் விரும்பினுல் மட்டுமே அந்த மருந்து உங்களைக் குணப்படுத்தும். கடவுளிடமிருந்து வரும் துன்பத்தைக் கடவுளால்தான் நீக்க முடியும். நமது மனநோய்களை நீக்குவதற்காகத்தான் கடவுள் அடிக்கடி நமக்கு உடல்நோய்களைத் தருகிருர். ஆதலால், உடல்நோயையும் மனநோயையும் தீர்க்கக்கூடிய சர்வ வல்லமை படைத்த வைத்தியராகிய கடவுளிடம் பக்தி செலுத்தி நிம்மதியுடன் இருங்கள்.

கடவுள் உங்களை வைத்திருக்கும் நிலையில் திருப்தியுடன் இருங்கள். நான் எவ்வளவோ பெரிய பாக்கியசாலி என்று என்னைப்பற்றி நீங்கள் நினைத்துக்கொண்டாலும், உங்களுக்கு இருக்கும் துன்பம் எனக்கு இல்லையே என்று நினைக்கும்போது, உங்கள் மீது எனக்குப் பொருமைதான் ஏற்படுகிறது. கடவுள் என்னுடன் இருக்கும்போது நான் நோய்களையும் துன்பங்களையும் அனுபவிக்க நேர்ந்தால் அதுவே எனக்குச் சொர்க்கம் போல இருக்கும். அவ்விதமின்றி, கடவுள் இல்லாமல் நான் மட்டும் தனியே அனுபவிக்கும் மகத்தான இன்பங்களும் எனக்கு நரக வேதனையாகவே இருக்கும். அவர்பொருட்டு ஏதாவது ஒரு வகையில் துன்பப்படுவதுதான் எனக்குப் பரிபூரணத் திருப்தி தரும்.

சிறிது காலத்திற்குள் நான் கடவுளிடம் போய்ச் சேர வேண்டும்.*

கடவுள் இருப்பதை நான் பக்தியின்மூலம் பார்க்கிறேன். 'இனிமேல் கடவுள் இருக்கிருர் என்று நான் நம்ப வேண்டிய அவசியம் இல்லை; ஏனென்ருல் அவரைப் பிரத்தியட்சமாக நானே நேரில் பார்த்துக்கொண்டிருக்கிறேன்' சொல்லத்தக்க வகையில் சில சமயங்களில் நான் அவரைப் பிரத்தியட்சமாகத் தரிசித்து வருகிறேன்—இதுவே இந்த வாழ்க்கையில் எனக்கு இப்போது மன அமைதியைத் தந்து வருகிறது.

மதம் நமக்குக் கற்பித்த உண்மையை நான் இப்போது அனுபவத்தில் உணர்ந்து வருகிறேன். அந்த அனுபவம் தந்த உறுதியுடன் பக்தியை இடைவிடாமல் அனுஷ்டித்துக்கொண்டு நான் கடவுளுடன் வாழ்ந்து என் உடலை விடுவேன்.

எப்போதும் சதா சர்வகாலமும் கடவுளையே சார்ந்து வாழுங்கள். அப்படி வாழ்வதுதான், துன்பங்கள் ஏற்படும்போது அவற்றை நீக்கிக்கொள்ள உங்களுக்குக் கிடைக்கக் கூடிய ஒரே உதவியாகவும் ஆறுதலாகவும் இருக்கும்.

கடவுள் உங்களிடம் இருக்க வேண்டுமென்று நான் அவரிடம் மனதார வேண்டிப் பிரார்த்திக்கிறேன். தங்களுக்கு என்னுல் இயன்ற எல்லாவிதப் பணிவிடைகளையும் செய்யத் தயாராக இருக்கிறேன். என்பொருட்டுப் பிரார்த்தனை செய்யுங்கள்.


உங்கள் சகோதரன்

லாரென்ஸ்

* *சகோதரர் லாரென்ஸ் இந்தக் கடிதம் எழுதிய மூன்ரும் மாதம் அதாவது 12-2-1691ஆம் நாள் திங்கட்கிழமை பூதவுடல் நீத்து இறைவனடி சேர்ந்தார்.*

ஆயுள் இருக்கும்வரை உபநிஷத், ஆசார்யர், ஈசுவரன் ஆகிய இம் மூவரையும் மனதினுலும் கர்மாவினுலும் வாக்கினுலும் சேவிக்க வேண்டும். இது வேதத்தின் கட்டளை.

—தத்வோபதேசம்



தீபச்சுடர் சிறியதாக இருந்தாலும் பெரும் இருளைப் போக்கும். அது போலவே அறிவு கொஞ்சமாக இருந்தாலும் அதிகமான அறியாமையைப் போக்கும்.

—ஸ்ரீசங்கரர், ஸ்வாத்மப்ரகாசிகை

பரசிவ நாமாக்களைச் சொல்வதுதான் நாக்கு. அவருடைய உருவத்தைப் பார்ப்பவைதாம் கண்கள். அவரைப் பூஜிப்பவைதாம் கைகள். அவரை நினைப்பவன்தான் உலகில் செய்ய வேண்டிய காரியத்தைச் செய்தவன்.

—சிவானந்த லஹரி

இஸ்லாமிய ஞானி—ரபேயா

சுவாமி கருணனந்தர்

"தெய்வத்தைப் பற்றி நீ அறிந்தது என்ன?"—ஹுஸைன் என்ற முனிவர் கேட்டார்.

"தெய்வம் இப்படிப்பட்டது; இந்த வரையறைகளுடன் கூடியது என்று எவ்வாறு கூறுதல் இயலும்? எந்த ஒரு மொழியாலும் விவரிக்க இயலாத, எந்த ஓர் இலக்கணத்திற்கும் உட்படாத தத்துவமாகவே இறைவனை நான் காண்கிறேன்."—ரபேயா பதில் கூறினள்.

"வரையறைக்கு உட்படாதபோதிலும் உன்னல் வழிபட நிற்கிறதே."

"ஆம், வழிபடுகிறேன். உங்களை நான் காண்கிறேன் அல்லவா? அது போலத் தெள்ளத் தெளிய இறைவனை நான் காண்கிறேன்; ஆகவே அவனை வழிபடுகிறேன். இவ்வாறு நான் பார்க்க இயலவில்லையாயின் வழிபடவே மாட்டேன்."

"இத்தகைய முன்னேற்றம், ஆன்மிக வளர்ச்சி பெற நீ செய்த தவம் எதுவோ?"—ஹுஸைன் கேட்டார்.

"உள்ளத்தாலும் உடலாலும் உலக உடைமைகள் அனைத்தையும் துறந்துவிட்டேன். எனக்கென்று எதுவுமே கிடையாது. எனக்கென்று எதுவுமே இல்லாத இந்த நெஞ்சத்தில் இறைவன் குடியேறுவதில் வியப்பேதும் உண்டோ?"—ரபேயா தனது அநுபவத்தைக் கூறினள்.

துருக்கியில், பஸ்ஸோரா என்ற ஊரில் ஏழைப் பெற்ரோரின் மகளாக ரபேயா பிறந்தாள். நான்காவது மகள். அதனல் ரபேயா (நான்காவது) என்று பெயரிடப்பட்டாள். அவளது சிறுவயதிலேயே பெற்ரோர் இறக்க, சீமான் ஒருவனின் வீட்டில் சிறுமி ரபேயா அடிமையாக உழைக்கத் தொடங்கினள். வயதிற்கும் சக்திக்கும் மீறிய கடுமையான பணிகளில் அவள் ஈடுபடுத்தப் பட்டாள். ஒவ்வொரு நாளும் துன்பமும் சோர்வுமாகக் கழிந்தன. இனியும் இத்தகைய துன்பத்தைத் தாள இயலாது என்ற நிலை வந்தபோது, அந்த வீட்டிலிருந்து ஒரு நாள் தப்பி ஓடிவிட்டாள். நடந்து நடந்து நெடுந்தொலைவு சென்ற ரபேயா களைப்பால், பசியால் மயங்கிக் கீழே விழுந்தாள். அவ்வாறு விழுந்தபோது அவளது கையொன்று முறிவுபட்டது. எழுந்திருக்க இயலவில்லை. துணை என்று யாருமில்லை. நெஞ்சம் தவித்தது. யாரை அழைப்பது? யார் உதவி செய்வார்?



"இறைவா! நான் ஓர் ஏழை; அனதை. என கையும் ஒடிந்துவிட்டது. இன்னும் எத்தனை துன்பங்கள் வந்தாலும் சரி; எனக்கு உன் திருவடியில் அனன்ய பக்தியைக் கொடு. நான் உன் அடிமை. என்னை ஏற்றுக்கொள்."—ரபேயாவின் அடிமனத்திலிருந்து இத்தகைய பிரார்த்தனை உருக்கத்தோடு எழுந்தது. நீண்ட நேரம் அவள் அறியாமலே பிரார்த்தனையில் தோய்ந்து போனள். 'தெய்வம் மட்டுமே துணை; எனக்கு வேறு யாருமில்லை; வேறு யாரும் வேண்டாம்; தெய்வம் மட்டுமே வேண்டும்.'—இத்தகைய ஆழ்ந்த உறுதியோடு மனம் குவிந்து பக்திபூர்வமாகப் பிரார்த்தனை செய்தாள். கண்விழித்து எழுந்திருக்க முயன்ற போது அவளுள் ஒரு புத்துணர்வு பிறந்தது. 'தெய்வம் மட்டுமே சத்தியம்; தெய்வமே துணை' என்ற உறுதி அவளை ஆக்கிரமித்து நின்றது. அச்சமும் சோர்வும் அகன்றன. புதியதோர் பிறவி போன்று எழுந்தாள். பழைய யஜமானன் வீடு நோக்கி நடந்தாள்.

மறுபடியும் வழக்கம் போல் பகலில் சீமானின் வீட்டு வேலைகளைச் செய்த ரபேயா இரவு நேரங்

களில் பிரார்த்தனையில் மூழ்கினாள். சமய நூல்களைப் படிக்கவும் கற்றுக்கொண்டாள். சுற்றுச் சூழலை மறந்து, தன்னை மறந்து, கசிந்து கண்ணீர் மல்கி ஒருமனப்பட்ட உணர்வுடன் இறைவனிடம் பிரார்த்தனை செய்வதில் ஒவ்வோர் இரவும் கழிந்தது. ஒரு நாள் இரவில் ஏதோ ஒலி கேட்டு விழித்த யஜமானன் ரபேயாவின் அறையினுள் எட்டிப் பார்த்தான்.

"இறைவா! உனக்கே ஆட்பட்டு, உன்னையே தொழுகின்ற, உனக்காக மட்டுமே வாழ்கின்ற பக்தையாக எனக்கு அருள்செய். இரவும் பகலும் எந்நேரமும் உன் சந்நிதியில் நிற்கிற பாக்கியத்தைக் கொடு. பலவிதமான பணிகளையும் செய்ய வேண்டியுள்ள ஓர் அடிமை நான். உனக்கு மட்டுமே அடிமை ஆகிற நாள் எப்போது வரும்?"—ஊரெல்லாம் உறங்குகிற அமைதியான இரவில் உருகி உருகிப் பிரார்த்திக்கிற ஏழைப் பெண்ணின் பக்தி அந்த யஜமானனை உலுக்கியது. அவளது சொற்களின் ஆழமும் கனிந்த பக்தியும் சீமானைத் திடுக்கிடச் செய்தன. மறுநாள் பொழுது விடிந்தது. அவளது விருப்பம் போல் எங்கேனும் சென்று ஆன்மிக வாழ்க்கை நடத்த அனுமதி கொடுத்து வழியனுப்பி வைத்தான்.

இறைவனுக்கும் தனக்கும் இடையில் வேறு யாரும் எதுவும் நிற்காமல் உள்ளத்தை முழுமையாக இறைவனிடம் நிவேதனம் செய்கிற பக்திப் பணியில் ரபேயா மூழ்கி நின்றாள். தனிமையானதோர் காட்டுப்பகுதியில் வாழ்ந்து வந்தாள். ஆன்மிக நூல்களை ஆழ்ந்து கற்பதிலும் முனைந்தாள். அதன் பின் சிறிது காலம் ஊரையொட்டிய பள்ளி வாசல் அருகில் தன் தவ வாழ்வை மேற்கொண்டாள். அவ்வப்போது மகான் ஹுஸைன் என்பாரிடம் சென்று ஆன்மிக ஆழ்ந்த தத்துவங்கள் குறித்து உரையாடினாள். தெய்விக மலர்ச்சி பெற்ற ரபேயாவின் வாழ்க்கை, ஊராரின் வணக்கத்திற்கும் பின்பற்றுதலுக்கும் உரியதாகியது. தன்னை வந்தடைந்த பக்தர்களுக்கு வழிகாட்டி ஆன்மிக நெறியில் ஈடுபடத் துணைசெய்தாள்.

ஒரு நாள் ஹுஸைன் முனிவரால் நடத்தப் பெறுகிற சமய விளக்க உரை நிகழ்ச்சிக்குத் திரளான பக்தர்கள் வந்திருந்தனர். ரபேயா இன்னும் வந்து சேரவில்லை. அவளது வருகைக்காக முனிவர் காத்திருந்தார். நேரமாகிவிட்டதால் நிகழ்ச்சியைத் தொடங்கும்படி பக்தர்கள் வேண்டினர். அளப்பரும் பக்தியும் ஆன்மிக முதிர்ச்சியும் பெற்ற ரபேயாவின் வருகையை எதிர்நோக்கி நின்ற ஹுஸைன் முனிவர், "யானை ஒன்றிற்குப் படைக்க வேண்டியது நைவேத்தியம்; சிற்றெறும்புகளின் முன்னே சிதறுவதற்கு அல்ல" என்று கூறினார்.

வாழ்வில் நிகழ்கிற ஒவ்வொன்றும் இறைவனின் அநுக்கிரகம் என்று உணர்ந்த ரபேயா வறுமையில் வாழ்வதையே விரும்பினாள். "நீ ஏன் தெய்வத்தை வழிபடுகிறாய்?" என்று ஒரு பக்தனிடம் கேட்டாள். அவன் கூறினான்—"வாழ்க்கை வசதிகள் கிடைக்க வேண்டும். வளமான வாழ்விற்காகவே இறைவனைப் பிரார்த்திக்கிறேன்." இன்னொரு பக்தன் கூறினான்—"துன்பங்கள் என்னை அணுகக் கூடாது. அதற்காகவே இறைவனைப் பிரார்த்திக்கிறேன்."

"கோழைகள்! துன்பங்களிலிருந்து மீள்வதற்காக மட்டுமே இறைவனைப் போற்றுவோர் கோழைகள். பொருளும் சுகமும் வேண்டும் என்பதற்காகவே இறைவனை வேண்டுவோர் அடிமைகள். நீ என் இதயத்தில் குடியேற வேண்டும் என்று இறைவனுக்காக, இறைமை மலர்ச்சிக்காக, கடவுள் தரிசனத்திற்காக மட்டுமே பிரார்த்தனை செய்வதே பக்தி. உலக இன்ப துன்பங்களுக்காகப் பிரார்த்திப்பது பக்தி அல்ல" என்று உபதேசித்த ரபேயா மெக்கா நகருக்குப் புறப்பட்டாள்.

"கனிவும் அருளும் நிறைந்த இறைவன், கப்பலில் உள்ள அத்தனை பேரையும் கடலில் மூழ்கச்செய்து என்னை மட்டும் காப்பதும் அவன் திருவிளையாடல்; கப்பலில் உள்ள அத்தனை பேரையும் காப்பாற்றி, என்னை மட்டும் கொந்தளிக்கும் அலைகளின் இடையே வீசியெறிவதும் அவன் திருவிளையாடல்" என்று கூறுகிற உன்னத பக்தையாகிய ரபேயா, வாழ்வின் கடைசி நாட்களை மெக்காவில் கழித்துத் தன் உடலை நீத்து இறைமையில் ஒன்றினாள். *

காந்தியடிகளின் பொன்மொழிகள்



பொன்மொழிகள்

★ மனிதனுக்குப் பயப்படுவதை நிறுத்த வேண்டும்; கடவுளின் சத்தியத்தை மட்டும் நாட வேண்டும். இவை இரண்டையும் செய்தால் நாம் அனைவரும் கடவுளின் தூதர்களாக மாற முடியும் என்று நான் நம்புகிறேன். ஆன்மிக வாழ்க்கையின் முதல் தேவை பயமின்மைதான்.

★ கடவுளிடம் ஓரளவு நம்பிக்கை இருந்தாலும் நாம் அவரைக் காண முடியும். அவருடைய அன்பு நம்மைச் சுற்றி எல்லா இடத்திலும் பரவி இருப்பதையும் காண முடியும்.

★ தெய்வ சித்தத்தை ஒவ்வொரு மனிதனும் அறிந்துகொள்ள முடியாது. தெய்வ சித்தத்தை அறிவதற்கு வேண்டிய சக்தியைப் பெற தகுந்த பயிற்சி தேவை.

★ சூதறியாத இளம் வாலிபர்கள் விலையற்ற பொக்கிஷங்கள். அந்த பொக்கிஷங்கள் க்ஷண நேரத்தில் தோன்றி மறையும் உணர்ச்சிகளுக்கும், சுகபோகம் என்று தவறாக அழைக்கப்படும் காரியங்களுக்கும் இரையாகித் தேய்ந்து போய்விடக் கூடாது.